

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்

(1900-1915)

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்

(1900–1915)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்

(1900-1915)

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள்: 1900-1915
எழுதியது சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

© 2016, சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி.அஞ்சல்: *kumbhlk@gmail.com*
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை -600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-6

Yaalppaanaththil Paththirikaikal: 1900-1915
(Newspapers in Jaffna: 1900-1915)
by Somesasunthary Krishnakumar

© 2016, Somesasunthary Krishnakumar

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 011 2364550, E-mail: *kumbhlk@gmail.com*
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 697

ISBN 978-955-659-509-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் திருமதி சோ. கிருஷ்ணகுமார் அவர்களால் எழுதப்பட்ட 'யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் (1900-1915)' என்ற நூல் வெளிவருவதையிட்டு மிக மகிழ்வடைகிறேன். கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக வரலாற்றுத் துறையில் கடமையாற்றி வரும் அவர் நவீன வரலாற்றைத் தமது ஆய்வுப்புலமாகக் கொண்டவர். அத்தகைய பின்னணியில் நவீன வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையதான இக்கால யாழ்ப்பாணத்தவரின் சமூக, பொருளாதார, கலாசாரம் தொடர்பான பல விடயங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த சிறந்த ஆய்வு நூலாக இது அமைந்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வரங்குத் தொடரில் வாசிக்கப்பட்ட 'வட இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் (1900-1915) வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளும், அவற்றினூடாக நாம் காணும் யாழ்ப்பாணமும்' மற்றும் 'சுதேச நாட்டியம் பத்திரிகையும் கல்லடி வேலனும்' எனும் ஆய்வுக் கட்டுரைகள் இந்த நூலின் பிரதான மூலமாக அமைந்துள்ளது. இந்த இரண்டு கட்டுரைகளிலும் ஆய்வாளரின் திறமையும் பொறுமையும் ஆய்வுத்துறையில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் தகவல்களைப் பெறுவதில் அவர் காட்டிய தளராத முயற்சியும் வெளிப்படுத்தப்படுகின்றது.

வடஇலங்கை ஆரம்ப காலப் பத்திரிகைகள் பற்றிய ஆய்வாக இருந்த போதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக பொருளாதார கலாசார நிலைமைகளை எடுத்துக்காட்டும் ஆய்வாக, எந்த நூலிலும் காணமுடியாத வரலாற்றுத் தகவல்களைத் தரும் நூலாக இது அமைந்துள்ளது. அந்தவகையில் கிடைத்தற்கரிய பழைய பத்திரிகைகளைத் தேடிப்பெற்று அவற்றைப் பயன்படுத்தி, வரலாற்று மூலாதாரங்களை முன்னிலைப்படுத்தும் அவர் முயற்சி பாராட்டத்தக்கது. வரலாற்று மூலாதாரங்களாக இப்பத்திரிகைகளைப் பயன்படுத்தி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக பொருளாதார கலாசார நிலைமைகளை எடுத்துக்காட்டியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. அரசியல் நிலைமைகள் பற்றிய செய்திகள் குறைவாகவே காணப் படுவதற்கு அக்கால ஆட்சியாளர்களின் செயற்பாடுகளே காரணம் எனக் குறிப்படுவது அவதானத்திற்குரியது.

யாழ்ப்பாணத்தில் மதம் பரப்பும் நோக்கத்துடனே அறிமுகமான சுதேச பத்திரிகைகளின் தோற்றம் மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்ததோடு சுதேசிகளுக்கான அடையாளத்தையும் வாழ்க்கைப் பண்புகளையும் வளர்ச்சிப்படுத்துவதாக அமைந்திருந்தது. இவ்வகையில் கல்லடிவேலுப்பிள்ளையின் 'சுதேச நாட்டியம்' தரும் சமூக பொருளாதார கலாசார பண்புகள் யாழ்ப்பாணத்தவரின் அடையாளத்தை எடுத்துக்காட்டும் காலக் கண்ணாடியாக இருப்பதை இந்நூலிலே அவதானிக்கலாம்.

ஆசிரியரின் ஆய்வு மொழிநடை பாராட்டத்தக்கவகையிலும், தெளிவு தன்மையுடையதாகவும் அமைந்துள்ளது. வரலாற்று முலாதாரமாக பயன்படும் வகையில் வெளிவந்திருக்கும் இந்நூல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சாதாரண வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். ஆசிரியரின் இந்நூல் முயற்சி வெற்றிபெறவும், தொடர்ந்து பல நூல்களை அவர் படைக்கவும் வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

பேராசிரியர் ச. சத்தியசீலன்
வரலாற்றுப் பேராசிரியரும்
முன்னாள் உயர்பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதியும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
05.04.2016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

மனித வரலாற்றில் எழுத்தின் பயன்பாட்டினை அறிந்து கொண்ட பின்னர் இடம்பெற்ற முக்கியத்துவம் மிக்க வளர்ச்சியாக பிரதியாக்கம் செய்தல் அமைந்ததெனின், பிரதியாக்கத்தில் அச்சுத் தொழில் நுட்பத்தைப் பயன் படுத்தத் தொடங்கியமை மேலும் தாக்கம் மிக்கதாக அமைந்தது. 1439இல் ஜோகானஸ் குட்டன்பேர்க்கினால் (Johannes Gutenberg) அறியப்பட்ட அச்சுத் தொழில்நுட்பத்தின் பாவனை ஐரோப்பாவில் அளப்பரிய மாற்றங் களுக்கு வித்திட்டது. மறுமலர்ச்சி இயக்கத்தின் வியாபகம், மதசீர்திருத்த இயக்கத்தின் உத்வேகம், தேசிய அரசுகளின் உருவாக்கம், தாராண்மைவாத உரிமைகளுக்கான போராட்டங்கள் என யாவற்றிலும் அச்சுத் தொழில் நுட்பம் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இத் தொழில்நுட்பச்சித்தி சமூக மாற்றத்தில் கொண்டிருந்த காத்திரமான பங்கினைப் புலப்படுத்தும் வகையில் 'அச்சுக் கலாச்சாரம்' என விபரிக்கப்படுதல் உண்டு.

காலனித்துவ ஆட்சியாளர்கள் வருகை காரணமாக கீழைத்தேச நாடுகளிலும் அச்சுத் தொழில் நுட்பம் விரைவாக அறிமுகப்படுத்தப் பட்டதுடன் பல்வேறு மாற்றங்களுக்கும் இடமளிப்பதாயிருந்தது.

இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரலாறு பல வகையிலும் முக்கியத்துவம் மிக்கதெனலாம். கல்வி, அறிவியல், கலை, ஆக்கத்துறைகள் எனப் பல்துறைசார் முன்னேற்றங்கள் மேலோங்கியிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுச்சி பெற்ற பாடசாலைக் கல்வி முறையின் பரம்பல் காரணமாக அதிகரித்த எழுத்தறிவாளர்களின் பெருக்கம் வாசிப்புப் பழக்கம் அதிகரிக்க ஏதுவாயிருந்தது. போக்குவரத்து வசதிகளும், தொழில் வாய்ப்பு நாடியும் பிற காரணங்களுக்காகவும் பிரதேசம் விட்டு மக்கள் நகர்ந்து வாழ்ந்தமையும், வாசிப்பிற்காகவும் தகவல்களை அறிந்து கொள்வதற்காகவும் பத்திரிகைகளை நாடும் நிலை ஏற்பட இடமளித்தது. அக்காலத்தில் அதற்கு முன்னரோ, பின்னரோ இடம்பெறாத அளவுக்கு அதிகப்படியான பத்திரிகைகளும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டன.

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத்துறையின் வரலாறு பற்றி சில நூல்களும் கட்டுரைகளும் ஏற்கெனவே எழுதப்பட்டுள்ள போதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1900-1915 காலத்தில் வெளிவந்த பத்திரிகைகள் பற்றி கூடுதலாக அறிய முடிகின்ற விடயங்களை எடுத்துக்காட்டும் வகையில் இந்தக் கட்டுரைகள் எழுதப்பபட்டுள்ளன.

1900-1915 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் அதிக பத்திரிகைகள் உருவாகி வெளிவந்ததைக் காண முடிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவாகி வெளிவந்து கொண்டிருந்த சமயசார்புப் பத்திரிகைகளான 'உதய தாரகை', 'இந்து சாதனம்', 'கத்தோலிக்க பாதுகாவலன்' ஆகிய பத்திரிகைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன. புதிதாக வெளியிடப்பட்ட பத்திரிகைகள் பெரும்பாலும் பணபலமற்றவர்களால் நடத்தப்பட்ட தன்னார்வ முயற்சிகளாகவே அமைந்தன. இப்பத்திரிகை களில் சமய சார்பு நிலை அருகியிருந்ததுடன், சமூக, பொருளாதார விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

இப்பத்திரிகைகள் பல விடயங்களை உணர்த்த வல்லன. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பன்மைத்துவ நிலையைப் புலப்படுத்தும் குறியீடாக இவற்றைக் கொள்ள முடியும். கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் காட்டிய ஒழிவுமறைப்பற்ற பண்பும், தவறெனக்கருதியவற்றை சுட்டிக் காட்டும் வல்லமையும் மேலோங்கிய நிலையில் இருந்ததை அவதானிக்க முடிகிறது. அரசியற் சீர்திருத்தக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு முரண் பாடுகள் வெளிப்படாத நிலையில், அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படாத நிலை இருந்திருப்பதையும் உணரலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வெளிவந்த பத்திரிகைகளின் வரலாற்றையும், அவற்றின் பண்புகளையும் அறிந்து கொள்வது சமூகத் திற்குப் பயனுள்ளதாக அமையும். அக்குறிப்பிட்ட காலத்தில் வாழ்ந்த மக்கள் சுய ஆர்வத்துடன் தமது மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளையும் வாய்ப்புகளையும் அடிப்படையாகக்கொண்டு கருத்துக்களை வெளிப் படுத்திக் கொள்வதிலும் பரிமாறிக் கொள்வதிலும் கொண்டிருந்த ஆர்வத்தினையும், ஈடுபாட்டினையும், வெளிப்படைத்தன்மையினையும் விளங்கிக் கொள்வது புதிய தலைமுறையினருக்கு உதாரணமாகவும், வழிகாட்டலாகவும் அமையுமெனலாம்.

இச் சிறு நூலில் இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முதலாவது கட்டுரை 'வட இலங்கையில் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் (1900-1915) வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளும் அவற்றினூடாக நாம் காணும் யாழ்ப்பாணமும்' என்ற தலைப்பில் 2008 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஆய்வுத் தொடரில் சமர்பிக்கப் பட்டது. இரண்டாவது கட்டுரை ‘சுதேச நாட்டியம் பத்திரிகையும் (1902 -1915) கல்லடி வேலனும்’ என்ற தலைப்பில் ஏ.ஜே. கனகரத்தினா நினைவுப் பேருரையாக 2008 ஆம் ஆண்டு வாசிக்கப்பட்டது .

இக்கட்டுரைகளை எழுதுவதற்குப் பலரும் பல வகைகளில் அனுசரணையாக இருந்தனர். இந்த ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதற்குத் தூண்டுதல் அளித்ததுடன், கலைப்பீட அவையில் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பமளித்த முன்னைநாள் பீடாதிபதி பேராசிரியர் சோ. கிருஷ்ண ராஜா அவர்களுக்கு முதல் நன்றி. ஏ.ஜே. கனகரத்னா நினைவுப் பேருரையை ஒழுங்கமைத்த பேராசிரியர் இ. சிவச்சந்திரன் அவர்களுக்கும் நன்றி. இப் பத்திரிகைகளிற் பலவற்றை எமக்குக்கிடைக்கும் வகையில் பேணி வழங்கிய அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்கும், ஏனையவர் களுக்கும், இக்கட்டுரையாசிரியர் மட்டுமன்றி எல்லோரும் நன்றி தெரிவிக்க வேண்டியவர்களாயுள்ளோம். பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றிய திரு. தனபாலசிங்கம், திரு.பத்மநாதன் ஆகியோருக்கும் இப்பொழுது கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. இந்திரன் அவர் களுக்கும் நன்றி. இக்கட்டுரை எழுதுவதற்கும், வேண்டியபோது தமது கருத்துக்களையும், திருத்தங்களையும் கூறி உதவியதுடன் பல மூலாதாரங் களை பெறுவதற்கும் உதவிய நண்பர்கள் அ.சி. உதயகுமார், பேராசிரியர் பொ. இரகுபதி, நுண்கலைத்துறை பா. அகிலன், பேராசிரியர் எம். இரகுநாதன், கலாநிதி தா. சனாதனன் ஆகியோருக்கும், என் கணவர் இ. கிருஷ்ணகுமாருக்கும் எனது நன்றிகள்.

இக்கட்டுரைகள் எழுதப்பட்ட வேளையில் அவற்றை வாசித்து வழிப்படுத்தியதுடன் நூலாக வெளிவரும் வேளையில் அணிந்துரை வழங்கிய எனது ஆசிரியர், பேராசிரியர் ச. சத்தியசீலன் அவர்களுக்கு எனது மேலான நன்றிகள். இறுதியாக, இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய குமரன் புத்தக இல்லத்தில் உரிமையாளர் திரு. கணேசலிங்கன் குமரன் அவர்களுக்கு நன்றி.

சோமேசுந்தரி கிருஷ்ணகுமார்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
someskrish@gmail.com
05.03.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

அணிந்துரை v

முன்னுரை vii

1. வட இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளும் அவற்றினூடாக நாம் காணும் யாழ்ப்பாணமும் (1900 - 1915) 1

2. சுதேசநாட்டியம் பத்திரிகையும் (1902 -1915) கல்லடி வேலனும் 47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கையில் வெளியிடப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளும், அவற்றினூடாக நாம் காணும் யாழ்ப்பாணமும் (1900 - 1915)

வட இலங்கைத் தமிழர்களின் அறிவுப் பாரம்பரியமும், இலக்கிய ஆர்வமும் புதிய விடயமல்ல. அச்சுக் கலையின் அறிமுகமும், கல்வி அறிவைப் பகிர்ந்து கொள்வதிலான ஆர்வமும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து பரவலான அளவில் இடம் பெற்றது. அச்சுக்கலையின் வருகை காரணமாக, வட இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டு வாழ்வில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் இடம்பெற்றிருந்தன.

வட இலங்கை மக்களின் அறிவுப் பரிமாற்றம், தகவல் பரிவர்த்தனை ஆகியவை பற்றிய அதிகப்படியான தகவல்கள் பேணப்படவில்லை என்றே கூறவேண்டும்.

பண்டைக் காலத்தில், முரசறைதல், மணியடித்தல், சங்கொலி எழுப்புதல், இழவு சொல்லுதல், சில நாட்டார் பாடல்களைப் பாடுதல் எனப் பல்வேறு செயற்பாடுகள், வெவ்வேறு வகைகளில் சில குறிப்பிட்ட செய்திகளை ஒலியூடாக அறியக்கொடுக்கும், அறிவிக்கும் வடிவங்களாக இருந்துள்ளன. கோயில், மடம் என்பவைகளில் கூடிப் பேசுவதானது, ஒலியூடாக செய்திப் பரிமாற்றலுக்கும், அறிவுப் பகிர்வுக்கும் அன்று பயன்பட்டன. மட்பாண்டக்கீறல்கள், கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள், ஓலைச் சுவடிகளின் பயன்பாடு என்பவை, எழுத்து, மற்றும் குறியீடுகளுடான குறுகியகால, நீண்டகாலப் பயன்பாட்டிற்கான அறிவுப் பகிர்வுக்கும், செய்தி பரப்புகைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றைவிட பிரதேசத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும், பல்வேறு பட்ட விடயங்களை ஏனைய இடங்களுக்கு காவிச்செல்லும் வகையில், பிரதேசங்களுக்கிடையில் காணப்பட்ட முக்கியமான இடங்களில் அமைக் கப்பட்டிருந்த மடங்கள் செயற்பட்டிருந்தன. வழிப் பிரயாணிகளும், கால் நடைகளும் தங்கி, இளைப்பாறி, தாகம் தீர்த்து, வேண்டிய போது ஓய்வெடுத்துச் செல்லும் வகையில், இத்தகைய மடங்கள் வட இலங்கை யெங்கும் பரவலாக அமைக்கப்பட்டிருந்தன. இவ்வாறான மடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய ஆய்வொன்றில், யாழ்ப்பாணத்து மடங்கள் பற்றிய பல்வேறு விடயங்களும், ஆராயப்பட்டுத் தொகுத்து எழுதப்பட்டுள்ளதுடன், அவற்றின் தற்கால நிலையும், ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[1]

போக்குவரத்துச் சாதனங்களின் அபிவிருத்தியினதும், அச்சுக்கலையின் அறிமுகத்தினதும் காரணமாக, அறிவுத் துறையிலும், அறிவு, தகவல் ஆகியவற்றின் பரிமாற்றத்திலும் புரட்சிகரமான மாற்றங்கள் இடம் பெற்றன. அத்தகைய நிலையின் உச்சத்தினை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் காணமுடிகிறது.

அச்சுக்கலை வருகையுடன், வட இலங்கையின் ஒரு சாரார் சைவ சித்தாந்த நூல்கள், மற்றும் சமய நூல்கள், பண்டைய தமிழ் இலக்கியங்கள், இலக்கண நூல்கள் போன்றவற்றை வெளியிட்டனர். இன்னொரு சாரார் பத்திரிகைகள், சஞ்சிகைகளை வெளியிட்டனர். இவற்றுள் முன்னைய விடயம் பற்றிய பெருமளவு தகவல்கள் ஏற்கெனவே வெளிச்சத்திற்கு வந்துள்ளன. ஆனால், பின்னைய விடயம் பற்றிய தகவல்கள் முழுமையாக வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அவை பற்றி எழுதப்பட்டுள்ள நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றில் ஆராயப்படவேண்டிய முக்கிய விடயங்கள் ஆராயப்படாத நிலையும், வழுக்களும் காணப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, 1900ஆம் ஆண்டு வரையிலான பத்திரிகைகளுக்கும், 1900ஆம் ஆண்டு தொடக்கம் 1930ஆம் ஆண்டு வரையில் வெளிவந்த பத்திரிகைகளுக்கும் இடையில், குறிப்பிடத்தக்க அளவு வேறுபட்ட தன்மைகள் காணப்படுகின்றன. 1900ஆம் ஆண்டு தொடக்கம் 1930ஆம் ஆண்டு வரையில் வெளிவந்த பத்திரிகைகளுள்ளும், 1900ஆம் ஆண்டு தொடக்கம் 1915ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியிலேயே அதிகப்படியான பத்திரிகைகள் வெளிவந்திருந்தன. ஆனால் அக்கால கட்டத்திற்குரிய பத்திரிகைகளின் பிரதிகளில் சிலவற்றையே யாழ்ப்பாணத்தில் பெறக் கூடியதாக உள்ளது. 1915ஆம் ஆண்டின் பின், 1930 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் வெளிவந்த பத்திரிகைகளுள், 'இந்துசாதனம்' போன்ற பத்திரிகைகளைத் தவிர பிறவற்றைக் காண முடியாதுள்ளது. 'சுதேச நாட்டியம்' பத்திரிகையின் சில பிரதிகளை மட்டுமே பெறக் கூடியதாக உள்ளது. 1930 ஆம் ஆண்டில் 'ஈழகேசரி' என்ற பத்திரிகை வெளிவரத் தொடங்கியது. அப்பத்திரிகை பற்றிய ஆய்வுகள் பல்வேறு கோணங்களிலும் செய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE HINDU ORGAN.

இந்துசாதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



THE

Hindu Organ

VOL. 6. | JAFFNA, WEDNESDAY | இந்துசாதனம். | NO 1

PUBLISHED EVERY OTHER WEDNESDAY.

ACKNOWLEDGMENT

NOTICE.

DISTRICT COURT OF JAFFNA.

was any attempt [illegible] le to justify the libel. It was not denied [illegible] the complainant in the case was the Edi[illegible] of the Hindu Organ. It was also proved [illegible] the Declaration made by the accused, a co[illegible] ed copy of which was produced in evidence [illegible] at the first accused was the Proprietor of [illegible] Guardian and the second accused the Pr[illegible] and Publisher of that Paper. This was a[illegible] ted by the accused in their statements, altho[illegible] Father Maurot pleaded that he was only the [illegible] cal Proprietor for the Mission and Andrew [illegible] sentiment by saying that he published the article complained of not knowing that it [illegible] a libel, as he could not read and write [illegible] English language. The law as to the crim[illegible] liability of the Printer and Publisher [illegible] y of all manner of doubt: and the P[illegible] is criminally responsible unless it is pro[illegible] nat he exercised proper care and caution [illegible] the management of his paper. A[illegible] Maurot's statement went to show th[illegible] was grossly negligent in the man[illegible] ment of the Guardian, which he under[illegible] his Declaration to "print and publish as [illegible] prietor." It was a startling proposition, [illegible] Mr. Justice Withers observed, [illegible] and Publisher of a [illegible] and stated that [illegible] language in which he publish[illegible] The Declaration is intended [illegible] hold the makers of it responsible for any [illegible] matter appearing in their paper. The acqu[illegible] and the Printer of the "[illegible]" by the special Jury composed of six [illegible] two Tamils, and one Mahommedan [illegible] no value is hereafter to be attached to the [illegible] which is required by Ordinance No. [illegible] of 1839 to be made before a news paper is printed and published in Ceylon.

It is possible that the Jury were influenced by the specious arguments of the learned Counsel for the defence to the effect that the [illegible] the Hindu Organ, and that the [illegible] the last paragraph of [illegible] showed that it re[illegible] It was not denied as we [illegible] the Guardian libelled the [illegible] Hindu Organ [illegible] present Editor of the Hindu [illegible] against whom were

fair and impartial trial here. But exp[illegible] has proved that it was possible to have [illegible] composed almost exclusively of non-Hind[illegible] cording to the list published in the Gove[illegible] Gazette of the 8th ultimo half the num[illegible] Special Jurors for Jaffna are Hindus, ye[illegible] were only six Hindus out of the [illegible] jurors cited to try this case. With fou[illegible] challenges on each side, the jury before [illegible] this case went was composed of on[illegible] Hindu who is an officer of the Jaffna K[illegible] one Mahommedan who is also a K[illegible] Officer, and seven Christians. We allude [illegible] facts simply to show that the alarm rais[illegible] accused as to the predominance of the [illegible] in the jury box was without any just [illegible] foundation, and tended greatly to [illegible] the prosecution in the eyes of the public.

It cannot be denied, even by our [illegible] that morally the victory is ours and [illegible] Guardian has not come out of the p[illegible] with flying colours. False [illegible] having been made and reiterated a[illegible] in the columns of the Gu[illegible] were obliged to criminally prosecute [illegible] whom we at that time believed to be [illegible] ing had means in proving [illegible] by only Proprietor, Manager, an[illegible] persons on the staff of the "Gu[illegible]" as our witnesses, in the belief that eith[illegible] evidence would lead to the detec[illegible] punishment of the actual writer of [illegible] rilous article complained of, or some [illegible] would be come to by the unqualif[illegible] drawal of the imputations against us [illegible] of the Guardian. Any one with a [illegible] manliness, or sense of justice an[illegible] about him will agree with us that [illegible] dian should have either apologised t[illegible] wrong it has done us, or the wri[illegible] article should have come forward a[illegible] his imputations. Neither the one n[illegible] was done. On the 17th October last [illegible] case first came on for investig[illegible] Police Court a settlement was p[illegible] we obtained a postponement for [illegible] that month on the understanding [illegible] traction of the imputations would [illegible] in the "Guardian" of the 20th of [illegible] and that we should, if that be de[illegible] our case. No retraction was, how[illegible]

Hindu Organ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Jaffna Cholic Guardian.

,த்தோலிக்கு பாதுகாவலன்.

PUBLISHED EVER[Y SA]TURDAY MORNING.

JAFFNA, SATURDA[Y N]OVEMBER 27TH, 1880. NO. 40

St. Mary's English Female School 15 00

" Vernacular do 10 00

Amount previously acknowledged 2,376 41

Total Rs. 2,469 15

CALENDAR

Local and General.

Telegraphic Summary.—

...cal discourses, in which the subject was handled with great simplicity of style and with special reference to the actual work they had to do.

Notes from Batticotta.—

New Missionaries.—

Dr. M. Candiah.— ... He is one of the Colombo Medical Schoolmen, a Jaffna Tamil, Candyah by name. The coolies like him very much indeed and have confidence in him. He is an exceedingly intelligent man, and in every way fit for his position, physically as well. He is very well liked among Europeans.

Ostrich Farming.—

கத்தோலிக்கு பாதுகாவலன் - **The Jaffna Cholic Guardian**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1900ஆம் ஆண்டு தொடக்கம் 1915ஆம் ஆண்டு வரையிலான பத்திரிகைகளைப் பிரதானமாக இக்கட்டுரையின் கவனத்திற்கு எடுத்தமைக்கான காரணம், அக்காலகட்டத்தில் பெருமளவிலான பத்திரிகைகள் தொடங்கி நடத்தப்பட்டமையும், அப்பத்திரிகைகள் வாயிலாக, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நிலவிய சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை விளங்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதுமேயாகும்.

1915ஆம் ஆண்டு தொடக்கம் 1930 வரையிலான காலப்பகுதியில், பத்திரிகைகள் அதிக அளவில் கிடைக்காது போனமைக்கு, பத்திரிகைகள் அதிகமாக வெளியிடப்படாது போனமையும் ஒரு காரணமாக அமையலாம். இவ்வாறு பத்திரிகைகள் வெளியிடப்படாது போனமைக்கு அக்காலத்தில் முதலாம் உலகப்போர் ஆரம்பித்தமையும், இலங்கையில் சிங்கள - முஸ்லிம் கலகம் இடம்பெற்றமையும் காரணங்களாக இருக்கக்கூடும். இவை ஆதாரங்கள் கிடைக்கும் பட்சத்திலேயே உறுதிப்படுத்தப்படக் கூடியதாகும்.

கிறிஸ்தவ மிஷனரிமார்களால் மதம் பரப்பும் நோக்குடன் கொண்டு வரப்பட்ட அச்சுத் தொழில் நுட்பம், வடஇலங்கையில் விரைவாகவே பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்தவ மிஷனரி மார்கள் தமது மதம் சார்ந்த துண்டுப் பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிட்டதுடன், பிற மதங்களை விமர்சித்தும் துண்டுப் பிரசுரங்களையும், நூல்களையும் வெளியிட்டு வந்துள்ளனர். தமது மதச் செல்வாக்கினை விஸ்தரிக்கும் நோக்கில், அவர்கள் பத்திரிகைகளையும் வெளியிடத் தொடங்கினர். 1834 ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரிகளின் அச்சகமொன்று மானிப்பாயில் நிறுவப்பட்டது. 1841ஆம் ஆண்டில் முதலாவது தமிழ்ப் பத்திரிகையையும் வெளியிட்டனர். அப்பத்திரிகை மதப்பரப்புதலை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட போதிலும் உலகியல் சார்ந்த விடயங்களிலும் கவனம் செலுத்தத் தவறவில்லை.[2] அந்த வகையில் மிஷனரிமார்களின் மத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிய ஆறுமுக நாவலரும், பிறரும், அச்சுக்கலையினைக் கிறிஸ்தவ மதப்பரப்புகைக்கு எதிரான பிரசாரங்களை மேற்கொள்ளும் சாதனமாக ஒருபுறத்தில் பயன்படுத்தினர். மறுபுறத்தில், இதுவரை காலமும் ஓலைச் சுவடிகளிலிருந்த புராதன தமிழ் இலக்கியங்களையும், சைவ சமய நூல்களையும் பரிசோதித்து பதிப்பிப்பதிலும் ஈடுபட்டனர். ஒரு புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நேசன் - **The Lanka Snahan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்.

உதயபானு.

திருச்சிற்றம்பலம்.

THE SIVITE RISING SUN.

சோமவாரங்கள் தோறும் பிரகடனஞ் செய்யப்படும்.

பல்லுயிரு மொன்றிநிறைந்தோங்கி இலகுஞ்சிவ னெம்மிறை.

புத்தகம். யாழ்ப்பாணம். இலக்கம். க.

உதய பானு - **The Sivite Rising Sun**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பத்தை பழமையையும், மரபையும் பேணிப்பாதுகாக்கும் வகையில், வட இலங்கையின் முன்னோடிகளாகவும் காத்திரமாகவும் செயற்பட்டனர்.

1863இல் வைமன் கதிரைவேற்பிள்ளை 'Ceylon Patriot' என்ற பத்திரிகையை ஆரம்பித்து நடாத்தி வந்தார். இது, சமய சார்பற்ற வகையிலே நடத்தப்பட்டவொரு ஆங்கிலப் பத்திரிகையாகக் காணப்பட்டதெனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அது நீண்ட காலம் தொடர்ந்து வெளிவந்த பத்திரிகையாகவும் விளங்கியது. இதனைத் தொடர்ந்து, 1876இல் கத்தோலிக்கத் திருச்சபையால் 'கத்தோலிக்க பாதுகாவலன்' என்ற பத்திரிகை வெளியீடு ஆரம்பித்திருந்தது.

'இலங்கை நேசன்' Lanka Snakan என்ற பத்திரிகை ஆறுமுக நாவலர் காலத்தில் வெளிவந்தது. 'உன்னை அறி, உன் முடிவினைச் சிந்தை செய்' என்ற மகுட வாசகம் தாங்கியதாக உள்ளது. 1878ஆம் ஆண்டில் இரண்டாம் புத்தகத்தின் தொகுதி குறிப்பிடப்பட்டு இருப்பதால், இது 1877ஆம் ஆண்டில் வெளியிடப்படத் தொடங்கியிருக்க வேண்டும். இப்பத்திரிகையின் சிதைவடைந்த பத்திரிகைத்துண்டுகளில் ஒன்றில், ஆறுமுகநாவலரின் மரணம் பற்றிய அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.[3]

'சைவ உதய பானு' என்ற பத்திரிகை, 1881ஆம் ஆண்டில் வெளி வந்திருந்தது. அதில் உதய சூரியன் படம் அச்சிடப்பட்டுள்ளதுடன், 'The Saivite Rising Sun' என ஆங்கிலத்திலும் பெயர் அச்சிடப்பட்டுள்ளது. அப்பத்திரிகையில், 'சோம வாரந் தோறும் பிரகடனஞ் செய்யப்படும்' எனவும் எழுதப்பட்டிருந்தது.[4] இப்பத்திரிகை சைவப்பிரகாச சமாசீயத்தவர்களால் வெளியிடப்பட்டது. சு. சரவணமுத்துப்பிள்ளை இதற்கு ஆசிரியராக இருந்துள்ளார். சைவப்பிரகாச சமாசீயமானது, சைவ பரிபாலன சபைக்கு முற்பட்டதாகும்.

1884இல் எஸ். தம்பிப்பிள்ளை என்ற தனிநபரால், 'சன்மார்க்க போதினி' என்றவொரு பத்திரிகை வெளிவரத் தொடங்கியிருந்தது.. இது, அச்சுவேலியில் அமைக்கப்பட்டிருந்த ஞானப்பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது. இது ஒவ்வொரு மாதத்திலும், ஒன்றுவிட்டொரு சனிக் கிழமை வெளிவந்தது.[5] இப்பத்திரிகை நீண்ட காலம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

1884ஆம் ஆண்டில் 'விஞ்ஞானவர்த்தனி' என்ற பத்திரிகை வெளி யிடப்பட்டது. அதன் பெயர் ஆங்கிலத்திலும் 'The Intellectual Preceptor' எனப் பொறிக்கப்பட்டிருந்தது. இப்பத்திரிகையின் மகுட வாக்கியமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஞ்ஞானவர்த்தனி.

THE

INTELLECTUAL PRECEPTOR.

தக்கன் வேள்விப் போக்கந் தீர்ந்த மிக்க தேவர் பக்கத் தோமே.

விஞ்ஞாபனப்பிரகரணம்.

சாத்திரப்பிரகாணம்.

விஞ்ஞானவர்த்தனி - The Intellectual Preceptor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தக்கன் வேள்விப் பொக்கந் தீர்த்த தேவர் பக்கத்தோமே' என எழுதப் பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஒவ்வொரு மாதத்திலும் முதலாம் திகதியிலும், பதினைந்தாம் திகதியிலும் வெளிவந்ததென அறிய முடிகிறது. இக் காலத்தில் வெளியிடப்பட்ட ஏனைய பத்திரிகைகளிற் காணப்பட்டது போலவே, இப்பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும் வருடம், மாதம் ஆகியவை தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன. எனினும், இங்கு பொறிக்கப்பட்டுள்ள காலம், பக்கங்கள், இதழின் எண்ணிக்கை பற்றிய இலக்கம் ஆகிய யாவும், தமிழ் இலக்கங்களாகவே உள்ளன. இந்தோ அராபிய எண்களின் பிரயோகம் அக்காலத்தில் பெரிதும் பாவனைக்கு வரவில்லை. இப்பத்திரிகை ஆசிரியர்களுக்கு வாசகர், மற்றும் பொதுவான விடயங்கள் பற்றி கடிதம் எழுதுவோர்களின் கடிதங்களும் பிரசுரிக்கப்பட்டன. எனினும் இவ்வாறு கடிதம் எழுதுவோர் பத்திரிகைகளில் வேறு பெயர்களைப் பயன்படுத்த விரும்பினாலும், பத்திரிகை ஆசிரியருக்கு தமது சொந்தப் பெயரை அறியப்படுத்துவது அவசியமாக இருந்தது. இப்பத்திரிகை வண்ணைநகர் மெய்ஞ்ஞானப் பிரகாச யந்திரசாலையில் அச்சிடப்பட்டது என்பதும், அதன் பொறுப் பாளராக மு. மூத்ததம்பிச் செட்டியார் என்பவர் செயற்பட்டிருந்தார் என்பதும், அப்பத்திரிகை வாயிலாக அறிய முடிகிறது.[6] இதில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் கட்டுரைகளை எழுதியிருந்தார் என்பதையும், சி.வை. தாமோதரம்பிள்ளை இப்பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றினார் எனவும் பிற ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன.[7]

1889இல் 'இந்து சாதனம்' என்ற பத்திரிகையும் வெளிவரத் தொடங்கியது. ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும், பின்னர் தமிழிலும் அது வெளிவந்தது. ஆங்கிலக்கல்வி பெற்ற உயர் வகுப்பினரின் முயற்சியால் சைவ பரிபாலன சபை எனும் சபை அமைக்கப்பட்டு, அச்சபையின்கீழ் இப்பத்திரிகை வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை இப்பொழுதும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாகிய பத்திரிகைகளில், இந்து சாதனம் பத்திரிகையைக் கண்டிக்கும் வகையில் கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

1910 -1915 காலத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. அப்பத்திரிகைகளுள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ओं

THE DRAVIDA KOKILA



PUBLISHED ON THE 1st 11th AND 21st OF EVERY MONTH.

NON NOBIS NASCIMUR WE [illegible] NOT BORN FOR OURSELVES.

JAFFNA: SATURDAY 1 SEPTEMBER 1900. 15

DRAVIDA KOKILA.

... SEPTEMBER 1, 1900.

[illegible]

...ntion at Paris is to be ... number of congresses ... all the various ... modern civili... relating to philosophy ... ever we have been ... the exhibition of the ... so arranged that ... to follow the actual ... cies of production or ... est beginnings to its ... tion, as previous ... the installation of a ... logical reunions for ... these branches of ... it to the world in ... of the knowledge ... accumulated in their ... by side with the ... es of the direct anth...

and eclat at the World's Exposition at Chicago; and since the year 1896, when the Rev. John Henry Barrows was passing through Paris, several meeting have been held with this purpose in view. But no such convention made up of representatives of all the churches and religious convention made up of representatives of all the churches and religious confessions was ever admitted among the official congresses of the Exposition.

Doubtless [illegible] would enthusiastically [illegible] the alternative plan of dispensing together with the official sanction of the Exposition and of organising their religious congresses upon an entirely independent basis; but a second and far more formidable obstacle definitively frustrated their good intentions on this point. It was the formal refusal of the Catholic church to take any part whatever in a conference of such a character. This was the really deciding factor. In a country like France where the great majority of the people are, at least in name, professedly Roman Catholics, a parliament of religions in which no authorised representatives of Catholicism took part would be doomed to failure from the start. It is a remarkable fact that the same Catholic church which, in America, agreed to take a leading part in the Parliament of Religions at Chicago, ...

the characteristically modern method (that is to say, the scientific method) of reaching an adequate appreciation of the different religions, namely, to study them by the same methods of critical observation which we employ in reaching an objective knowledge of any of the other manifestations of the spiritual activity of humanity? Is not the science of religions the real modern theology, and that destined to take the place of the ancient theology [illegible] founded [illegible] and Christianity been its [illegible] to make most and [illegible] important contributions every day to the knowledge of past humanity, and to throw the light of steadily increasing brilliancy on moral and social problems?

These forcible considerations did not fail to carry weight with the General Committee empowered to institute the congresses of the Universal Exposition; and the professors of the Department of Religious sciences in the Ecole des Hautes Etudes at the Sorbonne were accordingly authorised to form a committee of organisation for an International Congress of the History of Religions under the presidency of M. Albert Reville, professor of the history of religions in the College de France. They soon obtained the concurrence of a large number of prominent persons of the Parisian scientific world, without distinction of religious ...

திராவிட கோகிலம் - The Dravida Kokila

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தன், சுதேச நாட்டியம், திராவிட கோகிலம், விஜயபானு, குருசந்திரோதயம், சைவ சூக்குமார்க்க போதினி, விஜயலட்சுமி, மகா விஜயலட்சுமி, விஞ்ஞான வர்த்தினி, ஆத்மபோதினி, சண்முகநாதன், பால பாஸ்கரன் போன்ற பத்திரிகைகளின் சில பிரதிகளையேனும் இக்கட்டுரை ஆசிரியரால் நேரடியாகப் பார்க்க முடிந்துள்ளது. அந்த வாய்ப்பின் அடிப்படையிலேயே, இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

மேலும், இக்காலப்பகுதியில் கலியுகவரதன், இந்து பாலபோதினி, சைவபால்ய சம்போதினி, ஞானப்பிரகாசம், ஞானசித்தி, லங்கா போன்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்தன என்ற தகவலும் அறியக்கிடக்கிறது. ஆனால், இந்தப் பத்திரிகைகள் எவையும் கட்டுரையாசிரியருக்குக் கிடைக்கவில்லை. இப்பத்திரிகைகளுள் சில, குறிப்பிட்ட சில காலம் வெளிவந்த பின்னர் மறைந்து போயின.

இந்தப் பத்திரிகைகள் சில, மாதப் பத்திரிகைகளாகவும் சில, மாதத்தில் இரண்டு தடவை, மூன்று தடவை, நான்கு தடவை என்ற கால எல்லையிலும் வெளியிடப்பட்டன. இப்பத்திரிகைகளை வெளியிட்டவர்கள், அவர்களின் வெளியீட்டு முறைமை ஆகியவை, 19ஆம் நூற்றாண்டில் வெளிவந்த பத்திரிகைகளிலிருந்து வேறுபட்ட தன்மை கொண்டவையாகக் காணப்பட்டன.

‘திராவிட கோகிலம்’ (The Dravida Kokila) என்ற பத்திரிகை, வண்ணார் பண்ணை மேற்கை முகவரியாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ளது.[8] இப்பத்திரிகையானது, 1900ஆம் ஆண்டில் அதனது முதலாவது தொகுதியை யாழ்ப்பாணத்திலும், 1902ஆம் ஆண்டில் இரண்டாவது தொகுதியிலிருந்து கொழும்பிலும் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இப் பத்திரிகையின் முதலிரண்டு பக்கங்கள் தமிழிலும், பின் இரண்டு பக்கங்கள் ஆங்கிலத்திலும் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ‘திராவிடர்’ என்ற சொற்பிரயோகம் இந்த கட்டுரையின் காலஎல்லைப் பகுதிக்குள் வேறுபட்ட அர்த்தங்களில் கையாளப்பட்டுள்ளது. இப் பத்திரிகையில், ‘ஆரியர்’ என்ற பதத்திற்குப் புறம்பாகத் தமிழ் மக்களின் புராதனப் பெருமை மிக்க நாகரிகமாக திராவிட நாகரிகமும், தமிழ் மொழியும் கொள்ளப்பட்ட ஒரு வேளையில், இது தென் இந்திய, இலங்கைத் தமிழர்களைக் குறிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்டிருக்கலாம். இதே காலப்பகுதியில், 1893ஆம் ஆண்டிலிருந்து பிரெஞ்சு இந்தியாவின் காரைக்காலில் இருந்து ‘திராவிட மந்திரி’ (The Tamil Counselor) என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதேச நாட்டியம் - The Jaffna Native Opinion

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு பத்திரிகையும் வெளிவந்தது.[9] இதேபோன்று, சென்னையை முகவரியாகக் கொண்டு 'ஆரிய ஜனப்பிரியன்' (Arya Jana Priya)[10] என்ற பத்திரிகை 1895இல் வெளியிடப்பட்டிருந்தமையும், இங்கு சொல்லப்பட்ட கருத்துக்கு வலுச்சேர்ப்பனவாயுள்ளன. 'திராவிட கோகிலம்' பத்திரிகை, மாதம் மும்முறை வெளியிடப்பட்டிருந்தது.

கல்லடி வேலுப்பிள்ளையால் நடத்தப்பட்ட 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகை 1902ஆம் ஆண்டு தொடக்கம் பிரசுரமாகத் தொடங்கியது. இது யாழ்ப்பாணத்தவர்களின் சுதேச அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் எண்ணம் கொண்டதாய் The Jaffna Native Opinion என்ற ஆங்கிலப் பெயரைக் கொண்டு வெளிவந்தது. 'கல்லடி வேலன்' என அக்காலத்தைய சாதாரண மக்களுக்கும் நன்கு அறியப்பட்ட ஒருவராக இருந்தவர் கல்லடி வேலுப்பிள்ளை. இவர் 'ஆசுகவி' எனவும் அறியப்பட்டடிருந்தார். மக்கள் மத்தியில் இவரது சிலேடை ஆற்றலும், கவிதைகளும் பரவியிருந்தன. அச்சுக் கலையைச் சற்று வித்தியாசமான முறையில் கையாண்டவர் என்பதும் சமூக விடயங்களில் நரஸ்துதிக்கும், நரநிந்தனைக்கும் சற்றுத் துணிச்சலோடு அதனைப் பயன்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவர் வயாவிளானில் சொந்தமாக அச்சியந்திரசாலை ஒன்றை வைத்திருந்ததோடு, பத்திரிகைகளையும், ஏனைய பல நூல்களையும் ஆக்கி, அச்சிட்டு, வெளியிட்டிருந்தார். 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' (1921)[11] என்ற அவரது நூல் பலராலும் அறியப்பட்ட ஒன்றாகும். அக் காலத்தில், தமக்குப் பிடித்த விடயங்களையும், பிடிக்காத விடயங்களையும் எழுதி, அச்சிற்பதித்து வெளியிட்டுள்ளதையும் அறிய முடிகிறது. அத்தகைய வெளியீடுகளுள் 'அழகம்மா கும்மி', 'இரகசிய நூல்' என்பவை குறிப்பிடத்தக்கவை.

கல்லடி வேலனின் 'சுதேச நாட்டியம்' பத்திரிகை நீண்ட காலம் தொடர்ந்து வெளிவந்த ஒரு பத்திரிகையாகவும் இருந்துள்ளது. அவர் சிறை இருந்த காலத்திலும், பத்திரிகை வெளிவந்து கொண்டிருந்தது. அக்காலத்தில் அவரின் கீழ் பத்திரிகையில் பணியாற்றிய நல்லதம்பி என்பவர் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தியிருந்தார்.

அவரது பத்திரிகைகளின் சில பிரதிகளை மட்டுமே இன்று பெறக் கூடியதாக உள்ளது. அவற்றில் மொழியை மிகவும் சுட்டிப்பான முறையில் பயன்படுத்தியிருப்பதையும், பிற விதமாகப் பயன்படுத்தியிருப்பதையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Singapore ... 1 50
In advance ... 1 75
Single Copies ... 10

THE
VIVEKANANDA.
விவேகாநந்தன்.

PUBLISHED FORNIGHTLY ON MONDAYS.

VOL. 1. | JAFFNA: Monday November 10, 1902. | NO. 23

THE VIVEKANANDA

JAFFNA MONDAY NOVEMBER 10, 1902.

THE JAFFNA VIVEKANANDA SABHAI.

We hail with delight the inauguration of the Jaffna Vivekananda Sabhai, which happy event took place on [illegible] with [illegible] bungalow of the Vannarpannai Vivekananda School under the management of the proprietor, Vivekananda Press. We publish elsewhere the proceedings in extenso and heartily congratulate those earnest gentlemen who have been the prime movers of this extremely useful and praiseworthy undertaking.

The Swami, our Patron, was the greatest Hindu of modern India. He loved India, as no other Indian did, and made her respected throughout the world. His countrymen can never forget the service he did to the cause of their religion and philosophy at the Chicago Parliament of Religions. We feel proud that India produced him, and her title to a place of honour in the pages of history has been considerably enhanced by the activities of the Swami whose memory deserves to be cherished with the utmost reverence and love. The Swami's sole business of life was to teach [illegible], the highest system of philosophy, taught in the Upanishads, the Brahma Sutras, and the Bhagavat Gita. He believed implicitly in the religion of his ancient [illegible]. His religion knew no caste, no creed, colour, and his philosophy knew no systems dogmas. With the same breath and the same [illegible] he praised the Brahma of the Hindus, the Buddha of the Buddhists, the Jehova of the Jews and the Father in heaven of the [illegible]. He despised no religion and no [illegible] of worship. His motto was "Help and [illegible] fight, Assimilation and not Destruction, Harmony and Peace and not Dissension." And [illegible] we perpetuate his memory in any [illegible] better manner than by trying in our own [illegible] to follow his noble example and [illegible] the work from which he was [illegible] greatest [illegible] under his [illegible] all over the Island [illegible] One [illegible] already [illegible] by the ed[illegible] [illegible] We earnestly hope that [illegible] will [illegible] and we beg to [illegible] the [illegible] of these several [illegible] Societies.

I. That the society [illegible] should be [illegible] by the [illegible] [illegible] has not yet [illegible] It [illegible] be made so representative as to command the respect and cordial co-operation of branch societies to be established in the capital towns of the several provinces.

II. If possible there ought to be a recognised organ of the Society in which ought to be published, in the English and Tamil languages the lectures delivered at the different centres. If funds will not permit this, at least a monthly pamphlet embodying these [illegible] each society to be sold at the lowest possible rate of subscription to those who can afford to pay for it, and to be distributed free to all Hindu students and boys.

III. That at least in every important centre of the Island a Vivekananda *Mutt* or *Madam* should be erected and put under the charge of a Swami of the Ramkrishna Mission whose services could be easily secured at a trifling cost from India. The building may serve not only as a residence for the Swami but as a lecture room and library in which all Hindu religious books may with advantage be kept.

IV. That the work of propagating the Vedanta Mission should be undertaken with true spirit of humility and earnest devotion. The petty jealousies and self aggrandisements which unhappily beset all our undertakings, [illegible] they commercial, political or religious, should be avoided as utterly unworthy of ourselves, and our Swami's precept "that to work we have every right but not to the fruits thereof" should be ever remembered. Let us have him as our ideal. Though he was a humble Sannyasin his personality was such that even crowned heads would not hesitate to bow down. He was truly a prince amongst men. Let us then follow his footsteps and our work shall ever be blessed.

HINDUISM AS A RELIGION

WHAT IT IS AND WHAT A UNIVERSAL FAITH MUST BE

Swami Vivekananda, of India, presented a paper on the Hindu faith, in which he said:

Three religions stand now in the world which have come down to us from time prehistoric—Hinduism, Zoroastrianism and Judaism. These all have received tremendous shocks and all of them prove by their survival their internal strength. But while Judaism failed to absorb Christianity and was driven out of its place of birth by its all-conquering daughter, and a hundred thousand Parsis are all that are left to bear witness to their grand religion, sect after sect has arisen in India and seemed to shake the religion of the Vedas to its very foundations, but like the waters of the seashore in a tremendous earthquake it receded only for a while, again to return in an all-absorbing flood, and when the tumult of the rush was over these sects were all sucked in, absorbed, and assimilated in the immense body of the mother faith.

From the high spiritual flights of philosophy, of which the latest discoveries of science seem like echoes, from the atheism of the Jains to the low ideas of idolatry and the multifarious mythologies, each and all have a place in the Hindu's religion.

Where then, the question arises, where then is the common centre to which all these widely [illegible] Where is the common basis upon which all these seemingly hopeless contradictions rest? And this is the question which I shall attempt to answer.

ABOUT THE VEDAS.

The Hindus have received their religion through the revelation of the Vedas. They hold that the Vedas are without beginning and without end. It may sound ludicrous to this audience how a book can be without beginning or end. But by the Vedas no books are meant. They mean the accumulated treasury of spiritual laws discovered by different persons in different times. Just as the law of gravitation existed before its discovery and would exist if all humanity forgot it, so it is with the laws that govern the spiritual world; the moral, ethical and spiritual relations between soul and soul, and between individual spirits and the Father of all spirits, were there before their discovery and will remain even if we forget them.

The discoverers of these laws are called Rishis, and we honor them as perfected beings. I am glad to tell this audience that some of the very best of them were women.

Here it may be said that these laws as laws may be without end but they must have had a beginning. The Vedas teach us that creation is without beginning or end. Science has proved to us that the sum total of the cosmic energy is the same throughout all time. Then, if there was a time when nothing existed, where was all this manifested energy? Some say it was in a potential form in God. But then God is sometimes potential and sometimes kinetic, which would make him mutable, and everything mutable is a compound, and everything compound must undergo that change which is called destruction. And thus God would die. Therefore, there never was a time when there was no creation.

DIVINE EXISTENCE

Here I stand and if I shut my eyes and try to conceive my existence, "I," "I," "I," what is the idea before me? The idea of a body. Am I then, nothing but a combination of matter and material substances? The Vedas declare, No! I am a spirit living in a body. I am not the body. The body will die, but I will not die. Here am I in this body and when it will fall still will I go on living. Also I had a past. The soul was not created from

விவேகாநந்தன் - The Vivekanada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU BALA BODHINI.

மாதம் ஒருமுறை இருபதாந்தேதிதோறும் பிரசுரிக்கப்ப

இந்துபால போதினி - The Hindu Bala Bodhini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சூக்குமார்த்த போதினி.

SAIVA SOOKUMARTHA POTHINI.

சைவ சூக்குமார்த்த போதினி - **Saiva Sookumartha Pothini**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருசந்திரோதயம்

The Gurusandrothayam.

மாசமிருமுறை குருவாரங்களில் பிரகடனமாகும்

குருசந்திரோதயம் - The Gurusandrothayam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது பத்திரிகையில் காலனித்துவ அதிகாரிகளையும், அக்கால சமூக நிறுவனங்கள், பிரமுகர்கள் ஆகியோரையும் பற்றிய செய்திகளில் இப்பண்பு இழையோடியிருப்பதைக் காணலாம். பத்திரிகைகளில் அவரது கவிதைகள் பிரசுரமாகியிருந்தன. இரண்டாவது இதழில் வந்த தொடக்கக் கவிதை இவ்வாறு உள்ளது:

சுகந்தா நிதியந்தா தூய திடநெஞ்
சகந்தா செய கந்தா வையா - செகந்தாவி
யாடுமயி லேறிவிளை யாடசுர ரோடுசம
ராடுகுக வாறுமுக வா.

1904ஆம் ஆண்டில் இருந்து, 'விவேகானந்தன்' (The Vivekaananda) என்ற பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கியிருந்தது.[12] இதன் முதலாம் பக்கமும், நான்காம் பக்கமும் ஆங்கிலத்திலும், இரண்டாம், மூன்றாம் பக்கங்கள் தமிழிலும் விடயங்களைத் தாங்கியவையாக அமைந்துள்ளன. விவேகானந்தரின் போதனைகளால் ஊக்கம் பெற்றவர்கள், யாழ்ப்பாணத் திலும் விவேகானந்த சபையை நிறுவியதுடன், பாடசாலை, அச்சுயந்திர சாலை, ஆகியவற்றையும் ஆரம்பித்திருந்தனர்.

'சைவ சூக்குமார்த்த போதினி' என்ற பத்திரிகை மாசமொருமுறை சுக்கிர வாரத்தில் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை வேலணையில் இருந்து வெளியிடப்பட்டது. வேலணை மேற்கு, ஊர்காவற்றுறை முகவரி யில் அமைந்திருந்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்த செ. கனகசபாபதிப்பிள்ளை என்பவரால் இப்பத்திரிகை நடத்தப்பட்டது.[13]

'ஆத்மபோதினி' என்ற பத்திரிகையானது, 1907ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்தது. இப்பத்திரிகையின் ஆசிரியர், மற்றும் பிற விடயங்கள் பற்றி அதிகம் விபரங்கள் கிடைக்கவில்லை. இது, வாரப் பத்திரிகையாக, மாதம் நான்கு தடவைகள் பிரதி திங்கட்கிழமைகளில் வெளிவந்திருந்தது. கீழைத்தேச தேசிய உணர்வும், ஐரோப்பிய நாகரிக மேலாதிக்கத்திற்கு எதிரான உணர்வும் இப்பத்திரிகை வரிகளில் தென்பட்டன.[14]

'குருசந்திரோதயம்' என்ற பத்திரிகை மாசமிருமுறை குரு வாரங் களில் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகையின் பத்திராதிபராக வ.மு. இரத்தினேசுவர ஐயர் செயலாற்றியிருந்தார். இப்பத்திரிகை எஸ்.ஏ. செல்வதுரைப்பிள்ளை என்பவரால் திருமகள் விலாச யந்திரசாலையில் இருந்து வெளியிடப்பட்டது. 1910ஆம் ஆண்டில் இப்பத்திரிகையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயலட்சுமி

மாதம் இருமுறை

பூரணை அமாவாசைகளில் பிரசுரிக்கப்படும்.

விஜயலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகநாதன்

SANMUKANATHAN.

மாசமிருமுறைப்பிரகடனமாகும்.

அறிவிப்பு

சண்முகநாதன் - Sanmukanathan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

மஹா

விஜயலக்ஷ்மி

Maha Vijiyalakshmi.

இது வெள்ளிக்கிழமைகளில் பிரசுரிக்கப்படும்.

விரோதிகிருது ஆனிமீ வெள்ளிக்கிழமை.

விளம்பர வேதனம் ரூ. ச

அறிவிப்பு

மஹா

விஜயலக்ஷ்மி

மஹா விஜயலட்சுமி - **Maha Vijiyalakshmi**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது தொகுதி வெளி வந்த காரணத்தினால், இப்பத்திரிகை 1907 ஆம் ஆண்டில் இருந்து வெளிவந்திருக்க வேண்டும்.[15]

1910ஆம் ஆண்டு வைகாசி மாதத்தில் இருந்து 'விஜயலட்சுமி' என்ற பத்திரிகை வெளிவந்தது.[16] இது பூரணை, அமாவாசை ஆகிய திதிகளை மையமாகக் கொண்டு மாதமிருமுறை பிரசுரிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பூரணை திதியில் மாதமொருமுறை மட்டும் பதிப்பிக்கப் பட்டுப் பின்னர் கையொப்ப நேயர்களின் விருப்பப்படி, மாதமிருமுறை பிரசுரமாகியதாக பத்திரிகை மூலம் அறிய முடிகிறது. இப்பத்திரிகையின் ஆசிரியர் சு. முருகேசபிள்ளை என்பதும், அவர் சோதிட வல்லுனர் எனவும் அறிய முடிகிறது.[17] இப்பத்திரிகையின் முகவரி திருநெல்வேலி கிழக்கு, கொன்றலடி வைரவஸ்வாமி கோயில் வடக்கு வீதியில் அமைக்கப் பட்டிருக்கும் 'சரவணபவ' வித்தியாசாலை என அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் மானேஜராக இ.சி. வினாயகமுதலியார் செயற்பட்டிருந்தார். இவர் யாது காரணத்தனாலோ விஜயலட்சுமி பத்திரிகையை விட்டு விலகினார். 'விஜயலட்சுமி' பத்திரிகை தொடர்ந்து சில காலம் சு. முருகேசபிள்ளையால் நடத்தப்பட்டது. அவர் தமது பத்திரிகைக் காரியாலயத்தை கடற்கரைத்தெரு, சீதாரி, யாழ்ப்பாணம்., என மாற்றிக் கொண்டர். அத்துடன் பத்திரிகையில் வெளியிட்ட அறிவிப்பில், ''இ.சி. வினாயகமுதலியை, சில தவறுகள் காரணமாக இப்பத்திரிகையினின்றும் நீக்கி விட்டோம். இவ்விஜய லட்சுமிப் பத்திரிகையைப் போல அவர் ஒரு பத்திரிகையைத் தொடங்கி நடத்து கிறார்.'' என எழுதப்பட்டுள்ளது.[18]

1910ஆம் ஆண்டு மாசி மாதத்தில், 'மஹாவிஜயலட்சுமி' என்ற பத்திரிகை வெளி வந்துள்ளது. இப்பத்திரிகையின் மகுட வாக்கியமாக 'பொங்கு தமிழ்ச் செல்வப் பொருள் வளரப் புங்கமல மங்கைபத மெப் பொழுதும் வாழ்த்து' என்ற சொற்றொடர் எழுதப்பட்டுள்ளது. இப் பத்திரிகை செங்குந்தர் வீதி, திருநெல்வேலி கிழக்கை முகவரியாகக் கொண்ட இ.சி. வினாயகமுதலியார் என்பவரால் நடத்தப்பட்டது.[19]

'சண்முகநாதன்' என்ற பத்திரிகை நல்லூரில் இருந்து வெளியிடப் பட்டது. இப்பத்திரிகையில் தமிழ்த் திகதி பதியப்பட்டுள்ள அதேவேளையில், இந்தோ அராபிய எண்களிலும் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மாச மிருமுறை பிரகடனமாகும் எனப் பத்திரிகையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. 1911 ஆம் ஆண்டில் ஜூன் மாதத்தில் வெளிவந்த 'மஹா விஜயலட்சுமி' இதழில் 'சண்முகநாதன்' வெளியிடப்படுவதற்கான விளம்பரம் வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய பானு - **Wijayabhanoo**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகியுள்ளது. இதனால் அப்பொழுது 1911இல் வெளிவரத் தொடங்கி யிருக்கவேண்டும்.[20] சண்முகநாதனில் இந்து சாதனம் பத்திரிகையின் குறைகளைச் சுட்டிக் காட்டி எழுதியிருந்ததுடன், சரவணமுத்துப் புலவர் என்பவருக்கு நியாயமாக நடக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்பட்டிருந்தது. சரவணமுத்துப் புலவரின் ஆளுமையையும், ஆதங்கத்தையும் வெளிப்படுத்தும் நீண்ட சுய நியாயக் கடிதம் ஒன்றும் வெளியாகி இருந்தது.[21]

'விஜய பானு' (Wijayabhanoo) என்ற பத்திரிகையின் நான்காவது புத்தகம் 1916இல் வெளியிட்ட பிரதி காணமுடிகிறது. இது 1912 ஆம் ஆண்டில் வெளியாகத் தொடங்கியிருந்தது எனக் கொள்வதற்கு இடமுள்ளது. இப் பத்திரிகையின் வெளியீட்டுத் திகதி, பத்திர விகிதம் போன்ற விடயங்கள் யாவும் இந்தோ அராபிய எண்களாலே குறிப்பிடப் பட்டிருப்பதுடன், அது முன்னைய பத்திரிகைகளில் இருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது.

'பால பாஸ்கரன்' என்ற பத்திரிகை அக்காலத்தில் வெளியிடப்பட்ட (பெரும்பாலும் வட இலங்கையில் வெளியிடப்பட்ட முதலாவது) தமிழ்த் தினசரிப் பத்திரிகையாக அமைந்துள்ளது. இப்பத்திரிகையின் தொடக்கம் பற்றித் தெளிவாக அறிய முடியாதுள்ளது. 1915ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வந்த பத்திரிகையை ஒன்றைக் காண முடிந்தது.[22] அப்பத்திரிகை வி.எஸ். ஸ்ரீபதி என்பவரால், ஸ்ரீ பாஸ்கர அச்சுயந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. திங்கட்கிழமை தவிர்ந்த அனைத்து நாட் களிலும் பத்திரிகையை பெறமுடியும் எனப் பத்திரிகையில் அச்சிடப் பட்டுள்ளது. இந்தப் பத்திரிகையின் ஒரேயொரு பிரதியை மட்டும் பார்க்க முடிந்தது. அதுவும் பரீட்சார்த்தமாக வெளியிடப்பட்ட பத்திரிகை ஆகும். அதாவது பத்திரிகை 1915 ஒக்டோபர்மாதம் ஏழாம் திகதியிலிருந்து வெளியிடுவதற்குத் தயார் செய்யப்பட்டது. ஆயினும் முன்னதாகவே பத்திரிகை வெளிவரத் தொடங்கிவிட்டது. 'விளம்பரங்களைச் சேர்ப் பதற்கும், வேலைக்காரர்களைப் பயிற்றுவிப்பதற்கும் சில மாசங்களுக்கு முன்னதாகவே பிரசுரஞ் செய்யப்படலாயிற்று' என நியாயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இக்கட்டுரையாசிரியரின் பார்வைக்குக் கிட்டிய பத்திரிகை செப்ரெம்பர் 15ஆம் திகதியில் வெளியாக்கப்பட்டிருந்தது. இது தவிர இப்பத்திரிகையில் 'ரசிகாநந்தர்' என்ற தொடர் கதையும் பிரசுரமாயிருந்தது. அத்தலைப்பின் கீழ் 'ஓர் தமிழ் நாவல்' என எழுதப்பட்டுள்ளது. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலின் மூன்றாம் அத்தியாயம் மேற் குறிப்பிட்ட பத்திரிகையில் காணப் படுகிறது.

1927இல் தாழ்த்தப்பட்டவர்களின் பத்திரிகையாக 'திராவிடன்' என்ற பத்திரிகை வெளிவரத் தொடங்கியிருந்தது. வட இலங்கைத் தொழிலாளர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் 'சமரசவாதி' என்ற பத்திரிகையையும் வெளியிட்டிருந்தனர். பஞ்சகம்மியர்கள் ஒருங்கிணைந்து 'பஞ்சகத்தி' அல்லது 'பஞ்சகம்மிய பரிபாலணி' என்ற பத்திரிகையையும், தெல்லிப் பழை தாழ்த்தப்பட்டோர் சபையைச் சார்ந்தவர்கள் 'ஜன தர்மபோதினி' என்ற பத்திரிகையையும் வெளியிடத் தொடங்கினர். யோவல்பவல் (English) என்பவரை ஆசிரியராகக் கொண்ட 'ஜனதர்ம போதினி'யில் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கான கட்டுரைகள் இடம்பெற் றிருந்ததாக அறிய முடிகிறது. 1920களின் பின்னர் பிரதேச அடிப்படையில் அல்லாது தேசிய அளவிலான தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகள் வெளி யிடப்பட வேண்டியது அவசியம் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வந்தது.[23]

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறை பெற்றிருந்தபங்கும், உச்சநிலையும் மிகவும் முக்கியத்துவம் மிக்கனவாயுள்ளன. பல அச்சுயந்திரசாலைகள் யாழ்குடாவில் நிறுவப் பட்டிருந்தன. பல நூல் விற்பனை நிலையங்களும், வாசிகசாலைகளும் நிறுவப்பட்டிருந்தன.[24]

பத்திரிகை வெளியீட்டாளர்களின் தன்மையும் நோக்கங்களும்

பொதுவாக எல்லாப் பத்திரிகை வெளியீட்டாளர்களும் வர்த்தக விளம்பரங் களின் உதவியுடனும், கையொப்பகாரரின் உத்தரவாதத்துடனும், பத்திரிகை களை ஆரம்பித்து நடத்தியுள்ளனர். ஒருவர் தாம் வெளியிடப்போகும் பத்திரிகையை நடத்துவதற்கு, வசதிமிக்க சிலரின் உதவியை நாடி, அவர்கள் பணம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டு வந்துள்ளனர். சம்பந்தப்பட்டவர்களுக்குத் தமது பத்திரிகைகளை அனுப்பி வைத்தபின், அவர்கள் ஒப்புக்கொண்டவாறு பணத்தை வழங்காமை காரணமாகப் பத்திரிகையாளருக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தமது சொந்தப் பத்திரிகைகளிலேயே வெளியிட்டு இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

'சுதேச நாட்டியம்' பத்திரிகையும், கையொப்பப் பத்திரிகையாகவே தொடங்கி நடத்தப்பட்டது. அப்பத்திரிகை தொடங்கப்பட்டதன் நோக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி, அதனாசிரியர் முதலாவது பத்திரிகையில் பின்வரும் வகையில் குறிப்பிட்டுள்ளார்:

‘நாமிப் பத்திரிகையை ஒருவரைத் தூஷிக்கும் நோக்கமாயல்ல, எமது நயத்துக்காகவும், பிறர்க்கு விஷேச சற்புத்திகளையும், நூதன சம்பவங் களையும், பிற தேச வர்த்தமானங்களையும் அறிவிக்கும் நோக்கமாகவுமே தொடங்கினோம்’[25]

கல்லடி வேலுப்பிள்ளை தமது பத்திரிகை நோக்கை வெளிப்படையான வகையில் கூறியிருப்பது இங்கு அவதானிக்கத்தக்கது. அப்பத்திரிகையின் இரண்டாவது பிரசுரத்தின் முதற் பக்கத்தில் எழுதப்பட்டிருந்த கோரிக்கை, பின்வருமாறு அமைந்திருந்தது. அக்காலப் பத்திரிகைகள் பற்றிய சில தகவல்களை இதன் மூலம் பெறக்கூடியதாக இருப்பதால், அதனை இங்கே தருகிறேன்:

‘அடியேம் மேல் அன்பகலாத நண்பீர்! எமது பத்திரிகையின் கையொப்ப நண்பர் எமது பத்திரக்கிரயத்தை முந்தக்கட்டாததினாலும், எமக்குப் பிறவுர்க்குச் செலவழிந்து போம் பத்திரத் தொகை சுமார் முறை ஒன்றுக்கு 1500 வரையில் இருப்பதாலும், இத்தொகைய பத்திரத்தை ஒரு வருடம் அனுப்பும்போது அதினால் எமக்கு முத்திரைக்கு வருஞ் செலவு சுமார் வருடம் ஒன்றுக்கு 750 ரூபா வரையில் வருதலானும், முதன்முறையில் இத்தொகைய முத்திரைத் தொகையை எம் கைப் பொறுப்பிற் செலவிட்டு அனுப்ப நாம் ‘கொதி பொறாத நொய்யரிசி’ நிலையினமாயிருத்தலானும் எழுந்த எமது ஆற்றாமையால் முதல் வருடத்துக்கு அப் பொறுப்பை உங்கள் மேற் சுமத்தி முத்திரை ஒட்டாது அனுப்ப யோசித்து அவ்வழியை அனுட்டித்தேம். பத்திரிகா விகிதத்தில் ஒவ்வோரிடங்களுக்கும் குறித் திருக்கும் தொகையைக் காணலாம். முத்திரைச்செலவு உங்களுக்கு 2சதத்திற்கு 4சதமும், 3சதத்திற்கு 6 சதமுமாய் இரட்டிப்பதால் அத் தொகையைத் தள்ளி வருமதியாயிருக்கும் எஞ்சிய தொகையை முற்பண மாயனுப்பி விடும்படியும், அவ்வாறனுப்பப்படும்போது முத்திரைச் செலவை நாம் பொறுப்பது கூடியதாயிருக்கும் என்பதையும், மிக்க வேண்டுதலோடு உங்களுக்கு அறியத் தருகின்றேம். ‘எனக்குத் தம் பத்திரிகை அனுப்பவேண்டும் அதை ஆவலோடு எதிர்பார்த்திருக் கின்றேன்’ என இதுவரையில் அவ்வவ்விடங்களிலிருந்து ஏறக்குறைய 350 பெயர் வரையில் தம் விலாசத்தை அனுப்பினர். அவர் போலவே மற்றைய நண்பரும் தேடி எமது பத்திரிகையை வாங்குவரென்பது எமது பூரண சித்தாந்தம்.’[25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மபோதினி - Atmabodhini

'ஆத்ம போதினி' என்ற பத்திரிகையில் பத்திரிகை நேயர்களைப் பற்றியும், பத்திரிகைகள் பல தொடர்ந்து வெளிவர முடியாது போவதற்கான காரணம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கள் கவனிக்கத்தக்கதாயுள்ளது. அத்துடன் பத்திரிகை வாசிப்பதன் பலாபலன்களும் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இப்பத்திரிகையும், கையொப்ப ஒப்பந்த அடிப்படையில் நடத்தப்பட்டது. இது பற்றிய விளம்பரம் அதே பத்திரிகையில் காணப் படுகிறது. அது, பின்வருமாறு:

> 'தேசாபிமானிகளும், பத்திரிகாபிமானிகளும் கட்டாயம் கவனிக்க வேண்டியது. ஒவ்வொரு ஊர்களிலும் நமது பத்திரிகைக்குப் பத்துக் கையொப்பகாரர்களைச் சேர்த்துக் கொடுப்போருக்கு ஒரு பத்திரிகை வாரந்தோறும் இனாமாக அனுப்பப்படும். ஐந்து கையொப்பகாரர் களைச் சேர்த்துக் கொடுப்போருக்குப் பாதித் தொகையிற் பத்திரிகை அனுப்பப்படும்.'[27]

விஜயபானு பத்திரிகை பத்திரிகை நேயர்களைப் பற்றியும் பத்திரிகைகளின் ஆயுளைப் பாதித்த காரணிகளைப் பற்றியும் கூறியுள்ள கருத்துக்களும் நமக்குப் பயனுள்ளவையாக அமைகின்றன.

> '...நமது கையொப்ப நேயர்களாயுள்ளாருட் பலர் பெருந்தனவந்தராயும், உத்தியோகத்தர்களாயும், வியாபாரிகளாயும், கமக்காரர்களாயுமிருக்க மிகச்சிலரே மிக்க தனவந்தர்களாயில்லாது முட்டின்றி போதிய வருமானத் தையுடையவர்களாக விருக்கின்றார்கள். நமது பத்திரிகைக் கையொப்ப நேயர்கள், தேசத்தவர் நன்மை கருதிப் பத்திரிகையை ஆதரிப்பார்க ளென்னும் முழு நோக்கத்துடனேயே நாம் பத்திரிகையை நடாத்த முயன்றோம். பொதுவாய்ப் பத்திரிகைகள் நடைபெறாது இடையிலழிவது பல சாரார்க்கும் பொதுவாயில்லாமையாலென்பதையுணர்ந்து, நாம் பல சாரார்க்கும் பொதுவானதாய் நடந்துகொள்வோமேயானால் சகல சாராராலும் நமது பத்திரிகை அங்கீகரிக்கப்படுமெனவும், ஆதரிக்கப் படுமெனவும் முழுதும் நம்பியே எவ்வித பேதமுமின்றி சகல சாதியார்க்கும் சகல சமயத்தாவருக்கும் பொதுவாய் இப்பத்திரிகையை நடாத்த எத்தனித் தோம். நமது பத்திரிகையிடையிடையே தடைப்பட்டது கையொப்ப நேயர்கள் தமது கையொப்பப் பணத்தை வருஷக்கணக்காய் நிலுவையில் வைத்திருந்தமையாலும், போதிய உத்தியோகத்தர்களை வைத்து வேலை களை நடத்துவதற்குப் போதிய பணமின்மையாலும், நாமே தனிமையில் சகல வேலைகளையும்'[28]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சோமம்] [பிரசுரமாகும்

பாலபாஸ்கரன்

கவனியுங்கள் கவனிங்கள்.

பூரணிவைத்திய முறை அறிவித்தல்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை

சாஷிபு, வைத்தியா

பாலபாஸ்கரன் - **Balabhaskara**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சண்முகநாதன்' எனும் பத்திரிகையில் தமது பத்திரிகையின் போஷகர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்து: சிறீமான் நா. இராமலிங்கம (பிரபல வைத்தியர்), த. இளையதம்பி (வியாபாரம்), நா. சின்னத்தம்பி (பிரபல வைத்தியர்), ஆகியோர் நிதி உதவி வழங்கினர். இன்னும், இப்புண்ணியவான்களைப் போலச் சைவாபிமானிகள் உதவிபுரிவார்களாகில் பத்திரிகை தளர்வுறாது நடக்குமென்பது எமது சித்தம். மேற்படி கூற்றிலிருந்து, பத்திரிகை நடத்துவதற்குத் தனிப்பட்டவர்களின் நிதியுதவிகளும் கிடைத்திருப்பதை அறிய முடிகிறது.

'பால பாஸ்கரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியர், பத்திரிகையின் நோக்கத்தினையும், தனது நிலையினையும் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது:

> 'ஒருவனுக்கு எழுத்தறிவிப்பது விஷேச கருமமென்ற அபிப்பிராயம். ஓர் வறியவனால் இது நடத்தப்படுகிறது. இவனுக்குத் தனதென்று சொல்ல இப்பூமியின் கண்ணே ஓரடி நிலமுமில்லை. பைசாவும் ஒன்று கூடக் கையிலில்லை. அப்போதப்போது சம்பாதித்து வயிறு வளர்ப்பவன். இவனது முன்னோர்கள் வறுமையே பெருமையாக நினைப்பவர்கள். இதனால் இவனுக்கும் இதே அபிப்பிராயம்.' என்றவாறு அமைந்திருந்தது.

'பாலபாஸ்கரன்' எனும் பத்திரிகை பற்றி, 'சண்முகநாதன்' என்ற பத்திரிகையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் கவனத்தைக் கவர்வனவாக உள்ளன:

> '....நாள் விகிதமாகப் பிரசுரித்து வெளிப்படுத்தப்பட்டு வரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை. இதிலே அரிய பல விஷயங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ், ஆங்கிலம் என்னும் இரு பாஷைகளிலும் இவ் யாழ்ப்பாணத்தில் பல பத்திரிகைகள் நடைபெற்று வரினும், நாள் விகித பத்திரிகையாக நடைபெறுவது இதொன்றேயாம். இதிலே வெளிப் படுத்தப்படும் விஷயங்களை கூர்ந்து யோசிக்கும் பொழுது, இதன் அதிபர் பல துறைகளிலும் பயின்றுள்ள ஒருவர் போலப் புலப்படுகின்றார். இப்படிப்பட்ட பத்திரிகையைத் தக்க துணையில்லாதவர் ஒரு காலத்தாவது துணிந்து தொடங்கவே மாட்டார். இது நெடுக நிலையாகத் தொடர்ந்து வருமேயாயின் நமது ஊருக்கு நன்மையேயாமென்பதற்கு யாதுஞ் சந்தேகமில்லை. அங்ஙனமேயாக நடைபெற்று வருமாறு கடவுள் துணை புரிவாராக.'[29]

ஆரம்பக்காலத்தில் பத்திரிகை வெளியிடுவது என்பது, ஆங்கிலம் கற்றவர்களின் செயற்பாடாகவே இருந்தது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தில அதிகளவு பயிற்சி இல்லாதவர்களும், தமிழில் குறிப்பிடத்தக்களவு அறிவுள்ளவர்களும் பத்திரிகைகள் நடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் எனக் கருத முடிகிறது. அவர்களுக்கு அச்சு வசதியும், விளம்பர வசதியும், ஓரளவு கையொப்ப நண்பர்களும் இருந்தால் போதுமானதாக இருந்தது. இக்காலத்துப் பத்திரிகைகளில் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் மீது இவர்கள் கொண்டிருந்த அதிருப்தியும்,ஆங்கிலக் கல்வி மீதான அதிருப்தியும் அடிக்கடி வெளியிடப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பத்திரிகை வெளியீட்டினைப் பார்க்கும் போது, பெரும்பான்மையான பத்திரிகைகள் வலிகாமப் பகுதியிலிருந்துதான் வெளியிடப்பட்டிருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

பொதுவாகக் கூறினால், இப்பத்திரிகைகளின் விற்பனை யாழ் குடா நாட்டிற்கு உட்பட்ட வகையில் அன்றி, இலங்கையின் ஏனைய பகுதிகள், பிரித்தானிய இந்தியா, பிரெஞ்சு இந்தியா, தென்கிழக்காசியா (பர்மா, சிங்கப்பூர், தொடுவாய் நாடுகள்) ஆகிய இடங்களுக்கும், நேத்தாலுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. தோராயமாகப் பார்க்கும் போது, 2000 பத்திரிகைகள் வரையில் பத்திரிகை விநியோகம் இடம் பெற்றிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது (சில பத்திரிகைகள்).

பத்திரிகைகளின் உருவமைப்பும் உள்ளடக்கமும்

இந்தக் காலத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளில் பெரும்பாலானவை உருவ அமைப்பில் பெருமளவுக்கு ஒத்த தன்மையுடையனவாக உள்ளன. இவைகள் வெளியிடப்பட்ட காலத்தில் இந்தியாவில் வெளியிடப்பட்ட பத்திரிகைகளிலும் பல அதே உருவ அமைப்பைக் கொண்டனவாக உள்ளன. பத்திரிகைகளில் முதற் பக்கத்திலேயே விளம்பரங்கள் அச்சிடப்பட்டுள்ளன. சில பத்திரிகைகளில் முதற்பக்கம் முழுவதுமே விளம்பரங்களால் நிறைக்கப்பட்டிருந்தது. எல்லாப் பத்திரிகைகளும் இப்போது போல பத்திராதிபர் நோக்கினை வெளியிட்டிருக்கவில்லை.

இப்பத்திரிகைகளில் மத்திய காலத்தில் ஐரோப்பாவில் வெளியிடப் பட்ட நூல்களில் காணப்படுவது போன்று, பத்திரிகைகளின் பெயர் குறிப்பிடும் முதற்பக்கத்தின் மேற் பகுதி மிகவும் அலங்காரமான முறையில் செய்யப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. 1881இல் வெளியிடப்பட்ட 'சைவ உதயபானு' பத்திரிகையில் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதப் பட்டுள்ள பத்திரிகைப் பெயர்கள் அத்தகைய அலங்கார எழுத்துக்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டுள்ளமையைக் காணமுடியும். இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதிக்குரிய பத்திரிகைகளில், பத்திரிகையின் பெயரை விளக்கும் வகையிலான படங்கள் வரையப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. குறிப்பாக 'குருசந்திரோதயம்' பத்திரிகையில், குரு. சந்திரன் ஆகிய தேவர்களின் உருவங்களும், சேவல், மயில் ஆகியனவும், தாவரங்களும் வரையப்பட்டுள்ளன. வர்ணங்கள் பத்திரிகைகளை ஆக்கிரமிக்காத ஒரு கால கட்டத்தில் - கறுப்பு வெள்ளையில் பத்திரிகைகள் வெளியிடும் போது, தமது பத்திரிகைகளை அச்சு ஊடகத்தில், மனதைக் கவரும் வகையில் வெளியிட்டிருப்பதும், அதற்கான வழிமுறைகளைத் தேடியிருப் பதும் ஆச்சரியமூட்டுவதாயுள்ளது. இத்தகைய முயற்சிக்குத் தென் இந்திய தொடர்பு உதவியிருக்கக்கூடிய அதே வேளையில் உள்ளூர்க் கலைஞர்கள் வளர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொதுவாக எல்லாப் பத்திரிகைகளும் பிற தேச வர்த்தமானங்களை வழங்குவதில் கவனம் செலுத்தியிருந்தன. காபுல் யுத்தம், ருஷ்ய மாற்றங்கள், ஜப்பானில் வெளிநாட்டுப் பொருட்களின் தீர்வை அதிகரிப்பு, இந்திய தேசிய காங்கிரஸின் செயற்பாடுகள் எனப் பல தரப்பட்ட விடயங் களும் செய்திகளாகப் பதியப்பட்டுள்ளன. பிரித்தானிய நாட்டு விடயங்கள், பிரித்தானிய சாம்ராஜ்ய விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. பிரித்தானிய அரசர், மகாராணி ஆகியோரின் முடிசூட்டுவிழா, ஆரோக்கியம் பற்றிய விடயங்கள் விசுவாசத்துடன் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் சமயம், மொழி சார்ந்த கருத்துப் பரிமாறல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இப்பத்திரிகைகள் வட இலங்கை மக்களின் சமகால அரசியல், பொருளாதார, சமய சமூக விடயங்கள் குறித்த தகவல்களையும், கருத்துக் களையும், கட்டுரைகளையும் வெளியிட்டிருந்தன. இப்பத்திரிகைகளில் பெரும்பாலானவை சமய, சமூக வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டவையாகவும், சில தனிப்பட்ட தேவைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் அமைந்திருந்தன.

முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு, வெளியிடப்பட்டு வந்த 'இந்து சாதனம்' போன்ற பத்திரிகைகளும், கால மாற்றத்திற்கு ஏற்ப உலகியல் சார்ந்த வியங்களையும் வெளியிடும் பத்திரிகையாக மாற வேண்டியதாக இருந்தது. இதனை, மற்றைய பத்திரிகைகள் ஆங்காங்கே சுட்டிக் காட்டியுமுள்ளன. முதலில் ஆரம்பிக்கப்பட்ட உதய தாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன், இந்து சாதனம் ஆகிய பத்திரிகைகளுக்கிடையில் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19th February, 1878.

புத்தக விளம்பரம்.

CURE FOR ALL

NEVER DESPAIR

THE GREATEST WONDER OF MODERN TIMES!

HOLLOWAY'S PILLS

Long experience has proved these famous remedies to be most effectual in curing either the dangerous maladies or the slighter complaints which are more particularly incidental to the life of a miner, or to those living in the bush.

Occasional doses of these Pills will guard the system against those evils which so often beset the human race, viz:—coughs, colds, and all disorders of the liver and stomach—the frequent forerunners of fever, dysentery, diarrh… and cholera.

HOLLOWAY'S OINTMENT

Is the most effectual remedy for old sores, wounds, ulcers, rheumatism and all skin diseases; in fact, when used according to the printed directions, it never fails to cure alike, deep and superficial ailments.

These Medicines may be obtained from all respectable Druggists and Storekeepers throughout the civilised world, with directions for use in almost every language.

They are prepared only by the Proprietor, Thomas Holloway, 533 Oxford Street, London.

, Beware of counterfeits that may emanate from the United States.

மரண அறிக்கை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

விளம்பரம்.

பத்திரிகை ஒன்றின் விளம்பரப்பக்கம்
Advertisement page of a Newspaper

வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவை அக்கால வடஇலங்கையின் கல்வி கற்ற மேல்தட்டு வகுப்பாரினால் ஒருவித அமைப்பு ரீதியாக நடத்தப்பட்டவையாக இருந்தன எனக் கூறுவதில் தவறிருக்காது.

பத்திரிகைகளில் வெளியான விளம்பரங்கள்

இப்பத்திரிகைகளில் பெரும்பாலானவை அதிகளவு வர்த்தக விளம்பரங்களைக் கொண்டு காணப்பட்டன. விளம்பரங்களுக்கான கட்டண விபரங்கள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்தன.[30] யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் பொருட்களுக்கான விற்பனை பற்றிய விளம்பரங்கள் மாத்திரமன்றி, மட்டக்களப்பு வியாபாரப் பொருட்களின் விளம்பரங்களும், வெளிநாட்டு விற்பனை நிலையங்களின் விளம்பரங்களும் பெரிய அளவில் இடம்பெற்றிருந்ததைக் காணக்கூடியதாக உள்ளது.[31] இவ்விளம்பரங்களில் சிறப்பான கவனத்தை ஈர்ப்பனவாக அமைந்துள்ளவை தங்க மாத்திரிகை, சலாமிரிசி லேகியம் போன்றவற்றின் விளம்பரங்கள் ஆகும். அதற்கான நியாயம் என்னவெனத் தெரியவில்லை.

எல்லாப் பத்திரிகைகளும் எல்லா விளம்பரங்களையும் பிரசுரிப்பதற்குத் தயாராக இருந்தன எனக்கூற முடியாது. சில பத்திரிகைகள் விளம்பரங்களைப் பிரசுரிப்பதில் கண்டிப்பாக நடந்துள்ளன. தமது பத்திரிகையின் எண்ணத்திற்கு மாறான விளம்பரங்களை மீளப் பெறுவதற்கும் விளம்பரதாரர்களுக்கு அறிவுறுத்தியிருந்தன.[32]

இக்காலப் பத்திரிகைகளில் தனியார்களின் திருமண, தேகவியோக விளம்பரங்களும் இடம் பெற்றிருந்தன. இந்திய வர்த்தக விளம்பரங்கள் அதிக அளவில் இடம் பெற்றிருந்தன. சில பத்திரிகைகளில் இவ்வர்த்தக விளம்பரங்கள் முதற்பக்கம் முழுவதிலும் அமைக்கப்பட்டும் காணப்படுகின்றன. அதிகப்படியான நூல்களின் வருகை, நூல்களின் விற்பனை பற்றிய விளம்பரங்களும் காணப்படுகின்றன.[33]

பத்திரிகைகள் வாயிலாக நாம் அறியக்கூடிய விடயங்கள்

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலங்களில் வெளிவந்த பத்திரிகைகளில் பெரும்பாலானவை, இடைநிலைப்பட்ட வகுப்பினரால் நடத்தப்பட்டவையாக உள்ளன. அதாவது ஓரளவு ஆங்கிலம் தெரிந்த அல்லது ஆங்கிலம் தெரியாத வகுப்பினரால் நடத்தப்பட்டன. முன்னையவர்களின் நோக்கம், சிந்தனை என்பவற்றில் இருந்து, பின்னையவர்களின் நோக்கம், சிந்தனை ஆகியவை வேறுபட்டவையாக இருந்தன. இவர்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SANMARKAPOTHINI.

ஒன்றுவிட்டொருசனிக்கிழமைகளிற்பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Jaffna	March	20th	1909.

சனிக்கிழமை.

No 6

பத்திரிகையங் கொடுத்தோர்.

Vembar

The Immaculate Jubilee Club...		Rs4.00
Penang		
M. Vallipuram Esq	...	1-00
A S. Valanthampillai Esq.	...	2-00
Mr V. Sathalingam James	...	
Namunukula		
Mr. M. Xavier	...	2-00

யாழ்ப்பாணம்.

சன்மார்க்க போதினி - Sanmarkapothini

Digitized by Noolaham Foundation.

சிலரிடம் தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி இருந்தது. ஆங்கில மோகம், மேலைத்தேச நடை, உடை, பாவனை ஆகியவற்றிற் கெதிரான உணர்வு இவர்களின் எழுத்துக்களில் காணப்பட்டது. அது மட்டுமன்றி, உயர் வகுப்பாரிற்கு எதிரான எண்ணங்களும் இவர்களிடமிருந்தது. தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற புலமையாளர்களின் மேன்மைகளையும், உயர் வகுப்பாரால் அவர்களுக்கு ஏற்படக் கூடிய நியாயமற்ற செயற்பாடு களையும் கண்டிப்போராகவும் இருந்தனர். இவர்கள் மேல் தட்டு வகுப்பார்களில் ஒரு பகுதியினரின் ஆதரவினைப் பெற்றிருந்தார்கள் என்பதும் உண்மையானதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் யாழ்ப்பாணத்தினது உண்மையான தோற்றப் பாட்டினைக் காட்டும் கண்ணாடியாக, இந்தப் பத்திரிகைகள் காணப் படுகின்றன. அக்கால மக்களின் பொருளாதாரவிடயங்கள்,[34] வாழ்க்கை முறை, பழக்கங்கள், வாழ்க்கைத்தரம், சமூகத்தின் பல்வேறு பிரிவினர் மத்தியில் காணப்பட்ட உறவுகள், முரண்பாடுகள், சமய, பண்பாட்டு நிலை, புதிய மாற்றங்கள், நம்பிக்கைகள், கலைகள், விளையாட்டுகள், பொழுது போக்குகள், அடித்தட்டு மக்களின் நிலை, எனச் சமூகத்தின் சகல அம்சங்களையும் இப்பத்திரிகைகள் வாயிலாகப் புரிந்து கொள்ள முடியும்.

சமூகத்தின் மேல் வகுப்பு நிலையினரும், இடைநிலை வகுப்பினரும் அடித்தட்டு மக்களைப் பற்றிக் கொண்டிருந்த தொடர்புகள் அதிக கவனத்தை ஈர்ப்பனவாக உள்ளன. பொருளாதார, சமூக அந்தஸ்து அடிப்படையில் அடித்தட்டினராகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் இருந்தனர் என்பதில் ஆச்சரியமோ, கருத்து வேறுபாடோ இருப்பதற்கு இடமில்லை. சட்டத்தின் முன் சமனென்றாலும் தாழ்த்தப்பட்டவர்கள் பற்றிய மனப்பாங்கைப் பொறுத்த வரையில், மேல் வகுப்பினரும், இடைநிலை வகுப்பினரும் தாழ்த்தப்பட்டவர்களை, தனியாகவும், பொது இடங்களிலும், பத்திரிகை களிலும் சாதி அடையாளத்தின் அடிப்படையில், பச்சையாகக்கூறும் போக்கே காணப்பட்டது. (உ-ம்)[35] அக்காலத்தில் ஒவ்வொருவரின் அடையாளமும் தனி மனித அடையாளமாக அல்லாது, பிறப்பினாற் பெறப்பட்ட குழு நிலை அடையாளங்களே மேலோங்கியிருந்தன. இத்தகைய நிலை 1930களின் பின் வந்த ஈழகேசரிப் பத்திரிகையிலும் காணக் கூடிய ஒன்றாகும்.[36] இத்தகைய பண்பு கீழ்த்தட்டு மக்களுக்கு மட்டுமன்றி, மேல் தட்டு வகுப்பினருக்கும் உரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் விளிம்பு நிலை மக்களின் வரலாறு என்ற விடயம் பற்றிப் பேசப்படுகின்றது. அதற்கான வரலாற்று ஆதாரங்கள் வேறுபட்டவை. வட இலங்கையைப் பொறுத்த வரையில் அத்தகைய விளிம்பு நிலை மக்களின் வரலாற்றை அறியக் கூடிய ஆதாரங்களில் ஒன்றாக இந்தப் பத்திரிகைகளை எடுத்துக் கொள்ள முடியும்.

இக்காலப் பத்திரிகைகளில் கையாளப்பட்ட மொழி நடையும் கவனத் திற்குரியதாக அமைகின்றது. பல இடங்களிலும், பண்டிதத் (இலக்கணத்) தமிழ் பயன்படுத்தப்பட்டுள்ள அதேவேளையில், சாதாரண பேச்சு வழக்கு மொழியும், நாட்டார் வழக்கு மொழிகளும், பழமொழிகளும், தூஷணங் களை ஒட்டிய வார்த்தைகளும், பிற மொழிச் சொற்களும், பெருமளவில் பயன்படுத்தப்பட்டதைக் காணமுடிகிறது.[37] ஆங்கில மொழியறிவு என்பதைக் குறிப்பதற்கு ஆங்கில கலையறிவு எனக் குறிப்பிடும் வழக்கம் கையாளப்பட்டது.[38]

அத்துடன், நாட்டில் மக்கள் மத்தியில் பேசப்படக்கூடிய சில விஷயங் களைத் தொகுத்து 'சனங்கள் என்ன பேசிக் கொள்ளுகிறார்கள்' என்ற வகையிலான தலைப்புகளின் கீழ் வெளியிட்டுள்ளனர். அவற்றை எழுதிய வர்கள் 'புழுகு சிங்கம்', 'பஞ்சாமிர்தம்' போன்ற புனை பெயர்களில் எழுதியுள்ளனர். அதற்கு உதாரணமாகச் சில எடுத்துக் காட்டுகள் அடிக் குறிப்பில் காட்டலாம்.[39]

அத்துடன் இக்காலப் பத்திரிகைகள் சமயம், மொழி சார்ந்த கருத்துப் பரிமாறல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

இப்பத்திரிகைகள் அக்காலத்தில் மக்களின் கருத்துக்களை வெளிப் படுத்தும் களமாக மட்டுமன்றி, பகிரங்கமாக கருத்து மோதல்களைச் சுமக்கும் களமாகவும் திகழ்ந்ததை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக: அக்கால தமிழ் இலக்கண, இலக்கிய மேதாவியான அ. குமாரசுவாமிப் புலவர் பலராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். இந்தியாவிலேயே அவரின் எழுத்து வன்மைக்குப் பயந்தவர்கள் இருந்தனர்.[40] அதே வேளையில் யாழ்ப்பாணத்தில், குமாரசுவாமிப் புலவரின் நூல்களில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்கக் கூடிய விடயங்கள் பத்திரிகை களில் சுட்டிக் காட்டப்பட்டு, விளக்கம் கேட்கப்பட்டிருந்தது.

இப் பத்திரிகைகள் பெண்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களும், கண்ணோட்டங்களும் மிகுந்த அவதானிப்புக்கு உரியவையாகும். இவர்கள் பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும், அக்காலத்தில் பெண்கள் வாழ்வில் ஏற்பட்டு வந்த மாற்றங்களை எவ்வாறு பார்த்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்குச் சில உதாரணங்களைக் கீழே காட்டலாம்.[41] பெண்கள் விவாகரத்துக் கோரும் நிலை ஏற்பட்டிருந்ததையும், புதிய வகை ஆடை, அலங்காரங்களில் ஈடுபட்டமை பற்றிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகைகளின் ஆரம்பமானது, சமயப்பிரசாரம், சமயத்தை மீட்டுக் கொள்ளல் என்பவைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும், காலப் போக்கில், சமூகத்தின் உட்பிரிவினர் மத்தியிலான பாகுபாடுகளிலும் போட்டியிலும் மையம் கொண்டதாக மாறியது. சமயம், சாதி கடந்த, மொழி அடிப்படையிலான ஒருமைப்பாட்டிற்கு இடமளிக்க வேண்டிய நிலைக்கு அவை தள்ளப்பட்டதையும் அவதானிக்கமுடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பமும், தமிழ் இலக்கிய வரலாற்றில் வடஇலங்கையரின் ஆதிக்கம் உச்சநிலையில் இருந்த காலம் என்பதை வலியுறுத்துவதற்குப் போதிய சான்றுகள், அக்காலத்து இலக்கியப் பதிப்புக்களிலும், பத்திரிகை வெளியீடு களிலும் உண்டெனலாம்.

மேற் குறிப்பிட்ட உச்சநிலை பின்னர் திடீரெனத் தளர்வடைந்து சென்றமை வியப்பிற்குரியதாகவும் ஆராய்வுக்கு உரியதாகவும் உள்ளது. பத்திரிகைகளின் வெளியீட்டினையும், நூல்களின் வெளியீட்டினையும் எடுத்துக்கொண்டால், அவைகளின் தொடர்ச்சியான வெளியீடு என்பது பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கப்படலாம்:

- ★ வெளியீட்டாளர்களின் பொருளாதாரப் பின்னணி.
- ★ சமூகத்தில் மக்கள் மத்தியில் காணப்படும் வாசிப்புப் பழக்கத்தின் அளவு.
- ★ சமூகத்தின் அக்கறையுடைய சுதந்திர சிந்தனையுடைய புலமைத்துவம் மிக்கவர்களின் ஆர்வமும் உருவாக்கமும்.
- ★ அச்சிடுவதற்கு வேண்டிய பொருட்களின் நிரம்பல்.

இந்த நான்கில் ஏதாவதொன்றில் குறைபாடு உருவாகுமேயானால், பத்திரிகைகளினதும், நூல்களினதும் வெளியீடுகள் தேயும் நிலைதான் உருவாகும்.

இவற்றுள் மூன்றாவதை எடுத்துக்கொண்டால், புலமைத்துவம் உடைய வர்களாக இருந்து வந்தவர்களின் இறப்பும், கற்றோர்கள் அமைப்புக்களுள் உள்வாங்கப்பட்டமையும், இதனைப் பெரிதும் பாதித்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக: சைவ வித்தியாவிருத்திச் சங்கம் என்பவைகளின் உருவாக்கமும், உள்வாங்கலும்.

வெளியீட்டாளர்களின் பொருளாதாரப் பின்னணியை எடுத்துக் கொண்டால், 1900 - 1915 ஆம் ஆண்டுகளின் பத்திரிகைகள், பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்ததையே காணமுடிகிறது. வாசிப்பு விருப்புத் தன்மையைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாணத்தில் 1900ஆம் ஆண்டுகளில் பல வாசிப்பு சாலைகள் உருவாக்கப்பட்டு, அவை செயற்பட்டதை அறியமுடிகிறது. மேலும், 'ஈழகேசரி' பத்திரிகைக்கு பெருமெண்ணிக்கையிலான வாசகர்கள் இருந்தமையையும் அவதானிக்க முடிகிறது.

அச்சிடுகைக்கான பொருட்களின் கிடைக்கும் தன்மையைப் பொறுத்த மட்டில், 1ஆம், உலக யுத்த காலத்தில், இப்பிரச்சினை பெருமளவில் உருவாகியிருக்கமுடியும். சிங்கள -முஸ்லிம் கலகத்தின் பின்னர் அரசாங்கம் பிரகடனப்படுத்திய கட்டுப்பாடுகள் இந்த மாற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்கவும் முடியும். ஆயினும் 1917ஆம் ஆண்டிற்கு முன்னர் காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான கருத்துகள் எதனையும் பத்திரிகைகளில் காண முடியவில்லை. மாறாக காலனித்துவ ஆட்சியாளர் களை மரியாதையுடனும் நன்றியுடனும் மதிப்பளிக்கும் வகையிலான செய்திகளும்,குறிப்புக்களும் உள்ளன.

இவைகளைப் பார்க்கும்போது, யாழ்குடாநாட்டில் 1920 களின் பின்னர், பத்திரிகைகள் பல நிரந்தரமாக மறைந்தமைக்கு, பத்திரிகை வெளியீட்டாளர்கள் எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளும், தம்மை ஒருவித அமைப்பு முறைமைக்குள் உள்ளாக்கிக்கொண்ட குட்டி பூர்சுவாகளின் கைக்கு பத்திரிகை வெளியிடுகை முழுமையாக மாறியதைத்தான் அவதானிக்கமுடிகிறது.

1930ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட கால பத்திரிகைகளை ஆராய் பவர்கள் இதுபற்றி ஆராய்ந்து, சரியாக அறியவேண்டியுள்ளது. இது, 1930ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் எமது யாழ்ப்பாணச் சமூகம் எப்படியான வார்ப்பு அச்சினுள் (mould) இடப்பட்டது என்பதை அறிவதற்கும் உதவுவதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

1. குமுதா, சோமசுந்தரக்குருக்கள், 2007, ***யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கட்டடக் கலையும்***, குமரன் புத்தக இல்லம், கொழும்பு- சென்னை.
2. சிவநேசச்செல்வன், ஆ. 1977 'இலங்கைத் தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் - சில குறிப்புகள்', ***நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்***, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, கொழும்பு, பக். 345-347.
3. ஆறுமுக நாவலர் மரண அறிக்கை: 'உத்தம சத்தம குணாதிசயங்கட்கு ஆதார பீடமாய், ஆரிய செந்தமிழை உண்டு கர்ச்சனை செய்யுங் கலைஞான மேகமாய், விநய பூசனை நியம விரத செபதியானாதிகளில் வழுவாதொழுகும் சிவாசாரியரும் மகாநுபாவருமாகிய விதாம்பர ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் 21 ஆம் திகதி சுக்கிரவாரத்திரவு பத்து நாழிகை ஆகிய புண்ணிய காலத்திலே, தேகவியோகம் அடைந்து விட்டார்கள்'. - ***இலங்கை நேசன்*** (வேறு விபரமில்லை!).
4. ***சைவ உதய பானு***, புத். 1, இல. 18, 1 ஜுன் 1887. இப்பத்திரிகை சைவப்பிரகாச சமாசீயம் என்ற அமைப்பின் கீழ், நல்லூர் சு. சரவணமுத்துப்பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டது. சைவபரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்ட பின் அவர்களால், இந்து சாதன பத்திரிகை வெளியிடு முகமாக, இப்பத்திரிகை அச்சிடும் யந்திரம் அச்ச பையிடம் சென்றது. சரவணமுத்துப்பிள்ளை இது பற்றி பெரிதும் குறைபட்டுக் கொண்டார்.

   சரவணமுத்துப்பிள்ளை போன்றவர்கள் சைவம் என்ற சமயத்திற்குப் பதிலாக, ஆங்கிலத்தில் இந்து சமயம் எனக் குறிப்பிடுவதை விமர்சித்துள்ளமை கவனிக்கத் தக்கது.

   'ஆங்கில கலையிலே வல்லவர்களாய், நாகரிகத்தினாலும், அறிவினாலுஞ் சிறந்தவர்களாகத் தம்மை மதித்துக் கொண்டு நமதூரைத்திருத்துகிறோமென்று, நவீனமாக இப்பொழுதெழுந்து, சபைகள் பலவற்றைப் பற்பல இடங்களிலே தாபித்துப் பல பிரசங்கங்களைச் செய்து கொண்டு வரும் ஆங்கில பண்டிதர்கள், சமயநூற்பயிற்சியில்லாதவர்களால் விபரீதமாக விளங்கி மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில நூலொன்றையேயன்றித் தமிழிலேயுள்ளகருவிநூல், சமயநூல்களை நேரே கற்றறியாராதலாற், சமயமிதென அறியும் ஆற்றலில்லாதவர்களாக,நமது சமயத்தை ஆங்கிலேயர்களாலிடப்பட்ட இந்துசமயமென்னும் பெயரால் வழங்கிக் கொண்டு, நமது சித்தாந்த சைவத்துக்கு முழு மாறாயுள்ள மாயாவாதக் கோட்பாட்டையே பிரசங்கிக்கத் தொடங்கிக் கொண்டார்கள். கல்வியறிவினாலுஞ், சமயநூலறிவினாலுஞ் சிறந்த சைவ வித்துவான்களைத் தங்கள் சபைகளிலே அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்கிறார்களில்லை. இவ்வாங்கில பண்டிதர்களே இக்காலத்துச் செல்வாக்கினாலும் உத்தியோகத்தினாலுஞ் சிறந்துள்ளாராதலிற் சனங்களெல்லாம் அவர்களது கோட்பாட்டையே பின்பற்றுவாராயினர்.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஞானிகளெல்லாம் மெய்யெனக் கைக்கொண்டொழுகிய சுத்தாத்துவித சைவ சித்தாந்த சமயத்துக்குச் சிரத்தானமாயுள்ளது யாழ்ப்பாணதேசமொன் றேயாமென்று இந்தியாவிலுள்ள அறிஞர்களாலே நெடுங்காலமாகப் புகழ்ந்து பாராட்டப்பெற்ற நமது யாழ்ப்பாணத்திலே' - சண்முகநாதன் 16.03.1914

'சிறீ இராசரத்தினம்பிள்ளை அவர்கட்கு: உதயபானு என்னும் பத்திரிகை உதயபானு என்னும் பெயரையொழித்து வேறொரு பெயரை வைத்து நடத்தி வருமாறு அன்போடு வேண்டுகின்றோம்' மஹா விஜய லட்சுமி, 23 ஜன் 1911.

5. **சன்மார்க்க போதினி.**
6. **விஞ்ஞானவர்த்தனி,** புத்.1, சங்கியை 3, 1 ஜன் 1887.
7. **குமாரசுவாமிப் புலவர் சரித்திரம்,** (திகதி?) பக்கம், கஅ.
8. **திராவிட கோகிலம்,** புத்.1, இல. 19, 1 நொவெம்பர் 1900.
9. **திராவிடமந்திரி,** புத்.1, இல.23, 17 சூன் 1893.
10. **ஆரிய ஜனப்பிரியன்,** புத். 4, இல.36, 19 ஜன. 1895.
11. **சுதேச நாட்டியம்.**
12. **விவேகானந்தன்,** புத்.1, இல.23, 10 நொவெம், 1902.
13. **சைவ சூக்குமார்த்த போதினி,** புத். 1, இல.5, 13 அக். 1907.
14. **ஆத்ம போதினி,** பிப்ரவரி மாதம் 4, 1907
15. **குருசந்திரோதயம்,** 25. 05.1911.
16. **விஜய லட்சுமி,** புத்.1, இல.1 வைகாசி, சாதாரண வருஷம் (1910).
17. **விஜய லட்சுமி,** புத்.1, இல. 8 மார்கழி, சாதாரண வருஷம்(1910).
18. **விஜய லட்சுமி,** புத்.1, இல. 8 மார்கழி, சாதாரண வருஷம் (1910).
19. **மஹா விஜய லட்சுமி,** புத்.1 இல.2, மாசி சாதாரண (1910).
20. **மஹா விஜய லட்சுமி,** 28.6.1911
21. **சண்முகநாதன்,** 06.09.1915.
22. **பால பாஸ்கரன்,** 14 செப்ரெம்பர், 1915.
23. 'தமிழ் மக்களுக்கு அவசியம் வேண்டுவது கொழும்பில் ஒரு தமிழ்ப் பத்திரிகை - அருணாசலம் இதை விரும்பியிருந்தார். இப்பொழுது இது மிக அவசியம்', 1926.
24. ஆறுமுக நாவலர் வாசிகசாலை: இவ் வாசிகசாலை புரட்டாதி மாதம் 3ஆம் திகதி தொடங்கி இந்து சாதன ஆபீஸ் தென் பக்கத்து வீதியிலே நடைபெற்று வருகிறது. இதற்கு உபகாரமாகக் கொடுக்கப்படும் புத்தகங்கள், புதினப் பத்திரிகை கள் யாவும் மிக்க நன்றியறிதலுடன் ஏற்றுக் கொள்ளப்படும். **ஆத்ம போதினி,** பிப்ரவரி மாதம் 4, 1907
25. **சுதேச நாட்டியம்,** 15.09.1902.
26. **சுதேச நாட்டியம்,** 29.09.1902.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. **ஆத்ம போதினி,** 4.2.1907.

28. **விஜய பானு,** புத்.1, இல.23, 30 ஜன. 1916.

29. **சண்முகநாதன்,** 01.10.1915.

30. விளம்பரவிகிதிற்கு உ-ம்: இருபது வரிக்கு உட்பட்ட ஜெனன மரண விவாக உற்சவ விளம்பரங்களுக்கும், நீதியான வேறெவ்வித விளம்பரங்களுக்கும் முறை ஒன்றுக்கு ரூபா ஒன்றே கால். மேற்படக் கலம் ஒன்றுக்கு ரூபா மூன்றரை.

31. உதாரணத்திற்கு சில விளம்பரங்கள் பின்வருமாறு: 1. மட்டக்களப்பு சுதேச நெசவுச்சீலைகள் பற்றிய விளம்பரம் மட்டக்களப்பு பிடவை வியாபாரியான சோ. நல்லதம்பிமுதலியாரால் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இவைகள் நமது சுதேச தமிழ்ச் சனங்களுக்காகவும், இலங்கை, இந்தியா வியாபாரிகளுக்காகவும் கெட்டிச்சாயம் போட்ட சிகப்பு, நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை முதலிய நூல் சேலைகள், சிற்றாடைகள் முதலியன எம்மிடம் நெசவு செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் வி.பி. மூலமாகவும் பெறலாம். கோட், கால்சட்டை முதலிய வைக்குத் திறமான கன்னனூர்ச் சேலைகள் எம்மிடம் நெசவு செய்யப்படுகின்றன. வேண்டியவர்கள் ரூ-சத முத்திரையனுப்பினால் மாதிரியனுப்பப்படும். (சண்முக நாதன் 13.5.14). 2. பலத்தைக் கொடுக்கும் மருந்துகளில் பழனி ஆர்.எம்.கே. தங்க மாத்திரை -இது ஒன்று தான் திவ்ய ஔஷதம். ஆச்சரியமான குணம்! மிக்க இன்பமான சுகம்!! (சண். 13.5.14) 3. பட்டு பீதாம்பர கம்பெனி, பறீகாசி காஷ்மீர பட்டுக்கள் என்ற காசி பட்டு தினுசுகள். திருப்தியில்லாத சரக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வோம். பீதாம்பர பட்டுச் சேலைகள் (16)முழம் நீளம், உஇ முழம் அகலம். விளிம்பும் முந்தியும் சரிகை. பூ வேலைகள் உடல் சாதா. சேலை க-க்கு ரூபா உ0 முதல் ரு0 வரை வாஸ்கட் சேலைகள் (16) முழம்உரு அகலம். பட்டினாலேயே உடலில் பட்டு பூ வேலை செய்தது. விளிம்பு சருகை வேலை. முந்தியில் பிரகாசமான சளசளப்பு முத்து. சேலை க க்கு விலை ரூபா உரு முதல் ரு0 வரை. பீதாம்பர அல்லது மதனப்பூர் ரவிக்கை க). உ). உடலிலும் ஜரிகை யினால் பூக்கள், புட்டா போட்டது. மதனப்பூர் பட்டு தாவணிகள் துப்பட்டாக்கள் பீதாம்பரம் அல்லது மதனப்புரா கவுக்கங்கள், வெண்பட்டு வேட்டிகள்

குழந்தைகள் விளையாடக் கூடிய பித்தளை, வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள பாத்திரங்கள். உருத்திராசஷங்கள்! ஜப மாலைகள்!! பனி! பனி!! பனி!!! பனிக்கு அடக்கமான சுத்தமான ரோமத்தால் செய்த கம்பளிப் போர்வைகள், காசி வயிரவர் கயிறு, கஸ்தூரி, குங்குமப் பூ, தந்தச் சாமான்கள் - பொடி டப்பி, கெடியார சங்கிலி சண்முகநாதன் 13. 5.1915.

32. 'நமதன்பர்களே! உங்கள் பெருமையை நம்பி நாம் வாசித்துப் பாராமல் சில விளம்பரங்களை ஏற்றுக்கொண்டோம். பிந்திப் புறுவ் பார்க்கும் போது, நம் பத்திரிகைக்கேற்காத விளம்பரங்களையுங் கண்டோம். ஆனால் அவைகளை விகாரப்படுத்திப் பிரசுரித்திருக்கிறோம். அதற்கு விரும்பாதவர் இவ்வளவில் தம் விளம்பரத்தை எடுத்து விடும்படி கற்பிக்கலாம்.'

33. **சன்மார்க்க போதினி,** 16 செப். 1911.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. 'யாழ்ப்பாணத்திலேயுள்ள வரகு விளை நிலமாகிய செம்பாட்டுப் பாரிய வெளிகள் யாவும் அதிகப்பற்றாய் புகையிலை விளை நிலங்களாக்கப்பட்டன. யாழ்ப் பாணனின் கதி நெசவுத் தொழிலையிழந்த இந்தியர் கதியேயாகும்', **விவேகானந்தன்,** 13.10.1902.

35. 'வண்ணார், அம்பட்டர்களுக்கு கொழும்பு, சிங்கப்பூர்க்காசு கரும்பாயிருத்தலால் உள்ளூர்க் கூலி வேம்பாய் விட்டது. அவர்கள் தங்கள் சாவகாசப்படி தந் தொழில் களைச் செய்வதன்றி வேண்டிய காலங்களிலே கட்டுப்பட்டுச் சேவிப்பது இல்லாத காரியமாம். ஆதலால் இது எட்டாம் பஞ்சம்.' **ஆத்ம போதினி,** பிப்ரவரி மாதம் 4, 1907.

36. 'சாதியென்பதொன்றில்லையேயென்று அவர்கள் சாதிக்கத் துணிவரேயாயிற், சகல சாத்திரசம்பந்தமாயுள்ள சாதிக்கட்டுப்பாட்டை இல்லையென்று மறுக்க வியலுமா?'

37. வழக்கு மன்றங்களில் ஒருவர் தன்னை அடையாளப்படுத்தும் போது, ***ஈழகேசரி....***

38. அடிக்குறிப்புகளில் தரப்பட்டிருக்கும் மேற்கோள்களை வாசிப்பின் இதனை விளங்கிக் கொள்ள முடியும். அடிக்குறிப்பு 41 பார்க்க.

39. 'திருநெல்வேலி வடக்கிலே வசிக்கும் ஐங்குடியை வைத்தாளும் பொன்பற்றியூர் வேளாள குலோத்தமர்கள் ஒருங்கு சேர்ந்து 'சிவஞான தான வித்தியாசாலை' என்னுஞ் சைவ வித்தியாசாலைக் கட்டடத்தைப் பாதிரிமாருக்கு எழுதிக்கொடுத்து மேன்மை பெறப் போகிறார்களாம். இனி அவ்வூரிலுள்ள சைவசமயக் கோவில் களையும் பாதிரிமாருக்குவிற்றுவிட்டால் தங்கள் பூசை முறைக்கு மோசம் வருமென் றஞ்சி பூசகர்கள் நூலைச் சட்டைக்குள் மறைத்துக் கொண்டும் முன்தலையைச் சிலுப்பாவாகவும், பின் தலையைக் குடுமியாகவும் வளர்த்துக் கொண்டும் பைபிள் படிக்கிறார்களாம்.'

'நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே இந்த வருஷம் ஆடவர் சண்டை நடவாமையால், அங்கே அடியழிக்கப்போன பெண்கள் சங்கங்கூடி ஆயத்தப்படுத்திப் பங்கம் பிரிந்து அங்கம்பரிய அடிபட்டு ஒருவாறு அக்குறையை நிறைவேற்றினார்களாம்.'

'பிறக்கிராசியாரொருத்தர் கொம்மட்டிச் சக்கறுத்தாராம். நெடுக அவர் தானாம்'

'இரண்டு வருடத்திற்கு மேலே கொம்மட்டியில் ஒருவர் குந்திக் கொள்ளக்கூடாது என்று வாதாடி வல்லடி வழக்குப் பேசின பிறக்கிராசியார் தானே மறந்து போயாக்கும் நெடுகக்குந்திக் கொண்டாராம்' (கொம்மட்டி - கொமிற்றி).

சனங்கள் என்ன சொல்கிறார்கள் புழுகு சிங்கம் சண்முகநாதன் 01.10.1915 'சட்டாம்பிள்ளை செய்யும் தவறைப் பராமுகமாய் வாத்தியார் விடுவராயின், இத்தவறு பள்ளிக்கூட உத்தியோகத்தர் முழுப்பேரினதும் தவறாய் முடிந்து பள்ளிக்கூடம் நாசமடைவதற்குக் காரணமாகுமாம்'. 'பெரியோர் என்ன பேசிக் கொள்ளுகின்றார்கள்' ***விஜயபானு,*** 30.01. 1916.

40. Muthukumaraswamy Pillai, 1972, Kumaraswamy Pulavar கவி-ஙரு-சிறீமத் வித்வ சிரோமணி ந-ச-பொன்னம்பலபிள்ளையவர்கள் 'சேருருமனுநெறி சேருஞ் சிலை புண்டநாணியுமே' எனக் கொண்ட பாடத்தை, 'தேருமனுநெறி சேர்வுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலை புண்டநாணியுமே' எனத் திருத்திப் பொருளுரைக்கப்பட்டது. அங்ஙனந் திருத்தற்குப் பிள்ளையவர்கள் கொண்ட பாடத்தில் வந்த வழுத்தான் யாது? செய்யுளைத் திருத்திப் பொருள் கூறல் எவரால் முடியாது. உரை கூறிய படிக்குக் கவி 'மனுநெறிச்சேர்வும் இருத்தல்' வேண்டுமன்றோ? **சுதேச நாட்டியம்**, 23.01. 1905

41. '.... இவ்வியாழ்ப்பாணத்திலே, சாதியாசார சமயாசாரங்களும், நல்லொழுக்கங் களும், குடும்பங்களின் ஒற்றுமைகளும் அடியோடழிந்தொழிந்தன. ஆங்கில கலையறிவு நம்மூரிலே தலையெடுக்க முன்னரும், நம்மூரிலே இப்போதுள்ள குடும்பக் கலகங்களும், கல்யாண வழக்குகளும் நடைபெற்றிருந்தனவா? பெற்றார் சுற்றத்தவர்களது அனுமதியின்றிக், கடிதவாயிலாக கல்யாணங்கள் நடைபெற்றது முண்டா? சிவாக்கினியுஞ் சபையார்களுஞ் சாட்சியாகக், குரு முன்னிலையிலே மணஞ் செய்யப்பட்ட மகளிர், தமது நாயகரைப், பின்னர்த் தமக்கு வேண்டிய தில்லையென்று மறுத்துத், தமது நாணத்தையுந் துறந்து கோடேறி வழக்குப் பேசியதுமுண்டா?...' சண்முகநாதன், 1.10.1915.

'இனிப் பெண்களிருப்பிடம் பெரிய சண்டை' என்கிறார்களே. 'தாயைப் பார்த்து பெண்ணைக் கொ'ளென்னும் ஆன்றோர் வாக்கை நினைக்காது, நான வீணே பிண்டமும் துண்டமும் நேர்ந்தவாறு, 'பிடாரியைப் பெண் பிடித்துப் பேயனானேனே' இதுவுமென் தலைவிதியோ வென்று, மனைவியைப் பார்த்துக் கணவன் விச னமடையக் கூடியதாய் நடாத்தக் கூடாது..'

'பெண் மணஞ் செய்து மாமியாரில்லத்திற்குவந்தவுடனே, வந்ததே சிறுக்கி பந்தடித்தாள் வர வரச்சிறுக்கி கழுதை மேய்க்கிறாள்.'

'கணவனுக்கு வருவாய் குறைந்து வறுமைப்படுங் காலத்தில், ஏருழுகிறவ னென்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியவதி யென்று நினைக்க வேண்டும்' '.. விலைமகட்கழகு தன் மேனி மினுக்குதல்' என்னும் வாக்கியங், குலமகட்கு விரோதமென்று நினையாமற், தன் கணவன் கண் களிக்கும்படி தன்னை விலையுயர்ந்த வஸ்திராபரணங்களால் அலங்கரித்தல் வேண்டும். அஃதன்றிப் பரபுருடரிச்சிப்பிற்கு அலங்கரித்தலாகாது.'

'இல்லாள், 'மண்ணாங்கட்டி மாப்பிள்ளைக் கெருமுட்டை பணியாரம்' என்பதாகத் தாறுமாறாகச் செய்யாமற், காலமறிந்து, கிரமமாகக் கொழுநனுக்கு ஸ்நானுட்டானங்களுக்காயத்தஞ் செய்துவேளைக்கேற்ற போசன தாம்பூல வஸ்திர புஷணாதிகளுந் தடையில்லாமல் அமைக்க வேண்டும்'. சண்முகநாதன், 7.7.1916.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசநாட்டியம் பத்திரிகையும் (1902 -1915) கல்லடி வேலனும்[1]

யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாறு பற்றி அறிந்துகொள்ள முற்பட்ட எனது முயற்சியில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெளியிடப்பட்டு வந்த பத்திரிகைகளையும் அகழ்ந்து பார்க்க வேண்டிய ஆர்வமும், அவசியமும் ஏற்பட்டது. இதன்போது, 'கல்லடி வேலன்' ஆல் 1902ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வந்த 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகையிலிருந்து, யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய பல்வேறு முக்கிய விடயங்களை அறிய முடிந்தது. அதிலும், உயர்ந்தோர் மாட்டல்லாத சாதாரண மக்கள் வரலாறு பற்றிய தகவல் தேட்டத்தில், மேற்படி பத்திரிகை ஒரு முக்கியமான தகவல் பெட்டகமாக விளங்குவதை இனம் காண முடிந்தது.

கல்லடி வேலனால் வெளியிடப்பட்டு வந்த 'சுதேசநாட்டியம்' பத்திரிகையானது தனி நபரால் நடாத்தப்பட்டு வந்தவொரு பத்திரிகையாக இருந்ததுடன், யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருந்து வந்துள்ளது. மேலும், இப்பத்திரிகையானது கல்லடிவேலனால் 1902ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அவர் இறந்த பின்னரும் சிறிது காலமாவது (1947ஆம் ஆண்டுவரையும்) வெளியிடப் பட்டுள்ளது. 'சுதேச நாட்டியம்' பத்திரிகையானது 45 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தமையானது, யாழ்ப்பாணத்தின் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனை என மதிப்பிடக்கூடியதாகும். அவ்வாறான போதிலும், யாழ்ப் பாணத்தின் பத்திரிகைகள் பற்றி ஆராய்ந்தவர்கள், 'சுதேச நாட்டியம்' பத்திரிகையில் வந்த விடயங்களைக் கவனிக்கத் தவறியுள்ளனர். அப் பத்திரிகை பற்றியோ, கல்லடி வேலன் பற்றியோ ஆய்வுக்கட்டுரை ஏதேனும் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

'கல்லடி வேலன்' எனப் பொதுவாக அழைக்கப்பட்ட கந்தப்பிள்ளை வேலுப்பிள்ளை, வயாவிளான் என்னுமிடத்தைச் சேர்ந்தவர். இவர் 'ஆசுகவி' எனவும் அறியப்பட்டிருந்தார். நினைத்தவுடன் கவிபாடும் வல்லமை கொண்டமை காரணமாகவே 'ஆசுகவி' என அழைக்கப்பட்டார். இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்டவர்களால் அவருடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Registered.

சுதேச நாட்டியம்.

THE JAFFNA NATIVE OPINION.

பக்ஷமொருமுறை பகிரங்கஞ் செய்யப்படும்.

K. Valuppillai
Vayavilan
Puttoor

சுதேச நாட்டியம் - **The Jaffna Native Opinion**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லடி வேலன்

சிலேடைத்தனமான நடவடிக்கைகள் சுவையுடன் பேசப்படுவதையும் கேட்டுள்ளேன். எழுதிய சில கவிதைகளை நான் வாய்மொழியாகக் கேட்டிருந்தேன்.

கல்லடிவேலன் 'அழகம்மா கும்மி', 'இரகசிய நூல்' ஆகிய நூல் களையும், 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' (1921) என்ற வரலாற்று நூலையும் வெளியிட்டிருந்தார். முன்னைய இரு நூல்களும் கிடைப்பதற்கு அரியனவாயுள்ளன. இவைகளைவிட, உறுதியாக நிரூபணமாகாத, அல்லது எழுதியவர் பற்றிய விபரங்களற்ற வகையில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள, பல நூல்களுள், சிலவற்றையும் இவர்தான் இயற்றியிருந்தார் எனக் கருதப்படுகிறது. இவரது பத்திரிகையில் வெளி வந்தவைகளும், இவரது நூல்களும், இவர் நீதி விசாரணைகளை எதிர் கொள்ளவும், தண்டப்பணம் செலுத்தவும், சிறைத் தண்டனை பெறவும், ஏதுவாக அமைந்த காரணத்தினால், அவரது நூல்கள், இயற்றியவரது பெயர் குறிப்பிடப்படாது, அல்லது வேறு பெயர்களில் வெளியிடப் பட்டிருக்கக்கூடும்.

யாழ்ப்பாணத்தில் அச்சுக்கலையின் அறிமுகமும், பத்திரிகைகளின் பெருக்கமும்

அச்சுக்கலையின் அடிப்படை பிரதியெடுத்தலாகும். அதன் தொடக்கத் தினை இந்திய மொகெஞ்தாரோ -ஹரப்பா நாகரிக கால முத்திரைகளுடன் தொடர்புபடுத்தி நோக்குவர் (Priolkar, 1958:1). பிரதியெடுக்கும் கலை முதலில் வளர்ந்த நாடு சீனாவாகும். கி.பி. 105 இல் சீனாவில் காகிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. கி.பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சீனர்கள் மரப்படிமங் களில் எழுத்துக்களையும் தெய்வப்படங்களையும் செதுக்கி மையைக் கொண்டு காகிதத்தில் பிரதி எடுக்கும் நிலையை அடைந்து விட்டனர்.

இதனைவிட களிமண், மரம் போன்றவற்றில் அச்சுக்களை உருவாக்கியும் பயன்படுத்தியுமிருந்தனர். சீனர்கள் அறிந்த காகிதத் தொழில்நுட்பம் கி.பி. 12இல் அராபியர் வாயிலாக ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. (Priolkar,1958 :1)

ஜொகான் குட்டன்பேர்க் 1445இல் முதன் முதலாக பைபிளின் பாகத்தை மிருகத்தோலில் அச்சிட்டு நிறைவேற்றியமையானது நவீன அச்சுக்கலையின் சகாப்தத்தினை ஆரம்பித்திருந்தது (Priolkar, 1958:1). ஐரோப்பாவில் அச்சுக்கலையின் அறிமுகம் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிவகுத்தது. அச்சுக்கலை அறிவை வளர்ப்பதிலும், கருத்துக்களைப் பரப்புவதிலும், வாசிக்கக்கூடியவர்களின் சிந்தனையைத் தூண்டுவதிலும், அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதிலும் ஆற்றக்கூடிய பங்களிப்பு, எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதே.

கீழைத்தேசங்களில் அறிவு நாட்டமும் அறிவுப் பசியும் அதிகமாக இருந்ததென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம். அச்சுக்கலையின் அறிமுகம் இங்கு வருவதற்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே அதெனியர்களைப் (புராதன கிரேக்க நாகரிக காலத்தில் வாழ்ந்த அதென்ஸ் நகரத்தினர்) போன்று, இவர்களும் எதையும் அறிந்து கொள்ளும் நடவடிக் கைகளில் ஈடுபட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், அறிவைப் பரப்புவதில் தேர்ச்சி பெற்றவர்கள் நகர்ப் புறங்களில் வேண்டிய போதும், மிகவும் தொடர்புகள் குறைந்த கிராமப் புறங்களிலும் தொடர்ந்து இத்தகைய வழிமுறையைப் பின்பற்றி வந்தனர் என டிக்பி குறிப்பிட் டுள்ளமை அவதானிக்கத்தக்கது. (Digby,1875:5)

தமிழில் அச்சுக்கலையின் ஆரம்பம் பற்றிய தகவல்கள் கவனத்தை ஈர்ப்பனவாகவே உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதல் அச்சு வாகனத்தை அலங்கரித்த மொழியாக தமிழ் விளங்கியுள்ளது. தமிழ் எழுத்துக்களுக்கு அச்சு வடிவத்தை முதன் முதலில் ஆக்கிக் காட்டியவர்கள் டேனிஷ் மதகுருமார்களே. (Priolkar,1958:11)

அச்சுக்கலை அறிமுகப்படுத்தப்பட்டபோது, முதலில் பழைய நூல்களும், துண்டுப்பிரசுரங்களுமே அச்சிட்டு வெளியாக்கப்பட்டன. பாரம்பரிய எழுது கருவிகளுக்குப் பழக்கப்பட்ட சமூகத்தவர்கள் மத்தியில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய முறை உடனடியாக வாசிக்கும் பழக்கத்தை தூண்டக்கூடியதாக இருக்கவில்லை. மக்கள் அவற்றை வெறுப்புடனேயே பார்த்தனர். பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னரே அச்சுப்பதித்த நூல்களை யும், துண்டுப்பிரசுரங்களையும் வாசிக்கத் தொடங்கினர். (Digby,1875:6)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இப்பத்திரிகை களை அவை வெளியிடப்பட்ட மொழியை அடிப்படையாகக் கொண்டு, பின்வருமாறு மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. ஆங்கிலப் பத்திரிகைகள் (English Papers)
2. ஆங்கில - பிரதேச மொழிப்பத்திரிகைகள் (Anglo –Vernacular Papers)
3. பிரதேச மொழிப் பத்திரிகைகள் (Vernacular Papers)

1875ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய பகுதிகளில் 166 ஆங்கிலப் பத்திரிகைகளும், 382 ஆங்கில- பிரதேச மொழிப்பத்திரிகைகளும், பிரதேச மொழிப்பத்திரிகைகளும் வெளியிடப்பட்டிருந்தன. இது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், அரச மொழியாக ஆங்கிலம் இருந்த போதிலும், மக்களின் தொடர்பு ஊடகம் என்ற வகையில் பிரதேச மொழிகள் பெற்றிருந்த முக்கிய பங்கினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. அக்காலத்தில் மிஷனரியாகவும், பத்திரிகையாளனாகவும், இலங்கையிலும் இந்தியாவிலும் தொழிற்பட்ட வில்லியம் டிக்பி, அக்காலத்தில் இப்பகுதி களில் வெளிவந்த, பிரதேசம் சார்ந்த பத்திரிகைகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதிவெளியிட்டுள்ளார் (Digby, 1875: 1-40). 1875 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இக்கட்டுரையே பிரதேசம் சார்ந்த பத்திரிகைகள் பற்றி முதன்முதலாக எழுதப்பட்ட கட்டுரையாக இருக்கலாம்.

ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கமே அச்சுக்கலையின் உபயோகத்தை இலங்கையருக்கு அறிமுகப்படுத்தியது. அமெரிக்க மிஷனரிமார்கள், கல்வி விருத்தியின் பொருட்டு 1820 இல் அமெரிக்காவிலிருந்து அச்சியந் திரத்தினை வரவழைத்தனர். அதற்கான எழுத்துக்களை இந்தியாவிலிருந்து பெற்றனர். அதற்கு இலங்கை ஆள்பதி தடை விதித்தமை காரணமாக அந்த அச்சியந்திரம் நல்லூர் சேர்ச் மிஷன் சபையினரிடம் கொடுக்கப் பட்டது. அவர்கள் அந்த இயந்திரத்தின் வழியாக ‘முத்தி வழி’ என்ற ஆக்கத்தினை வெளியிட்டனர். அந்த அச்சியந்திரம் அமெரிக்க மிஷனரி மார்களால் மீளப்பெறப்பட்டு, 1834ஆம் ஆண்டில் மானிப்பாயில் பதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. அவர்களே 1841இல் யாழ்ப் பாணத்தின் முதலாவது பத்திரிகையாக, 'உதய தாரகை' எனத் தமிழிலும் 'Morning Star' என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப் பத்திரிகையினை வெளியிட்டனர். (வேலுப்பிள்ளை, 1984:132, இராச நாயகம், 1934: 130). இதுவே யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையின் ஆரம்பமாக அமைந்தது.

1853 இல் வைமன் கதிரவேற்பிள்ளை 'வித்தியாதர்ப்பணம்' (Literary Mirror) என்ற பத்திரிகையை வெளிப்படுத்தியிருந்தார். 1862ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து, கூல்ட் என்பவர் 'Jaffna Freeman' என்ற ஆங்கிலப் பத்திகையைத் தொடக்கி நடாத்திவந்தார். அப்பத்திரிகை சிறிது காலத்தில் வெளிவராதுபோனது (இராசநாயகம்,1934:17).

1863ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 'Ceylon Patriot' (இலங்காபி மானி) என்னும் ஆங்கிலப் பத்திரிகையை, நியாயவாதியான (Advocate) (முன்குறிப்பிட்ட) வைமன் கதிரைவேற்பிள்ளை பிரசுரிக்க ஆரம்பித்தார். 1865 ஆம் ஆண்டில் சலோமன் ஜோன்பிள்ளை என்பவர் அப்பத்திரிகைக்குச் சொந்தக்காரனும், ஆசிரியருமானார். அவருக்குப் பின் நியாயதுரந்தரராகிய ஆ. கதிரவேலு, அவர் தம்பி ஆ. கனகரத்தினம் முதலியோர் அப் பத்திரிகையை நடாத்தி வந்தனர். 1871ஆம் ஆண்டில் ஹியுஸ் (Hughes) என்பவரால் 'Jaffna News' என்னும் ஆங்கிலப் பத்திரிகை வெளியிடப் பட்டது. இது சிறிது காலத்தில் வெளிவராது போனது. (Martin, 1922: 218)

1876ஆம் ஆண்டில் 'சத்திய வேத பாதுகாவலன்' எனத் தமிழிலும் 'Catholic Guardian' என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப் பத்திரிகை, கத்தோலிக்க மதம் சார்ந்த பத்திரிகையாக வெளிவந்தது (ஜெயசீலன், 1997:155). 1877இல் 'இலங்கை நேசன்' ('Lanka Snahan' பத்திரிகையும், 1880இல் 'சைவ உதய பானு' எனும் பெயர் கொண்ட பத்திரிகையும், 1881இல் 'சைவசம்போதினி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் 1882இல் 'விஞ்ஞான வர்த்தனி' என்ற பத்திரிகையும் வெளியிடப்படத் தொடங்கின. 1884ஆம் ஆண்டில் 'சைவாபிமானி' என்ற பத்திரிகை வல்வை பொ.ஞானசபாபதிப்பிள்ளை என்பவரால் தொடங்கி நடத்தப்பட்டதென அறிய முடிகிறது. (சிவனேசச்செல்வன், 1974:349) 1885 தொடக்கம் 'சன்மார்க்க போதினி' என்ற பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கியது. 1889இல் 'இந்து சாதனம்' வெளியிடப் பட்டது. 1899 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகளையும் கொண்ட இருமொழிப் பத்திரிகையாகவே இப்பத்திரிகை வெளிவந்தது. (Martin, 1922: 218).

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. அப்பத்திரிகைகளுள், 'திராவிட கோகிலம்', 'சுதேச நாட்டியம்', 'விவேகானந்தன்', 'ஞானசித்தி', 'இந்து பாலபோதினி', 'விஜயபானு', 'குருசந்திரோதயம்', 'சைவ சூக்கு மார்க்க போதினி', 'விஜயலக்சுமி', 'மகாவிஜயலச்சுமி', 'ஆத்மபோதினி', 'சண்முகநாதன்', 'பால பாஸ்கரன்' போன்ற பத்திரிகைகளின் சில பிரதிகளை யேனும் பெறக்கூடியதாக உள்ளது. 'பால பாஸ்கரன்' யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட முதலாவது தினசரிப்பத்திரிகை என்ற சிறப்பிற்குரியது. இவற்றுள் 'திராவிட கோகிலம்', 'விவேகானந்தன்' ஆகிய பத்திரிகைகள் இரு மொழிப்பத்திரிகைகளாக வெளிவந்தவையாகும். மேலும், இக்காலப் பகுதியில் 'கலியுகவரதன்', 'சைவபால்ய சம்போதினி', 'ஞானப்பிரகாசம்', 'லங்கா' போன்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்தன என்ற தகவலும் அறியக்கிடக்கிறது. பின் சொல்லப்பட்ட பத்திரிகைகள் எவையும் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கான காரணங்கள்

இக்காலத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவந்தமைக்கான காரணங் களை இனங்காண்பதும் அவசியமானதாகும். இதற்குப் பின்வரும் பல காரணிகள் ஏதுவாக அமைந்தன:

1. அதிக அச்சியந்திரங்களின் வருகை- பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட அச்சுத் தொழின்முறையே 1910 ஆம் ஆண்டு வரை வழக்கத்தில் இருந்தது. 1921ஆம் ஆண்டில் யாழ்குடாவில் பெரிதும் சிறிதுமாக 12 அச்சுக்கூடங்கள் இருந்துள்ளன (வேலுப் பிள்ளை, க., 1921:327). இவை யாழ்ப்பாணத்தில் அச்சுக் கலை பரவலடைந்திருந்ததைக் காட்டும் தரவாக அமைகின்றது.

2. கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு- ஒரு சமூகத்தில் கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு பத்திரிகை வாசிப்போரின் எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒரு முக்கியமான அம்சமாகும். மரபு வழிக்கல்வியின் தொடர்ச்சியும், பாடசாலைகளின் உருவாக்கமும் வாசகர்களை உருவாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் 1910-1911 காலப்பகுதியில் தான் இலங்கையில் கட்டாயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் மிகவும் கூடுதலான வாசகர்கள் தொகை பெருகியிருத்தல் எதிர்பார்க்கக் கூடியதாகும்.

3. புகையிரதப்பாதை போடப்பட்டமை - 1905ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் - கொழும்பு புகையிரதப்பாதை திறக்கப்பட்டது. அதற்கு முன்னர் தரைவழியான தொடர்புகளும் கடல் வழியான தொடர்பு சாதனங்களும் பாவனையில் இருந்தன. பெரும்பாலும் கடல் வழிப் பிரயாணமே யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியப் பகுதிகளுக்கும் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கொழும்புக்குச் செல்வதை விடக் குறைந்த காலத்தில் இந்தியப்பகுதிகளுக்குச் செல்வதும், இந்தியா வில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதும் இலகுவாக இருந்தது. கடல் வழியாக இந்தியாவில் இருந்து பொருட்களை இலங்கைக்குக் கொண்டு வருவதும் சாத்தியமாக இருந்தது. அச்சுயந்திர சாதனங் களும் இவ்வாறு இந்தியா வழியாக இலங்கைக்கு கொண்டுவரப் பட்டமைக்கான நியாயங்களுள்ளன. இது யாழ்ப்பாணத்தில் அச்சுத் தொழில் மேலோங்குவதற்கு வாய்ப்பளித்தது.

4. இலங்கையின் ஏனைய பகுதிகள், இந்தியா, மலாயா தீபகற்பம், ஆபிரிக்கா என்பவைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்ற நிலையில் ஏற்பட்ட பணப்புழக்க அதிகரிப்பு- யாழ்ப்பாணத்தவர்கள் இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வெளியே தொழில் வாய்ப்புப் பெற்றமை பணப்புழக்கம் அதிகரிக்கவும், அப்பகுதிகளில் தங்கி வாழ்கின்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விடயங்களை அறிந்து கொள்வதற்கான உதவும் சாதனங்களான பத்திரிகைகள் வளரவும் வாய்ப்பளித்தது. அத்துடன் இத்தகைய பணவருவாய் பெற்றவர்கள் தமது பெருமைகள் பத்திரிகைகளில் வருவதை விரும்பினர். தமது அல்லது தமது குடும்பத்தவர்களின் சுக, துக்கச் செய்திகளை பத்திரிகைகளில் வெளியிடவும் ஆர்வம் காட்டினர். இதன்மூலம் பத்திரிகைகள் வருவாய் பெற்றதோடு, பத்திரிகைகளின் விற்பனையும் அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கலாம்.

5. வாசிப்புப் பழக்கம் வளர்ச்சியடைந்தமையும், வாசிப்பின் அவசியம் வேண்டப்பட்டமையும்- பத்திரிகை வாசிப்பின் தேவை இக்காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தது. பாடசாலைகளில் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டன. வாசகர்களுக்கான தனியார் வாசக நிலையங்களும் உருவாக்கப்படத் தொடங்கின. தொழிலாளர்கள் மத்தியிலும் உலகவிடயங்களை அறிந்து கொள்ளும் வகையில் பத்திரிகை வாசிப்பு வளர்ச்சியடையத் தொடங்கியதென்பது பொதுவான அபிப்பிராயம். பிற்காலத்தில், யாழ்ப்பாணச் சுருட்டுக் கொட்டில்களில் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு பத்திரிகை வாசிப் பதற்கென்றே ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டு, பத்திரிகைகள் வாசித்தல் நடைபெறுவதைப் பலரும் அறிவர். 1900 -1920 காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழில் பெரும் தொழிற்றுறையாக வளர்ந்திருந்ததையும், சுருட்டுத் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும், வேலைநிறுத்துங்கள் மேற் கொண்டு வெற்றி பெற்றதையும் அறிகிறோம் (சு.நா. 20.03.1911). தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாக, வசதிமிக்க குடும்பப் பெண் களும் கல்வி வாய்ப்புப் பெற்றிருந்தமை காரணமாக, வீட்டில் இருந்து கொண்டே பல்வேறு விடயங்களை அறிந்து கொள்வதற் காகவும், பொழுது போக்கிற்காகவும் பத்திரிகைகள் வாசித்தனர். பத்திரிகைகளில் சமய, இலக்கிய விடயங்கள் மட்டுமன்றி உலகில் இடம்பெறும் முக்கிய விடயங்களும் எழுதப்பட்டு வந்ததால் அவற்றை அறியக் கொடுக்கும் ஒரே தொடர்பு ஊடகமாகப் பத்திரிகை களே அக்காலத்தில் தொழிற்பட்டன.

6. பொதுசன அபிப்பிராயத்தின் வெளிப்பாட்டுச் சாதனம் - சமூகத்தில் கருத்துக்களை நிறுவுவதற்கும் நிராகரிப்பதற்கும் உரிய சாதனமாகப் பத்திரிகைகளே விளங்கின. ஆரம்பத்தில் சமயம் சார்ந்த கருத்துக் களையும், விமர்சனங்களையும், விவாதங்களையும் தாங்கி வந்த பத்திரிகைகள் பின்னர், மொழி சார்ந்த விடயங்களையும், பிற விடயங்களையும் எழுதத் தொடங்கின. அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு பற்றிய விடயங்களும் இக்காலத்தில் கவனத்திற் கொள்ளப்படுவதாக வரத் தொடங்கியிருந்தன. 1910ஆம் ஆண்டில் வெளிவந்த யாழ்ப்பாணப் பத்திரிகையான விஜயலட்சுமி பத்திரிகை யின் தன்மை பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:

> ‘புதினப்பத்திரம் வாசிப்பவர் அரசினர்க்குத் தாம் செய்ய வேண்டிய கடமைகளையும், தம்சாதியாரின் நிலையையும், பிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதியாரின் நிலையையும், அறிகின்றார்கள். புதினப்பத்திரமானது வாசிப்போர்க்கு ஒற்றுமையையும், தேசாபிமானத்தையும், மனிதாபி மானத்தையும், சாதியபி மானத்தையும், உண்டு பண்ணுகிறது மட்டுமல்லாமல், எமது குறைகளை அரசினர்க்கு விண்ணப்பஞ் செய்யவும் சாதனமாகவிருக்கின்றது. ஓர் சாதியாரின் நாகரீகமானது அச்சாதியாருட் பரவும் வித்தியாசாலை, புதினப்பத்திரம் முதலிய வற்றானே நன்கு விளங்கும். ஆராயுமிடத்துப் புதினப்பத்திரமே ஓர் சாதியாரின் நாகரீக விர்த்திக்குப் பெரும்பான்மையும் ஏதுவாயிருக்கிறது.' (விஜயலட்சுமி: 10.05.1910).

மேற்படி கூற்றிலிருந்து, அக்காலப் பத்திரிகை ஆசிரியர்கள் புதினப்பத்திரிகைகள் பற்றிய அடிப்படையான விடயங்களை, அறிந்து வைத்திருந்ததோடு அதன்படி காரியங்களைச் செய்திருந்தனர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

சமூக நீதி, நியாயங்கள், அநீதிகள், தனிநபர்களின் நியாயங்கள், ஒழுங்கீனங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சாதனங்களாகவும் பத்திரிகைகள் செயற்பட்டன. அரசாங்கத்தை நேரடியாக விமர்சிக்க முடியாத, அல்லது விமர்சிக்க விரும்பாத இச்சமூகத்தவர்கள், ஆட்சி யாளர்களின் கீழ் கடமையாற்றிய உத்தியோகத்தவர்களைத் தமது இறுக்கமான சமூகக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முனைந்தனர். அவர்களின் தன்னிச்சையான போக்கினைத் தடுக்கும் வழிமுறை யாகவும் பத்திரிகைகளில் எழுதுதல் காணப்பட்டது. அந்த வகையில் பத்திரிகைகள் ஒரு பலமான ஆயுதமாக வளரத் தொடங்கியது. இத்தகைய போக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தென்னிலங்கையிலும், இந்தியாவிலும் காணப்பட்டதையும், அவை காரணமாக பல குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன என்பதையும் டிக்பியும் (the terror to evil-doers) சுட்டிக்காட்டியுள்ளார். (Digby,1875:9 -10).

7. அச்சுவேலை ஒரு தொழிற்றுறையாக வளர்ந்தமை - அச்சு இயந்திரங் களை அமைத்தவர்கள், தமது வியாபாரத்தின் பகுதி நேரக்காரியமாக, பத்திரிகைகளை வெளியிடக்கூடிய வாய்ப்புகள் இருந்தமை, இத்தகைய பத்திரிகைகளின் வெளியீட்டிற்கு இடமளித்த மற்றுமோர் முக்கிய அம்சமாகும். இக்காலத்தில் கல்வி கற்றுத் தொழில் வாய்ப்புப் பெற்று இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்தவர்களும், வெளிநாடுகளில் சென்று வாழ்ந்தவர்களும் பெற்ற பணவருவாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மத்தியில் புதிய கலாசார அடையாளங்களை உருவாக்கவும், தம்மை அந்தஸ்து மிக்கவர்களாகக் காட்டிக் கொள்வதற்கும், அச்சு ஊடகப்பயன்பாடும், பத்திரிகைகளும் அவசியமாயின. இதனால் பல அச்சியந்திரசாலைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்தன. அவை இத்தகைய பதிப்பு வேலைகளைச் செய்ததுடன் பத்திரிகை களையும் அச்சிட்டன. அச்சியந்திரச் சொந்தக்காரர் கவிஞராகவும், பத்திராதிபராகவும், இலக்கியகர்த்தாவாகவும், பதிப்பாளராகவும் தொழிற்படக்கூடுமாயிருந்தது. விவாகச் செய்திகளை வெளியிடல், மரண அறிவித்தல்களைப் பதிவு செய்தல், சமரகவிகள் வெளியிடல், உத்தியோக உயர்வு, உத்தியோக இட மாற்றம் ஆகியவற்றை அறியப் படுத்தல் என்பவற்றிற்குப் பத்திரிகைகள் களமாக அமைந்தன. அது மட்டுமன்றி, திருமண விஞ்ஞாபனப் பத்திரங்கள், கிருகப் பிரவேச விஞ்ஞாபனப் பத்திரங்கள், திருமணப் பாராட்டுப் பத்திரங்கள், தாம்புலப்பைகள் ஆகியவற்றை அச்சிடும் முறை வழக்கத்திற்கு வந்திருந்தது. இறந்தவர்களின் அந்தியேட்டி நாளில் கல்வெட்டு அல்லது சமரகவிகள் இயற்றுவித்து அச்சிட்டு வெளியிடும் வழக்கமும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

ஆய்வுரையின் தலைப்பும் ஆய்வு பற்றிய விளக்கமும்

'சுதேசநாட்டியம் பத்திரிகையும் கல்லடி வேலனும்: 1902 - 1915' என்ற தலைப்பில், இந்த கட்டுரையினைத் தயார் செய்தமையின் நியாயங்கள் சிலவற்றைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. ஒரு பத்திரிகை பற்றிய விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதன் நோக்கம் அக்கால சமூகம் பற்றிய ஒரு பருமட்டான அறிவைப் பெறக்கூடியதாக அமையுமென்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணம் பற்றிய விடயங்களை அறிவதற்கு அரசாங்கப் பிரசுரங்கள், மதநிறுவனத்தினரின் அறிக்கைகள் -நூல்கள், தனியாட்களால் செய்யப்பட்ட நூல்கள், கட்டுரை கள், இலக்கியங்கள், கடிதங்கள், அச்சிற்பதிப்பிக்கப்பட்ட உரைகள் எனப் பலதரப்பட்ட ஆதாரங்களைப் பெறமுடியும். இவற்றுடன் அக்காலத்ததில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மிக முக்கியத்துவம் மிக்க ஆதாரங்களாக அமையும்.

பத்திரிகைகளில் வந்துள்ள விடயங்களை, வரலாற்றுத்தரவுகளாகப் பயன்படுத்துவதில் உள்ள பலம், பலவீனம் ஆகியவற்றையும் வரலாற்று ஆய்வாளன் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைச்சாதனம் பத்திரிகைக்கும் வாசகனுக்குமுள்ள ஊடாட்டம் என்ற அடிப்படையில் இயங்கும் சாதனமாகும். இங்கு பலஅம்சங்கள் ஒரு மையத்தில் குவிக்கப்படுகின்றது. அதுவே அப்பத்திரிகை வெளிவரும் பிரதேசமும், அங்கு வாழ்கின்ற மக்கட் கூட்டத்தினரும் ஆவர். இதனைக் குறிப்பதற்கு சமூகம் என்ற சொல்லைப் பயன்படுத்தலாம். ஒரு சமூகத்தில் பல்வேறு நோக்கம், தேவை, எதிர்பார்ப்பு, பிரச்சினைகள் ஆகியவற்றைக் கொண்டவர்கள் இருப்பர் என்பது பொதுவான விடயம்.

ஒரு பத்திரிகையானது பத்திரிகையின் ஆசிரியர், (அவருடைய அறிவு, இலக்கு, கருத்துநிலை ஆகியவையும்), பத்திரிகைச்சாதனங்களின் உரிமையாளர், பத்திரிகையில் அலுவல் செய்வோர், பத்திரிகையில் விடய தானம் செய்பவர்கள், (தகைமை, சிந்தனை) என்ற ஒரு தொகுதியினரைக் கொண்டதாக இருக்கும். அத்துடன், அந்தப்பிரதேசத்தில் அதிகாரம் பெற்றவர்களின் கட்டுப்பாடுகள் எவ்வாறிருந்தன என்றதன் அடிப்படை யில், அவ்வரையறைகளை அனுசரித்து வெளிவர வேண்டியதாகவும் இருந்திருக்கும். அடுத்தபடியாக, அந்தப் பத்திரிகையின் நிதிமூலத்தின் நிபந்தனைகளுக்கும், அம்மூலத்தின் தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற் றையும், நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும். இதன் பின்னர், இப்பத்திரிகையை வாசிப்பவர்களின் விருப்பு, தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும்.

இவ்வாறு அமைந்திருக்க்கூடிய விடயங்களை மையமாகக் கொண்டே எந்தவொரு பத்திரிகையும் வெளிவரும். இவற்றை அறிந்து கொள்வதும், விளங்கிக் கொள்வதும், சாத்தியமாகும் பட்சத்திலேயே, அப்பத்திரிகையின் தகவல்கள், கருத்துக்கள் ஆகியவற்றை நாம் வரலாற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளவும், அப் பத்திரிகையை மதிப்பீடு செய்யவும் இயலும்.

இந்த வகையில் இக்கட்டுரையானது, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து வெளிவந்த மேற்படி பத்திரிகையைக் கவனத்தில் எடுக்கும் போது, இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செய்த பிரித்தானிய காலனித்துவத்தின் மேலாண்மைக்குட்பட்டே இப்பத்திரிகை பிரசுரமாகியது என்பதை அறிவோம். இதனால் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு விரோதமான விடயங்களை இப்பத்திரிகை தாங்கியதாக வந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது. பத்திரிகைச் சாதனங்களை உடைமையாகக் கொண்டவராக பத்திராதிபர் இருந்த காரணத்தினால், அச்சக உரிமையாளரால் ஏற்படக்கூடிய தாக்கம் இவருக்கும் சுதேச நாட்டியம் பத்திரிகைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் பத்திராதிபரே குற்றம் காணப்பட்டு சிறை பெற்றவராக இருந்த காரணத்தினால், 1910 ஆம் ஆண்டின் பின்னர், கல்லடி வேலன் சுதேச நாட்டியம் பத்திரிகையின் முகாமையாளராகவும், அவர் சிறை சென்ற காலத்தில் பத்திரிகை நடத்திய க. நல்லதம்பி என்பவரே தொடர்ந்து பத்திராதிபராகவும் இருந்தார். இதனால், 1910ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றிருந்த தனியாண்மையைத் தொடரும் நிலை, பின்னர் குறைவடைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அது மட்டுமன்றி கால ஓட்டங்களுக்கு, ஏற்ப இடம்பெறும் மாற்றங்களும் பத்திரிகையின் வடிவமைப்பிலும், போக்கிலும், எண்ணம், சிந்தனைகளிலும் மாற்றங்கள் இடமளிப்பதற்கு வழி செய்திருக்கும்.

சுதேச நாட்டியம் பத்திரிகையின் நிதி வளத்தினைப் பார்க்கும் போது, அதன் ஆசிரியர், தாமே சொந்தமாக அச்சகம் வைத்திருக்கும் நோக்குடன் பலர் வழங்கிய உதவியால் அச்சுயந்திரம் ஒன்றை இந்தியாவில் இருந்து வாங்கி வந்திருந்தார்.

> ‘எமது சுயபொறுப்பிலோர் அச்சியந்திரம் நாம் வைத்திருக்க வேண்டுமென்றும், அதில் எமததிகாரத்துள் ஓர் புதினப்பத்திரம் நடைபெறவேண்டுமென்றும், நெடுநாளாய் நம்முட்குடிப்புக்கிருந்த பேரவாவை அனுகூலப் படுத்தமுயன்று, நாம் இலங்கையில் பற்பல பிரதான இடங்களிலும் இருக்கும் எமது நண்பராயுள்ள கனவான்களைப் போய்ச் சந்தித்தபோது, அவர்கள் மிக்கமரியாதையோடும் அன்போடும் அனுசரித்து உபசரித்து ஏற்ற உதவி செய்து எம்மனதைத் தளர்வுறாது உச்சாகப்படுத்திவிட்டனர். அவர்களின் நன்றியை விளக்கவும், அவர்களை நம் சிந்தைமறக்காமையைக் குறிக்கவும், அப்பிரபுக்களின் நாமதேயங்களையும் உபகரித்த தொகையையும், பின்வரும் பத்திரிகைகளின்கீழ்க் காட்டுவோம். எமதெண்ணத்தைக் கடைத்தேறுமாறு செய்து எமது நண்பர்க்கு எம் சீவியகாலம் முழுதும் மிக்க பயபக்தியும் கடமையும் பூண்டதாயிருக்கும்.’

இவ்வாறு அமைந்து காணப்படும் பத்திரிகைத்தகவல் பத்திராதிபரின் தனியான தன்மையைத் தெரிவிக்கும்வேளையிலேயே அவருக்கு உதவியாக உயர் வகுப்பினர் எனக் கருதக்கூடிய ஒரு பிரிவினரின் ஆதரவு இருந்ததையும் காட்டுவதாக உள்ளது. அதே பத்திரிகையில் தொடர்ந்து இடம் பெறும் பகுதி, அக்காலத்தில் இவருக்கு உதவியிருக்கக்கூடிய அல்லது, இவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்திருக்கக்கூடியவர்களில் சிலரின் பெயர்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> 'உபகரித்த பணத்தைக் கொண்டே யாம்சென்னபட்டணஞ்சென்று ஓர் அச்சியந்திரத்தையும் அதற்காம் சமஸ்தள பாடங்களையும் கொண்டு வந்து நம் அச்சியந்திரசாலையில் சேர்த்துவிட்டு சென்ற ஆனி மீ எ உ சனிக்கிழமை சுபமுகூர்த்தத்திலே முதல் முத்திரீகரணவேலையை ஆரம்பித்தோம். அன்று வலிகாமம் வடக்குமணியகாரன் ஸ்ரீ குமாரகுல சிங்கம், அப்புக்காத்து ஸ்ரீ ஐசக் தம்பையா, யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ கென்சுமன், ஸ்ரீ பரமசாமி, சுன்னாகம் பகுதிப்பராபத்தியக்காரன் ஸ்ரீ செல்லப்பா, பிறக்றர் ஸ்ரீ சி. பொன்னம்பலபிள்ளை, திருநாவுக்கரசு, வலிகாமம் மேற்கு மணியகாரன் ஸ்ரீ தில்லைநாதபிள்ளை முதலிய அனேக உத்தியோகஸ்தர்களும், பல இடங்களிலுமிருந்து இன்னும் அனேக சாமான்ய பிரபுக்களும் வந்துகூடினார்கள். சுதுமலை ஸ்ரீ முத்துக் குமாரபிள்ளை வைத்தியர் தற்காலம் யாழ்ப்பாணத்தில் வாத்தியத்தாற் பிரபலகீர்த்தி பெற்று விளங்கும் சொக்கலிங்கம், வயிரு எனப் பெரிய வாத்தியக்காரரையும், அவர் குழுவினரையும் அவர்கள் வாத்தியக் கருவிகளோடு அழைத்துவந்து நமது சபையைத் தமது சபையாக மதித்துக் கொண்டாடினர்
>
> அன்று பொச்சாப்பினாலும், சாவகாசமின்மையாலும் வராதுவிட்ட சில உத்தியோகஸ்தரும், பிரபுக்களும் மறுநாள் வந்து, நம்மைச் சந்தித்ததோடு பத்திரிகையையும், அச்சியந்திரத்தையும் நடப்பிக்கும் வழிகளைக் குறித்தும் எமக்குப் பெரும் புத்திமதியும் புகட்டினார்கள்.' (சு.நா. 15.09.1902).

இவ்வாறு கிடைத்துள்ள அத்தகவல் க.வே. சாதாரண யாழ்ப்பாணத்தவர் என இருந்தாலும் அக்காலத்தில் வாழ்ந்த உயர் வகுப்பாரின் ஒரு பகுதி யாருடன், நெருக்கமான தொடர்பு கொண்டவர் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. அது மட்டுமன்றி உயர் வகுப்பினரில் மற்றுமொரு பாலார் சம்பிரதாய அளவிலான தொடர்புகளைக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வேளையில் அவர் அக்காலத்தில் இந்தியாவில் வெளிவரும் பத்திரிகைகள் பற்றிய நுட்பங்களையும் அறிந்து வந்திருப்பதற்கும் இட முண்டு. அச்சக உடைமையாளர் என்ற வகையில், நூல்கள், பிறபதிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டமையால் பத்திரிகை வெளியிடுதல் என்பது, பகுதி நேரக் காரியமாகவே அமைந்துள்ளதென்பதும், அறியப் படும். இதனால் பத்திராதிபர் குறிப்பிடத்தக்க அளவுக்கு தாம் விரும்பிய வகையில், பத்திரிகையை வெளியிடக்கூடியதாக இருந்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் பத்திரிகையின் பிரசுரிப்பு, தொடர்ச்சி அல்லது நீட்டம் ஆகியவை பத்திராதிபருக்கும் வாசகர்களுக்கும் இடையிலான தொடர்பு, ஊடாட்டம் ஆகியவற்றை மையப்படுத்தியதாகவும், இரு சாராருக்கும் இடையில் காணப்படும் நெருக்கத்திலுமே தங்கியிருப்பதாக இருந்தது. இங்கு வாசகர்களின் எதிர்பார்ப்புகளைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் பத்திரிகை நடத்தப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

இவ் ஆய்வுரையின் கால வரையறை

சுதேசநாட்டியம் பத்திரிகை 1902ஆம் ஆண்டு தொடக்கம், 1947ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் முதலில் வெளிவந்த 1902 தொடக்கம் 1915 ஆம் ஆண்டுவரையிலான காலகட்டத்திற்குரிய பத்திரிகை களை மட்டும் மையப்படுத்திய வகையிலேயே இன்றைய உரை அமையும் என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு காலவரையறை செய்வதற்குப் பல காரணங்கள் உண்டு.

நாற்பது வருடங்களுக்கு மேல் வெளிவந்த பத்திரிகைகளை முழுமை யாக ஒரு கட்டுரைக்குள் அடக்க முடியாது.

பத்திரிகையின் ஆரம்ப காலப்பகுதி பற்றிய ஆய்வு முதலில் இடம் பெறுவது அவசியம்.

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்த (அவை பற்றிய பொதுவான பல விடயங்கள் இந்த ஆசிரியரால் முன்னர் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் அடங்கியுள்ளது) போதிலும் முதலில் வெளிவந்த மத சார்பற்றதும், சமூகவிடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததுமான பத்திரிகையாக இந்தப் பத்திரிகை அமைந்திருப்பது.

இந்தப் பின்னணியில் இருந்து கொண்டுதான் 1902 - 1915 வரை வெளியிடப்பட்ட பத்திரிகைகளை நோக்க வேண்டியுள்ளது. இக்காலப் பகுதியில் வெளியிடப்பட்ட சொற்ப பத்திரிகைகளே கைக்குக் கிடைத் துள்ளன. அவற்றின் அடியொற்றியதாகவே இவ்வுரை அமைகிறது. இக்காலப் பகுதிக்குரிய மேலதிக பத்திரிகைகள் கிடைப்பின் இக்கட்டுரை யின் கருத்துக்களில் மாற்றங்கள் இடம்பெறவும் வாய்ப்புகளுண்டு.

கல்லடி வேலுப்பிள்ளையால் நடத்தப்பட்ட 'சுதேச நாட்டியம்' என்ற பத்திரிகை 1902ஆம் ஆண்டு தொடக்கம் பிரசுரமாகத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 'டெமி' அளவில் வெளியிடப்பட்டது. பட்சமிரு முறையாக வெளியிடப்பட்டதால் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் வெளி வந்தது. ஆரம்ப காலத்தில் பிரசுரமான பத்திரிகைகள் இன்று நாம் காணுகின்ற பத்திரிகைகளின் அம்சங்களையெல்லாம் உள்ளடக்கி வந்தன வெனக் கூற முடியாது. உதாரணமாக ஆசிரியர் தலையங்கம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வெளிவருவது போன்று கண்டிப்பான முறையில் வெளியாக வில்லை.

இப் பத்திரிகை, யாழ்ப்பாணத்தவர்களின் அபிப்பிராயத்தை வெளிப் படுத்தும் எண்ணம் கொண்டதாய், 'The Jaffna Native Opinion' என்ற ஆங்கிலப் பெயரைக் கொண்டு வெளிவந்தது. 'சுதேச நாட்டியம்' என்ற இப்பெயர் வேலனின் சிலேடை மொழிக்கு மிகச் சிறந்த உதாரண மெனலாம். இப்பெயருக்குப் (சுதேசம் நாடு இயம்) பல பொருள்களைக் காணமுடியும். ஆவையாவன:

- ★ சுதேசிகளின் நாடு பற்றிய விடயம்,
- ★ சுதேசிகளின் எண்ணங்கள், அல்லது அபிப்பிராயங்கள்,
- ★ உள்ளூரவர்களின் சமூக ஆட்டம்,

இப்பத்திரிகையின் தலைப்புத் தெரிவு பற்றி, ஆசிரியர் தமது முதற் பிரதியில்,

> 'இவ்வாறோர் பத்திரிகையை நாம் நடப்பிக்க முயன்றிருப்பதை அறிந்த வரான நம் விசேஷ நண்பர் சிலர் நேற்றிவ் ஒப்பினியன் (Native Opinion) பத்திராதிபரை உமக்கு நண்பராக்கிக் கொண்டாலோ என்றும், உமது பத்திரிகையின் நாமமும் நேற்றிவ் ஒப்பினியன் என்றிருந்தாலோ என்றும் எம்மோடு பரிகாசமாய்ப் பேசியதை ஞாபகப்படுத்தவும் அவர் எம்மேற் கொண்ட தவறான எண்ணத்தை அவர்க்கெம் செய்கையால் காட்டவேண்டுமென்றாஞ்சித்துமே நேற்றிவ் ஒப்பினியன் என்னும் பெய ரோடு அப்பொருட்பொதிந்த 'சுதேசநாட்டியம்' என்னும் பெயரையும் இப்பத்திரத்திற்குச் சூட்டலாயினேம்.' (சு.நா. 15.09.1902).

'Native Opinion' என்ற பெயர் தாங்கிய பத்திரிகையொன்று பம்பாயிலும், (Digby,1875:22)' Native Public Opinion' (Digby, 1875:23) என்ற பெயர் தாங்கிய பத்திரிகையொன்று சென்னையிலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயம் யாழ்ப்பாணத்தின் ஆங்கிலம் கற்ற வகுப்பினர் மத்தியில் அறியப்பட்ட விடயமாக இருந்திருப்பதில் ஆச்சரியமில்லை. அதனாலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலன் குறிப்பிட்ட வகையில் அவருடைய பத்திரிகையின் பெயர் பற்றிப் பரிகாசம் செய்திருந்தனர்.

'சுதேச நாட்டியம்' பத்திரிகை தொடங்கப்பட்டதன் நோக்கம் பற்றி அதன் ஆசிரியர் தமது முதலாவது பத்திரிகையில், பின்வரும் வகையில் குறிப்பிட்டுள்ளார்:

> 'நாமிப் பத்திரிகையை ஒருவரைத் தூஷிக்கும் நோக்கமாயல்ல, எமது நயத்துக்காகவும், பிறர்க்கு விஷேச சற்புத்திகளையும், நூதன சம்பவங்களையும், பிற தேச வர்த்தமானங்களையும் அறிவிக்கும் நோக்கமாகவுமே தொடங்கினோம்' (சு.நா. 15.09.1902).

இங்கு கல்லடி வேலுப்பிள்ளை தமது பத்திரிகை வெளியிடுகையின் நோக்கை மிகவும் வெளிப்படையான வகையில் கூறியிருப்பது அவதானிக் கத்தக்கது. பத்திரிகை வெளியீட்டிற்கான பணத்தின் அடிப்படை பற்றி இங்கு குறிப்பிடல் வேண்டும்.

இவரது பத்திரிகையின் தொடக்கத்தில் இருந்து 1932 ஆம் ஆண்டு வரையான பத்திரிகைகளில் பின் வரும் பாடல் முகப்புக்கவிதையாக இடம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

சுகந்தா நிதியந்தா தூய திடநெஞ்
சகந்தா செய கந்தா வையா - செகந்தாவி
யாடுமயி லேறிவிழை யாடசுர ரோடுசம
ராடுகுக வாறுமுக வா.

1930களில் இருந்து வெளி வந்த பத்திரிகைகளில் 'யதார்த்தவாதி, - வெகு ஜன விரோதி' என்ற மகுட வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது. (சு.நா.16.11.1932).

சுதேச நாட்டியத்தின் முகப்பு பக்க வடிவமைப்பில் வரைபுகளின் சிறப்பு

ஆரம்ப காலத்தில் அதன் முகப்பில் வரையப்பட்டிருந்த சித்திரம், ஒரு புறத்தில் பனை மரமும், மறு பக்கத்தில் தென்னை மரமும் பதியப்பட்ட தாகவும், நடுவில் இடது கைப்பக்கம் பார்த்தவண்ணம் நிற்கும் வகையில் குடும்பியுடன் உள்ள மனித உருவமானது, வலது கைத்தோளின்மேல் துணித்துண்டை அணிந்ததாகவும், இடது கையில் பத்திரிகையை வைத் திருக்கும் வகையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அந்த மனித உருவத்தின் ஆடையும், தோற்றமும் காலனித்துவ செல்வாக்கினால் மாற்றப்படாத, சுதேசியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது எனக் கருதமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுதேச நாட்டியம்' பத்திரிகையில் கூடியளவு மனங்கவர்ந்த விடயம் அதனுடைய முகப்பு வரைபுகள் எனலாம். குறிப்பாக, 1909ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த பத்திரிகைகளின் முகப்பு வரைபு, எவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டதாகும். அச்சுக்கலையானது சுதேச தேவைக்கு, உள்ளூரவர்களால், கலைநுட்பம், கலைநயப்பு, கருத்துச் செறிவு ஆகியவை வெளிப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டமைக்கான சிறந்த எடுத்துக் காட்டாக இவ் வரைபுகள் காணப்படுகின்றன. ஒரு அலங்கார நடனமாது மையத்தில் அபிநயித்து நிற்க, இரு புறத்திலும் வாத்தியகாரர் வாத்தியங் களுடன் வாசிக்கும் நிலையில் நிற்பதைச் சித்திரிக்கும் காட்சி அதுவாகும். அவர்களின் வாத்தியங்கள் ஆடையலங்காரங்கள் என்பவை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் புறத் தோற்றப்பாட்டினை வெளிப்படுத்து வதாக உள்ளன. இவற்றை வரைந்தவர் கல்லடியானின் நண்பரான துரைச்சாமியாக இருக்க முடியும். இதே காலத்தில் வெளிவந்த 'இந்து பால போதினி' என்ற பத்திரிகையிலும் பதிப்பிக்கப்பட்டுள்ள முகப்பு வரைபு மனங்கவர்வதாகவும், அக்கால மக்களின் ஆடை அலங்காரங் களைப் பிரதிபலிப்பதாயுமுள்ளது குறிப்பிடத்தக்கது. (இந்து பால போதினி, 25.01.1910).

1920 களில் சுதேச நாட்டிய பத்திரிகையின் முகப்பு வரைபு மீண்டும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதைக் காணலாம். அடுத்து வந்த சித்திரிப்பு, காலைக்காட்சியைப் பிரதிபலிப்பதாயும் தாமரை மலர், சூரியன், ஆகியன மையத்திலும், இரு புறங்களிலும் சரஸ்வதி, இலட்சுமி ஆகியோரையும் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

நிதி நெருக்கடியும், கையொப்பகாரரும், விளம்பரதாரரும்

ஆரம்ப காலத்தில் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுமே வர்த்தக விளம்பரங்களின் உதவியுடனும், கையொப்பகாரரின் உத்தரவாதத்துடனும் தான் நடத்தப்பட்டன. ஒருவர் தாம் வெளியிடப் போகும் பத்திரிகையை நடத்துவதற்கு வசதிமிக்க சிலரின் உதவியை நாடி, அவர்கள் பணம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டுக் கொள்வர். கையொப்பம் வழங்கி, பத்திரிகை வாங்குவதாக ஒப்புக் கொண்டவர்களுக்குத் தமது பத்திரிகைகளை அனுப்பி வைத்தபின், அவர்கள் ஒப்புக் கொண்டவாறு பணத்தை வழங்காது விடுவதும் உண்டு. இதன் காரணமாகப் பத்திரிகையாளருக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தமது சொந்தப் பத்திரிகைகளிலேயே வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச நாட்டியம் பத்திரிகையின் இரண்டாவது பிரசுரத்தின் முதற் பக்கத்தில் எழுதப்பட்டிருந்த கோரிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. அக்காலப் பத்திரிகைகள் பற்றிய சில தகவல்களை இதன் மூலம் பெறக் கூடியதாக இருப்பதால் அதனை இங்கே தருகிறேன்.

> 'அடியேம் மேல் அன்பகலாத நண்பீர்! எமது பத்திரிகையின் கையொப்ப நண்பர் எமது பத்திரக்கிரயத்தை முந்தக்கட்டாததினாலும், எமக்குப் பிறவுர்க்குச் செலவழிந்து போம் பத்திரத் தொகை சுமார் முறை ஒன்றுக்கு 1500 வரையளவில் இருப்பதாலும், இத்தொகைய பத்திரத்தை ஒரு வருடம் அனுப்பும்போது அதினால் எமக்கு முத்திரைக்கு வருஞ் செலவு சுமார் வருடம் ஒன்றுக்கு 750 ரூபா வரையில் வருதலானும், முதன் முறையில் இத்தொகைய முத்திரைத் தொகையை எம் கைப் பொறுப்பிற் செலவிட்டு அனுப்ப நாம் 'கொதி பொறாத நொய்யரிசி' நிலையின மாயிருத்தலானும் எழுந்த எமது ஆற்றாமையால் முதல் வருடத்துக்கு அப் பொறுப்பை உங்கள் மேற் சுமத்தி முத்திரை ஒட்டாது அனுப்ப யோசித்து அவ்வழியை அனுட்டித்தேம். பத்திரிகா விகிதத்தில் ஒவ்வோரிடங்களுக்கும் குறித்திருக்கும் தொகையைக் காணலாம். முத்திரைச்செலவு உங்களுக்கு 2 சதத்திற்கு 4 சதமும், 3சதத்திற்கு 6சதமுமாய் இரட்டிப்பதால் அத்தொகையைத் தள்ளி வருமதியாயிருக்கும் எஞ்சிய தொகையை முற்பணமாயனுப்பி விடும்படியும், அவ்வாறனுப் பப்படும்போது முத்திரைச் செலவை நாம் பொறுப்பது கூடியதாயிருக்கும் என்பதையும், மிக்க வேண்டுதலோடு உங்களுக்கு அறியத் தருகின்றேம். 'எனக்குத் தம் பத்திரிகை அனுப்ப வேண்டும் அதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றேன்' என இதுவரையில் அவ்வவ்விடங்களிலிருந்து ஏறக்குறைய 350 பெயர் வரையில் தம் விலாசத்தை அனுப்பினர். அவர்போலவே மற்றய நண்பரும் தேடி எமது பத்திரிகையை வாங்குவ ரென்பது எமது பூரண சித்தாந்தம்.' (சு.நா. 29.09.1902).

இவ்வாறு மிகவும் நிதானமாக எழுதி, பத்திரிகைக்கான கிரயத்தினைக் கேட்டு வந்த கல்லடி வேலன், பிறிதோர் இதழில் சற்றுக் காரசாரமாக எழுதிக் கேட்பதையும் காண முடிகிறது.

> 'கையொப்ப நண்பீர்! எமது பத்திரிகையின் மூன்றாம் புத்தகமும் வெளிப் பட்டு, மூன்று நாலு மாசங்களாகிறதே!! நீர், உம்மால் வரவேண்டிய பணத்தை இன்னும் அனுப்பாதிருப்பது நீதியா? உங்கள் போல் யோக்கி யதையும் நல்லறிவும் உள்ள பிரபுக்கள் எங்கள் முயற்சியையும் பொருட் செலவையுஞ் சிந்தித்து உம்மால் வரவேண்டிய பணத்தை அனுப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவப்படாது, பூண்ட தோணி துறையிற்கிடப்பது போற் கிடப்பதற்கு நியாயமென்ன?'

1. சொற்ப பணமென்பதா?
2. கொடுக்கிறதில்லை என்பதா?
3. அவசியமல்ல என்பதா?
4. முட்டுப்பாடா?
5. மறதியா?
6. வெட்கமா?
7. அனுப்ப வழி தெரியாமையா?
8. நேரமில்லையா?
9. பணம் கொடுத்ததை யோக்கியர் அறிந்தால் பரிகாசஞ் செய்வார் என்பதா?
10. வழக்கமில்லையா?

இவைகளிலொன்றானால் அதை இரகசியமாக எமக்கு எழுதி அறிவிக்கப் படாதா? இன்னார் தரவேண்டும். இன்னார் தர வேண்டுமென்னாது பொதுவாய் நாம் எழுதுவதால் என்னையல்ல, அவரையென்று எண்ணு கின்றீரா? நாமிப்படி இன்னாரென்று குறியாதிருப்பதற்கு ஞாயம் உமது அறிவிற்குத் தெரியவில்லையா?

தயவு செய்து கவனியும்! கவனியும்!! என்று ஆயிரமுறை எழுதவும் கவனயீனமேன், இன்றும் பழம் பாடத்தையே எழுதி உம்மை ஆயிரநமஸ் காரத்தோடு கேட்டுக் கொள்கின்றோம்.'' (சு.நா. 23.01.1905).

பத்திரிகையின் பொருள் வளம், சந்தாவிற்கு அடுத்த படியாக, விளம்பரங் கள் வாயிலாகக் கிடைத்ததெனக் கூற முடியும். பத்திரிகையின் நான்கில் ஒரு பகுதி விளம்பரங்களால் நிரப்பப்பட்டிருந்தது.

கல்லடி வேலன் என்ற பத்திராதிபர்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பத்திரிகை நடத்துதல் என்பது மிகவும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. மிகவும் பிரயத்தனப் பட்டு வாசகர்களையும் இழக்காமல், பத்திரிகையையும் நிறுத்தாமல் நடத்துவதென்பது, வசதி அதிகம் இல்லாத தனிநபர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்திருக்கும். அக்காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட பல பத்திரிகைகள் விரைவிலேயே இத்தகைய சவால்களைச் சமாளிக்க முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்து போக சுதேச நாட்டியம் நீடித்து நிலை பெற்றமை அதுவும், ஏறத்தாழ அரைநூற்றாண்டு நீடித்து நிலைத்தமை பத்திரிகை நடத்தியவரின் சாதனை என்றே குறிப்பிட வேண்டும். அடிப்படையில் கல்லடி வேலன் ஒரு சிறந்த பத்திரிகையாளனாக இருந்தமையே இதன் வெற்றியை நிர்ணயித்தது எனக்குறிப்பிடுவதில் தவறிருக்க முடியாது. ஏனெனில் மாறி வரும் சூழ்நிலைகளுக்கும், வாசகர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அவர் பத்திரிகையை ஆக்கி வெளிப்படுத்தியமையே அதன் நிலைப்பிற்கு அடிப்படையான காரணமாக இருக்க வேண்டும்.

கல்லடி வேலனின் சுதேசநாட்டியப் பத்திரிகையின், பத்திரிகா நிலைப்பாடு பற்றி அவரது பத்திரிகைகளை ஆதாரமாகக் கொண்டு சில அம்சங்களை எடுத்துக்காட்ட முடியும். அவற்றுள் முதலாவதாகக் கூறக் கூடியது அவர் கடைப்பிடித்த சமயம் சார்ந்த நடுநிலைக் கொள்கையாகும். ஆரம்ப காலப்பத்திரிகைகள் பல, சமயத்தை முதன்மை நோக்காகக் கொண்டு தொடங்கப்பட்டவையாகவும், சமய அடிப்படையிலான முரண்பாடுகளுக்கு இடமளிப்பவையாகவும் அமைய, இவரது பத்திரிகை அவ்விடயத்தில் நடுநிலையைக் கடைப்பிடித்தமை முன்னேற்றமானதாக இருந்ததுடன், அவரதுபத்திரிகை ஏனைய மதத்தவர்களாலும் ஆதரிக்கப் படுவதற்கு இடமளித்தது. அதிகமாக எல்லாப் பத்திரிகைகளிலும் பிள்ளை யார் சுழி, சிவமயம், ஓம், பரமபதி துணை ஆகியவற்றுள் ஒன்றோ இரண்டோ முதற்பக்க ஆரம்பத்தில பொறிக்கப்பட்டிருக்க, (நாம் கடிதம் எழுதத் தொடங்கும் போது எழுதுவதைப்போன்று), சுதேச நாட்டியத்தில், அத்தகைய பொறிப்புக்களைத் தவிர்க்கத் தொடங்கியிருந்தமை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. சைவசமயம் சார்ந்த விமர்சனங்களும், வாதப்பிரதிவாதங்களும் இடம்பெறுவதைத் தவிர்க்கவில்லை. இவற்றிற்கு மேலாக அவர் தமது சொந்த கருத்தின்படி ஒரு அதி வைதிகப் போக்குக் கொண்ட சைவனாக இருந்திருந்தார் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

> ‘இப்பத்திரிகையில் எம்மார்க்கத்துக்கேனும் விரோதமான கடிதங்கள் வெளிப்படுத்தப்படுகிறதில்லை. ஏதுமோர் ஏதுகொண்டு ஒரு கடிதம் பிரசுரிக்கப்படுமாயின் மறுபக்கத்தார் கடிதத்திற்கும் அவ்வுரிமை யுடையதாயிருக்கும். எப்பிரபுக்களாயினும், எவ்வதிகாரிகளாயினும், எவ்வுத்தியோகத்தராயினும், எக்குருவாயினும், எந்நண்பராயினும், எக்கலாஞானிகளாயினும், நீதியற்ற கிரியைகளைச் செய்கிறவராய்க் காணப்படுவாராயின், அக்கிரியையையும், அவர் கீழ்நிலையையும் எடுத்து வெளிப்படுத்த எதற்காயேனுமஞ்சி எம்மனஞ் சிறிதாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னிற்கப்ப போகிறதில்லை. இதுவே நடுநிலையும் பொதுநன்மையும் விரும்பும் பத்திரிகாலட்சணமாம்.' (சு.நா. 15.09.1902).

மேற்குறித்தபடி பத்திரிகாலட்சணம் பேசிய கல்லடி வேலன் பத்திர தாதிபர் என்ற வகையில் பின்பற்ற வேண்டிய பத்திரிகா தர்மத்தைப்பற்றியும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'வல்வை எஸ். இராசரத்தினம்பிள்ளை என்ற கைச்சாத்திட்டு 'விவேகானந்த பத்திராதிபரின் விபரீத சிந்தனை' என்ற முகநாமமிட்டனுப்பிய கடிதம் பெற்றேம். பத்திராதிபரின் விவேகம், ஒழுக்கம், மரபு, முதலியவைகளைக் குறித்துக் கடிதர் மிகத்தாக்கமான வாக்கியங்களைப் பிரயோகித்திருப்பதால் அக்கடிதத்தை வெளிப்படுத்தன் முறையன்றெனநிறுத்தினம். அவரைக் குறித்து யாவருமறிவர். கடிதர் சொல்வதிற் பிரயோசனமில்லையென்பதெங்கருத்து. தமிழ்ப்பாஷையை வாசித்து விளங்குவதிலும் எழுதுவதிலும் இவர் விபரீதமானவர் எனக்கடிதர் கூறியது நமக்கும் உடன்பாடாயிருக்கலாம். பத்திராதிபர் எந்நிலையினராயினும் நாமவரைத்தூற்றவும், தூற்றுவார்க் கிடங்கொடுக்கவும் மாட்டோம்.' (சு.நா. 30.05.1904).

பத்திரிகைத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்ட கல்லடியான் அக்காலத்தில் வெளிவந்த ஏனைய தனியார் பத்திரிகைகளுக்கு, ஆதரவு வழங்கவும் தயங்கவில்லை. குமாரசுவாமிப்புலவரின் மாணவனாக விளங்கியவரும், சைவப்பிரசாரகராக இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ் பெற்றிருந்தவருமான மு. இரத்தினேசுவர ஐயரைப் பத்திராதிபராகக் கொண்டு வெளிவந்த, குருசந்திரோதயம் என்ற பத்திரிகையின் ஆரம்பகால அச்சுப்பதிப்பிற்கு உதவியதுடன், அப்பத்திரிகையில் விடயதானங்களை யும் எழுதியிருந்தார். அப்பத்திரிகையில் இவர் சிறைவாசம் அனுபவித்த போது, எழுதிய கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், இவரைப்பற்றிய முக்கியத்துவம் மிக்க சிலகுறிப்புக்களும் எழுதப்பட்டிருந்தன. (கடிதம் அடிக்குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. குரு சந்திரோதயம், 25.05.1911) மற்றொரு பத்திரிகையான விஜயலட்சுமியிலும் இவர் சிறை வாசம் பெற்ற செய்தி பின்வரும் வகையில் எழுதப்பட்டிருந்தது:

'இவர் எட்டு வருடங்களாக சுதேச நாட்டியம் என்னும் தமிழ்ப் பத்திரிகையைத் தமது சாரதாபீட அச்சாபீசில் அச்சிட்டு நடத்தியவர். இவர் யார் வரினும் எது எது வரினும் தமக்கு நீதியென்றும், முறைமை என்றுங் காண்பவைகளை, நேர் நேராகத் தமது பத்திரிகை வாயிலாகவும், அவரவர்களைத் தனித்தனி கண்டு நேர்முகமாகவும், கண்டித்து வந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திராதிபரும் பரோபகாரியும் ஆகிய இவர்க்குச் சம்பவித்த ஊழ்வலிக்கு மிக விசனிக்கிறோம்.' (விஜயலட்சுமி, 09.07.1910).

சிறைவாசத்தை எவ்வளவு காலம் அனுபவித்தார், என்பது பற்றித் தெளிவாக அறிய முடியவில்லை. அவர் சிறை சென்ற காலத்தில் பத்திரிகையை, நடத்திய நல்லதம்பி என்பவர், தொடர்ந்து பத்திராதிபராகத் தொடர்ந்து செயற்பட்டவராவர். ஆனால் விடயங்கள் யாவும் க.வே. யினாலேயே எழுதப்பட்டனவாகத் தெரிகிறது.

1932 ஆம் ஆண்டில் பத்திரிகைகளின் முக்கியத்துவம் பற்றியும், பத்திரிகை வாசகர்கள் பற்றியும், சுதேச நாட்டியம் பத்திரிகையில் வெளிவந்த விடயங்கள், எமக்கு அக்காலப் பத்திரிகைகளின் நிலை பற்றி அறிவதற்கு உதவுவதாக அமையும்.

'தமிழ்ப்பத்திரிகையின் தளர்வு-தற்போதைய உலகத்தைப் பத்திரிகையுலகமெனல் பொருந்தும். மேனாடுகள் பத்திரிகைகளாலேயே முன்னேற்றமடைந்துள்ளன. கீழ் நாடுகளோ பத்திரிகை விஷயத்தில் கவனம் செலுத்துவதாகக் காணோம். எமது யாழ்ப்பாணநாட்டில் தமிழருக்கெனத் தோற்றிய பத்திரிகைகள் பல. அவற்றுட் சில ஆதரவு கிடைக்காமையால் அழிந்தொழிந்து போக எஞ்சியிருப்பவை மிகச்சிலவே. அவையும் ஆதரவின்மை என்னும் நோயாற் பீடிக்கப்பட்டு ஒருவாறு உயிருடன் இருந்து வருகின்றன. நமது நாட்டில் நடைபெறும் பத்திரிகைகள் பெரும்பாலும் சாதாரண அறிவு படைத்தவர்களாலேயே ஆதரிக்கப்பட்டு வருகின்றன. அது பற்றி அவற்றில் வெளிவரும் விஷயங்கள் யாவரும் விளங்கிக் கொள்ளுமாறு சிறுச் சிறுச் சொற்களால் தொடரின்றி எழுதப்படல் வேண்டும்....' (சு.நா. 16.11.1932)

இதனை அவதானிக்கும் போது சாதாரண மக்களின் வாசனைக்குரியவையாகவே தமிழ்ப்பத்திரிகைகள் இருந்தன என்பதையும், ஆதரிப்பாரின்றியே பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன என்பதையும் விளங்க முடிகிறது.

தமிழ் மொழியும் க.வே.யும், சுதேச நாட்டியமும்

அக்காலத்தில் இலங்கையிலும், தென்னிந்தியாவிலுமிருந்த தமிழ்மக்கள் மத்தியில் காணப்பட்ட,தமிழ் மொழி மீதான அபிமானமும், எவ்வகையிலேனும் தமிழ்மக்கள் தமிழ் மொழியைக் கற்கவும் பேசவும் வேண்டுமென்ற எண்ணம் க.வே.யிடமும் இருந்தது. அவர் தமிழ் மொழியில் பேசத் தயங்கியவர்களையும், ஆங்கிலமொழியிலும், மேற்கத்தைய நாகரிக நடை, உடை. பாவனைகளைக் கைக்கொண்டவர்களையும், மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்ரோஷத்துடன் விமர்சித்துள்ளார். இந்த விடயத்தில் பெண்களை மட்டுமன்றி ஆண்களையும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் தாக்கியுள்ளார்.

இப்பத்திரிகையின் வாசகர்கள் பெரும்பான்மையும் சாதாரண குடிமக்களாக இருந்தனர். எனினும், தமிழ் மொழியில் ஆழமான புலமை மிக்க தேர்ச்சியாளர்களும் இப்பத்திரிகையை வாசித்ததுடன் விடய தானங்களையும் செய்திருந்தனர். அவர்களுள் மு.இரத்தினேசுவர ஐயர், சி. கணேசையர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். சுதேச நாட்டியம் பத்திரிகையின் ஆரம்ப கால இதழ்களில் புன்னாலைக் கட்டுவன் சி.கணேசையர் அவர்களின் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது. முதலாம் புத்தகம் இரண்டாம் இதழில் 'திராவிட கோகிலம்' என்ற பத்திரிகையில் பதியுண்மையை நிரூபிக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு பதிலாக பதியுண்மையைத் தாபிக்கும் வகையில் எழுதப் பட்ட விபரமான கடிதம் வெளியிடப்பட்டிருந்தது. உடுப்பிட்டி ஸ்ரீ.அ. சிவசம்புப் புலவரவர்களியற்றிய வள்ளியம்மை திருமணப்படல் உரைப் பிழைகள் என்ற தலைப்பில் எழுதியுள்ள கடிதத்தில், அவரது பன்னிரண்டு செய்யுட்களுக்கான உரைப்பிழைகள் விளக்கமான முறையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. (சு.நா. 29.09.1902).

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இக்காலத்தில் பழம்பெரும் நூல்களுக்கு உரையெழுதும் வழக்கம் தேர்ச்சி மிக்க புலவர்களால் எழுதி வெளியிடப்பட்டு வந்தது. இத்தகைய நூல்களில் காணப்படும் தவறுகள் பத்திரிகை வாயிலாக விமர்சனத்திற்கும், விவாதத்திற்கும் உட்படுத்தப் பட்டது. இக்கருத்து மோதல்கள் ஏற்கெனவே தமிழ் உலகில் ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும், இவற்றை இவ்வேளையில் சாதாரண வாசகர்களும் வாசிக்கும் நிலை இருந்ததென்பது ஆச்சரிய மூட்டுவதாயுள்ளது. அவ்வாறு இடம்பெற்ற ஒரு விவாதத்தின் போக்கினை உதாரணத்திற்கு மேலே காட்டலாம்.

> சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் வினாவும் சூடாமணிநிகண்டுரை வினா. புலவீர்! 'நமது பாடசாலையில் நிகண்டு படிக்கும் மாணவர்கள் மூன்றிடத்திற் பதிப்பிக்கப்பட்ட சூடாமணி நிகண்டுப் பிரதிகள் கொண்டு வந்தார்கள். மூன்றும் நமது சொற் பொருளுடையனவாகவே இருக்கின்றன. அம்மூன்றும் சொற்பொருளாலே ஒன்றோடொன்று மாறுபடுகின்றன. மூன்று விதமாக எழுதினோரோ? மாணவர்கள் எதையென்று நம்பிப் படிப்பார்கள்.? ஒருவரே மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையாக உரை எழுதி அச்சிடின் பொருள் நிச்சயம் எப்படிப் பெறலாம். எப்பதிப்பு நிச்சயமான பொருளுடையதென அறிவிக்குக.' இங்ஙனம், தாமோதர உபாத்தி, காங்கேசன்றுறை. (சு.நா 12.07.1909)

'சைவ பால்ய சம்போதினியிற் றோற்றிய பழம்பதிப் பாலகங் காதரவர்களுக்கு நானெழுது பவைகளைச் சற்றே சன்னதமின்றி யுற்று நோக்கி யுணரும்படி கோருகின்றேன்.'

'சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப்புலவரவர்கள் பாடினவென்று வெளிப்படுத்திய கவிகள் பிழையுள்ளன. அப்பிழைகள் புலவரவர்களால் விடப்பட்டனவல்ல. கரலேக நாதியால் வந்தன' எனத் தாமும் 'பரமார்த்த குருவின் சீஷ! பாலகங்காதர!!' உள்ளதையுங் கெடுத்தான் நொள்ளைக் கண்ணன், என்பது போல, புலவருக்குள்ளதையும் கெடுத்துவிட வழி தேடாதீர். நாட்டியத்தோடு மேட்டி காட்டிய வனேகர் தம்மை மாட்டி, அளியாத்துயரையீட்டி, இகழ் முடி சூட்டி, பலகோட்டி நகைக்கப்பின் காட்டி, யோட்டெடுத்ததைக் கேட்டறிந்திருப்பின் இவ்வாறு துணியீர்.' இங்ஙனம் உ... முதிய கங்காதரன், புதுப்பதி.' (சு.நா. 27.06.1910).

க.வே.யின் பத்திரிகை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவரத் தொடங்கியதாயினும், சாதாரண அறிவு கொண்ட வாசகர்களையும் கருத்திற் கொண்டு எழுதப்படவேண்டியதாக இருந்தது. அது மட்டுமன்றி, இக்காலப் பத்திரிகை மொழி நடையே, பின்வரும் காலங்களுக்கு முன்னோடியாகவும் அமைய வேண்டியதாக இருந்தது. மரபுவழிக் கல்விப் பயிற்சி பெற்றிருந்த க.வே. இத்தகைய பிரச்சினையை இயலுமான வரையில் எதிர் கொண்டு நீண்ட காலம் வாசகர்களைத் தனக்கெனப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவரது எழுத்துக்களில், நல்ல தமிழ்ச் சொற்கள் கையாளப்பட்டிருப் பதைப் பல இடங்களில் காணலாம். கடிதர், மலமுத்தர், லிற்றன் பெருமான், இராசமாலிகிதர், துரைச்சானி, திருஷ்டாந்தம், போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். பத்திரிகைத் தலையங்கங்கள் எழுதும் போதும், பத்தி களுக்குத் தலைப்புக்கள் இடும் போதும் சொற்சிக்கனமான முறையில் வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக சில தலைப்பு களைக் காட்டின், 'நீ, நீவிரார், விரும்பினால் எடு, சறுக்கீசு ஆட்டமும் உறுப்பீசு ஓட்டமும்' போன்றவகையில் அமைக்கப்பட்டிருந்தன.

இப்பத்திரிகையில் புனை பெயர்களில் அதிகளவு விடயங்கள் எழுதப் பட்டுள்ளன. க.வே. பெரும்பாலும் ஒரே புனைபெயரைப் பயன்படுத்தாது, தேவைகளுக்கேற்ப புதிய, புதிய புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகப் 'பழம்பதிப் பாலகங்காதரர்' என்ற புனை பெயரில், பாலசம்போதினி என்ற பத்திரிகையில் எழுதிய கடிதத்திற்குப் பதிற்கடிதம் எழுதும்போது, 'முதிய கங்காதரன் புதுப்பதி' என எழுதியுள்ளார். ஆறுமுகம் என்பவருக்கு விமர்சனம் எழுதும் போது 'ஏழுமுகத்தான்' என்ற புனை பெயரைக்குறித்துள்ளார். இதை விடப் புரியாத சில புனை பெயர்களையும் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக, 'உப்பாற்றுக்குடை' (உள்ளுக்குள் குடைதல்?) என்ற புனை பெயர் எதைக்குறிக்கிறது எனப் புரியவில்லை.

கவிபுனைவோராகவும், சிலேடைப்பிரயோகங்களை அதிகம் கைக் கொள்பவராகவும், இருந்த காரணத்தினால், இவரது எழுத்துக்களில் தனித்தனிச் சொற்கள் இடம்பெறுவதை விடத், தொடர்ச்சியாக ஒரு வசனத்திலுள்ள சொற்களைப் புணர்த்தியெழுதியிருப்பதையும் காணலாம். இதனால் சிறிய பத்திரிகையாக இருப்பினும், விரைவாக வாசித்து முடிக்க இயலாது. அத்துடன் அந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயத்தை உடனடியாகக் கிரகித்துவிடவும் முடியாது. இப்பத்திரிகை மாதத்தில் இரண்டு தடவைகள் வெளிவந்த காரணத்தினால், வாசகர்கள் பலர் சேர்ந்து பகுதி, பகுதியாக வாசித்துக் கலந்துரையாடியிருப்பதற்கும் இடமுண்டு. புராணங்கள் வாசித்துப் பயன்சொல்வப்படுவது போன்று, ஆரம்பகாலப் பத்திரிகைகளும் கூட்டு வாசிப்பிற்கு உரியதாக இருந்திருக்க முடியும்.

க.வே. ஒரு சிறந்த பத்திரிகையாளனுக்குரிய பண்புடன் அக்காலத்தில் வெளிவந்த நாவல்கள் பற்றியும், அக்காலத்தில் வெளிவந்த பிற பத்திரிகைகள் பற்றிய செய்திகளையும், வாசகர்களுக்கு அறியப்படுத்தி யிருந்தார். அவர் மங்களநாயகம் தம்பையா அவர்களால் எழுதப்பட்ட நாவல்கள் பற்றிய விமர்சனங்களையும் எழுதியிருந்தார். 'அரியமலர்' என்ற நாவலுக்கு எழுதிய விமர்சனத்தில், கதாசிரியரின் தகைமையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு, கதையின் தன்மையையும் வியந்து குறிப்பிட்டு, வாசகர்கள் மனதில் அந்த நாவலை வாசிக்கத்தூண்டும் வகையில் எழுதியிருந்தார். (சு.நா.26.10.1921).

தமிழ் மொழியில் அதிக ஆர்வம் கொண்டிருந்த க.வே. தமிழகத்தின் சுவாமி வேதாசலம் அல்லது மறைமலை அடிகள் மீது நட்புக் கொண்டிருந்தார். மறைமலையடிகள் யாழ்ப்பாணம் வந்து நிகழ்த்திய சொற்பொழிவுகள் பற்றியும், யாழ்ப்பாணத்தவர்களில் அவருக்கு இருந்த மதிப்புப் பற்றியும், அவரது கருத்துக்கள் யாழ்ப்பாணத்தில் பெற்ற வரவேற்பைப் பற்றியும், அவருக்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்துக்கள் பற்றியும் சுதேச நாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத்தில் எழுதப்பட்டுள்ளது. க.வே. அவர் கீரிமலையில் தங்கியிருக்கிறார் எனவும் விரும்பியவர்கள் அவருடன் கலந்து பேசலாம் எனவும் குறிப் பிட்டிருந்தார். மறைமலையடிகள் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரைகள் பின்னர் 'தமிழர் நாகரிகம்' எனத் தலைப்பிட்டு நூலாக வெளிவந்தது என்பதும், அந்நூலைப் பிரசுரிப்பதற்கான செலவினைத் தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்த யாழ்ப்பாணத்தவர்கள் வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வேதாசலம், 1957: 5-6)

சுதேச நாட்டியத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பற்றிய தகவல்கள்

எந்த ஒரு விடயம் பற்றிய ஆய்விலும் அடிப்படையாக அமைவது பொருளாதாரம் என்பது எவருக்கும் உடன்பாடான விடயமாகும். இப் பிரதேசத்தின் பொருளாதாரம் பற்றிய விடயத்தில் அதிக அக்கறையுடன் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அப் பத்திரிகையின், முதலாவது பிரதியிலேயே 'யாழ்ப்பாணத்திற்கு வேண்டிய அவசியங்கள்', என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில், அக்கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான பிரச்சினைகள் பற்றியும், அவற்றைத் தீர்ப்பதற்கு அவசியம் மேற்கொள்ளப்படவேண்டிய தீர்வுகள் பற்றியும் ஆராயப்பட்டுக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு உதவியாக அமையக்கூடியவையாக உள்ளன.

இந்நாடு நன்னாடாவதற்கு இனி வேண்டியவைகளெவை யென்பதைக் குறித்துச் சிறிது சிந்திப்பாம்.

1. **புகையிரதம்:** வியாபாரத்தொழிலை மிகுதியும் நடாத்தல்வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி இடையறாது நடைபெறின், தடைபெறாது பணம் வருமென்பதிர்த்தர்க்கமின்று. பின்வரும் நயங்கள் பிசகாது நடைபெறும். நாநாவித பொருள் வரவுகளாலும், பண்டமாற்றாதிய புரியும்வழிகளாலும், ஏனையோராலும் விதந்து, வியந்துரைக்கப்படும், நாகரிகத்தையும், செழிப்பையும் வளர்பிறையொத்து வளர்ந்து வருமென்பதும் ஒன்று.

2. **தண்ணீர்க்குழாய் திறத்தல்:** நம்தேயம் வடதேயங்களைப்போல யாறு குளமின்றி இருத்தலானும், அதனாலனேக நிலங்கள் சாகுபடி செய்தற்கு வசதியின்றியிருத்தலானும், அவ்வவ்விடங்களுக்கு நீர் பாய்ச்சும் வழி வகைகளைத் தேடல் ஒன்று.

கீழ்ப்பகுதிகளிலுள்ள கிணறுகள், குளங்கள், மணலிலிருந்து பொசிந்து வரும் சிற்றூற்றுகளாகவிருக்கின்றன. அத்தடாகங்களின் தண்ணீருஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகதி, மரவேர் முதலிய பதார்த்தங்களை யள்ளிவருதலான் ஓர் வகைக் கந்தமும் ஊறிக் கொண்டிருக்கிறது. 'உண்டாற்றெரியுமுணவினுரிசி' என்பது போலப் பருகினாற்றெரியு மவ்விடத்தண்ணீர். அவை சுகத்தின் பாவிப்புக்குக் கூடியனவல்லவென்பது பிரத்தியட்சம். அவ்வகையிடங் களுக்குக் குழாய்களின்மூலந் தண்ணீர் அனுப்பப்படவேண்டியது ஒன்று. அந்நிலங்களிற் கற்பாறையிலிருந்து ஊறிவருந் தண்ணீரையுடைய.....

3. கமத்தொழில்: அனேகர் தங்கள் வாணாட்களை வீணாட்களாக்கிக் கஞ்சிக்கும் வழியற்று அலைந்து திரிகிறார்கள். அவ்வாறானவர்க்கு அவரவர் புரிதற்குத் தகுந்த கிரியை கொடுத்தல் வேண்டும். பலர் காணி பூமியற்றிருக்கின்றனர். அநேகர் குத்தகைக்கு நிலம் வாங்கிப் பயிரிடுகின் றனர். சில வேளைகளிலிவர்கள் வரும்படி குத்தகைக்காசுமெற் பற்றாமற் போகின்றது.

இவற்றிற்கு வேண்டியவை பின்னாற் சாற்றப்படும். தொழில் செய் வதற்குத் தகுதியான இடங்களை ஆராய்தெடுத்தலொன்று. அப்படித் தொழில் செய்யப்படும் நாடுகளுக்குக் கிட்டக் குடியேற்றலின்னொன்றாம். உத்தம பசளையை உண்டாக்கும் விதங்களை ஆராய்தெடுத்தல் வேறொன்று. இப்படி வருமானம் தரத்தக்க இடங்கள் தொகையாயிருப்பின் அவைகளுக்குக்கிட்டப் புகையிரதந் திறத்தல் பிறிதொன்று. கடற்கரைக் கணித்தாயுள்ள உவர் நிலங்களை மாற்றும் உபாய வழிகளைத் தேடல் அவசியமான மற்றொன்றாயிருக்கிறது.

4. கைத்தொழில்: யாழ்ப்பாணத்தில் அதிகமாய்க் கைத்தொழில் நடக்கிற தில்லை. சீலை நெசவு செய்கிறவர்களும் பானை, சட்டி உண்டாக்குகிறவர் களும் வேறு பலவேலை செய்கிறவர்களும் இடைக்கிடையே இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தினதிகவரும்படியாயுள்ள பொருள் புகையிலையே. அதைத் தட்டுப் புகையிலையாய் உலர்த்தலொன்று. இந்நாட்டிலிருந்து அதிகமாய்க் காலத்திற்குக் காலம் ஏற்றுமதியாகும் பனந்தும்பினால் அதிக வரும்படி தரத்தக்க உபாய வழிகளை உண்டாக்கல் இன்னொன்று.

இந்நாட்டிற்கு இறக்குமதியாகும் சாமான்களிற் பிரதானமானது சவளி வகையே. அவற்றை இங்கே தானே உண்டாக்கிறதற்கு வேண்டும் யந்திர வகைகளை உபயோகித்தல் அத்தியாவசியகமான மற்றொன் றாயிருக்கிறது.

5. தமிழ்க்கல்வி உச்ச நிலைக்கு வரத்தக்க ஏதுக்களைச் செய்தல்: தமிழ்ப் பாஷை யாழ்ப்பாணத்தில் குறைந்து குறைந்து வருகின்றது. தமிழில் நல்லாய்த் தேர்ச்சியடையும் பிள்ளைகள் மிகச் சொற்பம். இலக்கணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவர அருகிப் போகின்றது. சிலர் தமிழிற்சொற்பமேனும் படிப்பியாது பாலிய வயதில் தங்கள் பிள்ளைகளை இங்கிலிஷ் படிக்கிறதற்கு அனுப்புகிறார்கள். தன்சுயபாஷையைப்பற்றி யாதொன்றுந் தெரியாதவன் பகிடிக்காரனாவான். (சு.நா. 15.09.1902).

இத்தகைய கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் க.வே. யினால் குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் முக்கியமானதாக அமைகிறது. இக்காலத்தில் வேறு யாரேனும் இந்த அளவுக்கு யாழ்ப்பாணத்தின், பொருளாதார நிலை பற்றியும், இப்பிரதேசத்திற்கு வேண்டியவையாவை என்பது பற்றியும் முழுமையான, ஒரு கருத்தமைவினை வெளிப்படுத்தி யதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்தொழில் எதிர் கொண்ட மிக முக்கியமான பிரச்சினை நீர் வளமாகும். இங்கு வாழ்ந்த விவசாயிகள் மிகவும் பிரயத்தனப்பட்டு நீர் பாய்ச்சியே விவசாயம் செய்தனர். அக்காலத்தில் துலாவினால் நீர் இறைக்கும் பொறிமுறை மட்டுமே அறியப்பட்டுப் பயிலப்பட்டு வந்தது. 1910ஆம் ஆண்டளவில் சூத்திரம் என்ற பொறிமுறை, மலாயாவில் தொழில் பெற்றுச் சென்ற ஒருவரால் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்பொறிமுறை பற்றி வியந்தும், அதனை யாழ்ப் பாணத்திற்குக் கொண்டு வந்தவரைப் பாராட்டியும் எழுதியிருந்தார்.

'இவ்வியந்திரத்தைச் சோதனை பார்க்கும் நோக்கமாக, சென்ற 1905ஆம் வரு தைமீ 13உ யன்று நம்மேசன்றுத் துரையாதியாம் பலர் சமூகத்தில் ஓர் கிணற்றிலிட்டு இறைத்துப் பார்த்தனர். இவ்வியந்திரத்தைக் கொண்டு நாள்வீதம் முன்னேரம் பின்னேரமாகிய இரு நேரங்களிலும், 40 பரப்பு நிலத்தை மிக லேசாகவும் சுகமாகவும் இரு மாடுகளைக் கொண்டு இருவர் நீர் பாய்ச்சக்கூடும். இறை கூடையினால் நாட்டுப்பகுதியிலுள்ளார் இறைத்து நீர் பாய்ச்சுவது மெத்தக் கஷ்டமான காரியம். மூன்று பேர் துலா மிதிக்கவும், ஒருவர் தண்ணீரிறைக்கவும், இன்னொருவர் தண்ணீர் மாறவும் வேண்டும். இப்படி நீர் பாய்ச்சும் ஐவரும் ஆளுக்கு (த) ஆயிரம் கன்றுத் தறைக்கு மேல் பயிரிட்டு இறைத்துக் கொள்வதும் கூடாதகாரியம். இவ்வியந்திரத்தினால் இருமாடுகளினுதவியைக் கொண்டு எரு அணி முதலுள்ளவர்கள் ஆளுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் கன்றுத் தறையைப் பயிரிட்டுச் செய்து கொள்வது மெத்தச்சுகமான காரியமும் நல்ல வருமானம் வருவதற்கு இடமுமாயிருக்கும்.' (சு.நா.11.03.1907).

க.வே. சிறையில் இருந்த போது, வெளிவந்த பத்திரிகையொன்றின் தகவல்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவர் நடத்த முயன்ற கிருஷிக வித்தியாசாலையால் நன்கு விளங்கும். இவ்வித்தியாசாலைக்கு பெருந்தொகையான நிலத்தையும் வாங்கி மிகவும் தீவிரமாயும் வேகமாயுந் தண்ணீர் பாய்ச்சக்கூடிய யந்திரமொன்றையுந் தருவித்து, வித்தியாசாலை ஸ்தாபனஞ் செய்யுந் தருணத்தில்' (குரு சந்திரோதயம் 25.05.1911)

என்று காணப்படுவதால், க.வே. யாழ்ப்பாண விவசாய வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறை தெரிகின்றது. அதாவது விவசாய வளர்ச்சியின் பொருட்டு செயன்முறை அறிவை மேம்படுத்தும் வகையில் விவசாயக் கல்விச்சாலை ஒன்றை நிறுவ ஆயத்தம் செய்திருந்தார்.

விவசாயத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த, க.வே. விவசாயிகளுக்கான பத்து விடயங்கள் அடங்கிய குறிப்பொன்றை எழுதி வெளியிட்டிருந்தார்:

பத்து விவசாயக் கற்பனைகள்: நல்ல தானியங்களைப் பெற வேண்டுமானால் பின்வருவனவற்றைச் செய்க. 1. ஆழமாய் உழு. 2. மேல் நிலத்தைக் கட்டியில்லாமற் தட்டிவை. 3. பூமியைச்சமமாய்த்தடடு. 4. மழையில்லாக்காலத்தில் நிலத்தைச் சும்மா விட்டு வை. 5. சமயத்தில் நிலத்திற்கு எருவடி. 6. புல், பூண்டுகளைக் களையெடுத்து விடு. 7. சீக்கிரம் அறுவடையாகக்கூடிய தானியங்களை நடு. 8. பச்சைத்தழையை அடி. 9. ஆடு, மாடுகளை வைத்துக்கொள். 10. ஒரு தடவை நட்ட பயிரை அடுத்த வருஷத்தில் நடாதே. இந்தக் கட்டளைகளை ஒரு புத்திமான் இடுகிறார். (சு.நா. 18.08.1911).

விவசாயத்தில் மட்டுமன்றி ஏனைய தொழிற்றுறைகளின் வளர்ச்சியிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றிருந்த தொழிற்றுறைகளில் சுருட்டுத் தொழில் பிரதானமாகும். அக்காலத்தில் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடிய சுருட்டுக்களின் எண்ணிக்கையை சுதேச நாட்டியத்தில் இடம் பெற்றிருந்த மேல் வரும் செய்தி காட்டுகின்றது:

'இது நூதனமா? கொழும்பு 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையில் லண்டனில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் சுருட்டு செலவழிகிறதாக வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. நமது நண்பர் கொழும்பில் நாளொன்றுக்கு பதினைந்து லட்சம் யாழ்ப்பாணச்சுருட்டுகள் செலவழிந்து போவதை இன்னும் அறியவில்லைப்போலே. சீக்கரற்று, மனிலா, தும்பறை, யாவா, திண்டுக்கல், திருச்சினாப்பளி, நீர்கொழும்பு முதலிய பலசாதிச் சுருட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் சேர்த்துக் கணக்கிடில் நாளொன்றுக்கு இருபத்தைந்து லட்சம் சுருட்டுகள் வரையிற் செலவழிகிறதாமே. ...' (சு.நா. 9.1.1903)

அத்துடன் 1911இல் இடம் பெற்ற சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி எழுதிய. க.வே. அது பற்றிய செய்திக்கு, 'சுருட்டுக்காரர் முரட்டுத் தனம்' என்ற தலைப்பிட்டு எழுதியிருந்ததுடன், அவர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டதால் தம் கோரிக்கையில் வெற்றி பெற்றார்கள் எனவும் கருத்துக் கூறியிருந்தார். (சு.நா. 20.03.1911)

அரசியல்விடயங்களில் க.வே. யும் சுதேச நாட்டியமும்

சுதேச நாட்டியம் பத்திரிகை வெளிவந்த நீண்ட காலப் பகுதி (1902-1944) அரசியலில், பல்வேறு மாற்றங்கள் விரைவாக ஏற்பட்ட காலமாக அமைகிறது. இக்காலப்பகுதிக்குரிய அரசியல் வரலாறு, பகுப்பாய்வு செய்யப்படாத நிலையில், தனிநபர் பத்திரிகையாளர் ஒருவரின் அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவாகக் குறிப்பிடுவது, முடியாத காரியமாகும். எனினும், அவரது பத்திரிகையின், ஆரம்பகாலத்தில் அரசியலுடன் தொடர்பான விடயங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுக்களைப்பற்றிக் குறிப்பிடலாம். பிரித்தானிய காலனித்துவத்தின் கீழான யாழ்ப்பாணத்தவர் மத்தியில் காணப்பட்ட, அரச விசுவாசம், பிரித்தானியரின் ஆட்சி தமக்குக் கிடைத்தமை வரப்பிரசாதம் என்ற எண்ணம், பிரித்தானிய காலனித்துவ அலுவலர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் சிலாகித்தல் ஆகிய பண்புகளை இவரது பத்திரிகைக் குறிப்புரைகள் காட்டுகின்றன. அவற்றிற்கு உதாரணங்களாகப் பின்வரும் தரவுகளைக் காட்டலாம்.

டில்லி தர்பார் - 'தர்பார் என்பது சமூகமளித்தல்; அல்லது வணக்கஞ் செலுத்துதல் என்னும் பொருள் பொதியப் பெற்ற பார்சிய பாஷைப்பதம். பிரித்தானிய அரசர் நமது வணக்கத்திற்குரிய இராச சக்கரவர்த்தி என்னும் மதிப்பைக்காட்டும்

நோக்கத்திற்காகவே, இந்திய இராச்சியத்தவர் இந்தக் கொண்டாட்டத்தை வழமையாய் நடப்பித்து வருகின்றனர். இந்தியாவிலே தர்பார் முதன் முதலில் லிற்றன் பெருமான் பிரதிகாவலராயிருந்த போது 1877ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது விக்ரோறியா மகாராணியவர்கள், இந்திய சக்கரவர்த்தினியெனக் கூறப்பட்டார்கள்.'' (சு.நா. 18.12.1911)

ஏசன்றரின் சுற்றோட்ட நிருபம் - வட மாகாண ஏசண்டராய் தன்னுயிர் போல் மன்னுயிரோம்பும் சுகுண லட்சணங்களமைந்து, தாரகாகணச் சந்திரனெனத்துலங்கி யாழ்ப்பாணத்தார் மத்தியில் விளங்கும் எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசன்றர் கனம் பிறீமன் துரையவர்கள் யாழ்ப்பாணக் கிருஷிகவிஷயமாய் மணியகாரன்மாருக்கு அறிக்கை செய்திருக்கின்றனர். அதில் யாழ்ப்பாணப் புகையிலயிலதிகம் மலையாளப்பகுதிக்குத் தேவையில்லாதிருப்பதால், இனி யாழ்ப்பாணத்திலே புகையிலையை அதிகமாக உண்டாக்கல் புத்தியல்லவென எச்சரித்து, அந்நிலங்களில் வேறேதும் பலன்தரும் பயிர்களை கமக்காரர் செய்தல் உத்தமமெனக் காட்டியிருக்கின்றனர். என்ன தண்ணளி.! (சு,நா. 18.08.1911).

எனினும் அரசாட்சியாரின் செயற்பாடுகள் சில, மக்களுக்குப் பாதக மானதாக இருப்பதை இவர் தனது பத்திரிகையில் சுட்டிக்காட்டி எழுது வதற்கும் தயங்கவில்லை. க.வே.யின் இயல்பான எள்ளல் கலந்தவகையில் எழுதப்பட்ட பின்வரும் பகுதியை நோக்கலாம்:

'ரயில் வண்டிகளிலே 3ஆம் வகுப்பாருக்கு அமைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளிலே மேற்பலகைகளில் 12 சனங்களுக்கு என்றெழுதிசனங் களதிகப்படும் போது அரசாட்சியார் லாபம் போய்விடுமென்று நெருப்புப் பெட்டிக்குள் குச்சடுக்கிய விதமாய், பெயரப்பிரிய, மூச்சுவிட, வசதி யின்றிச் சனங்களை இழுத்துப் போட்டு அடைத்துவிடுகிறாரென்றும், 1ஆம், 2ஆம். வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை மனுஷரென்றும், 3ஆம் வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை, மரந்தடிகள் அல்லது மிருகங் களென்றும் அரசாட்சியுத்தியோகரெண்ணியிருக்கிறார்களென்றும் ஒருவர் வினவுகிறார்.

றையில் வண்டியில் 1ஆம், 2ஆம் வகுப்பு வண்டியிலேறுகிறவர் களுக்கு மலசலங்கழிக்க இடம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், 3-வது வகுப்பு வண்டியில் ஏறுகிறவர்களுக்கு அப்படியமைக்கப்படவில்லை யென்றும், இவர்களுக்கு அப்படியொன்றை அமைத்துவிடாததால் இவர் களை மலசலமில்லாத மலமுத்தர் என்று அரசாட்சியாரெண்ணியிருக்க வேணுமென்றும் ஒருவர் சொல்ல, அதற்குத்தரமாய் வேறொருவர் ஓ! ஸ்றேசன்கள் ஒவ்வொன்றிலும் புகைரதப் பயணக்காரருக்காயல்லவா கக்கூசுகள் கட்டப்பட்டிருக்கிறது மூன்றாம் வகுப்புக்காரர் அங்கேயிறங்கி யிருக்கலாமேயென்க; முந்தியவர் இவர் கூறியதை மறுத்து மூன்றாம் வகுப்பார் போல் முதலாம் இரண்டாம் வகுப்பாரும் இறங்கி அப்படிக் கக்கூசுகளில் மலசலங்கழிக்கில் இவர்களுக்கு மலசலம் போகாதா? இரண்டு ஸ்றேசனுக்குமிடையில் மூன்றாம் வகுப்பில் இருக்கிறவர் களுக்குக் காத்திராதபடி மலசல வேதையுண்டுபட்டால், அவர்கள் கட்டியிருக்குஞ் சால்வை வேட்டிகளில்கழித்து, வெளியில் வீசுகிறதா என்று பரிகாசம் பண்ணுகிறார்'. (சு.நா.12.07.1909).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தைக் கௌரவமாகக் கருதி யிருந்த, யாழ்ப்பாணத்தவர், பிரித்தானிய கீழ்நிலைப் பதவி வகித்தவர் களையெல்லாம் மதிக்கவும் மரியாதை செய்யவும் உடன்பட்டார்கள் எனக்குறிப்பிட முடியாது. இதற்குப் பலசான்றுகளைக்காண முடியும். க.வே.யும் அத்தகைய ஒரு சம்பவத்தை எழுதிக் கிண்டல் செய்திருப்பதைக் காண முடிகிறது. 'வெள்ளைத்தோலுக்கு (சேர்) பட்டம் வேண்டுமாம்!' என்ற தலைப்பில், எழுதப்பட்டிருந்த சம்பவக்குறிப்பு இதற்குச் சிறந்த உதாரணமாக அமைகிறது. கல்லடியானின் இந்தச் செய்தியில் வெள்ளையர் களின் மேலாதிக்க எண்ணத்தைச் சகிக்க மாட்டாத ஆவேசம் தென்படுகிறது. (சு.நா 1.06.1908).

சுதேச நாட்டியமும் அக்கால சமூகமும்

சமயத்துறையில் நடுநிலை கைக்கொள்ள முற்பட்ட கல்லடியான், சமூக விடயங்களில் ஆக்ரோஷம் மிக்க பார்வையைக் கொண்டவராக விளங்கி யிருந்தார். சமூகம் பற்றிய அவரது கருத்து நிலை சமூக உயர்வகுப்பாரின் போலித்தனங்களுக்கு எதிரானதாகவும், நீதி, நேர்மை, தயவு, தாராண்மை ஆகியவற்றை வலியுறுத்தல் என்பதாகவும் வைதிக சமூக அடிப்படையை வலியுறுத்துவதாகவும் உள்ளது. இதனைச் சற்று விளக்கிக் கூறுவதாயின் யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்த அதிகார அந்தஸ்துப் படிமுறையைத் தொடர்ந்து பேணிவலுப்படுத்துதல் என்ற நிலைப்பாடே அவரின் கருத்தாக இருந்தது. அதிக தாராண்மைவாத கல்விப்பயிற்சி நெறியைப் பெற்றுக் கொள்ளாத க.வே. அக்காலத்தில் ஆங்கிலக்கல்வி பெற்றவர்கள் அறியக் கூடியதாயிருந்த தாராண்மைவாத சிந்தனை அடிப்படைகளான சுதந்திரம், தனிநபர்களாகச்சட்டத்தின் முன் சமத்துவம்பெறுதல், அனைவரையும் சமத்துவமுடையவர்களாகக் கருதுதல் ஆகிய விடயங்களை ஏற்றுக்கொண்ட வராக இருக்கவில்லை. ஆனால் அடிப்படையான இரக்கம், அன்பு, நட்பு, பாசம், விசுவாசம், கடவுள் மீதான பக்தி, மூடநம்பிக்கையாகச் சொல்லப் படும் கனவு, சகுனம், சோதிடத்தில் நம்பிக்கை, சாமுத்திரி காலட்சணங் களை ஏற்றல், ஆகியற்றை ஏற்று முழுதாக நம்புகின்ற போக்கினைக் காண முடியும். அக்கால சமூகத்தைப்பற்றிய அவரது நோக்கு நிலையை பின்வரும் பகுதி நன்றாக விளக்குகின்றது:

'யாழ்ப்பாணத்திலேயுள்ள ஒவ்வொருவரும் தன்னை யோக்கியன் என்றும், உயர்ந்த சாதிக்காரனென்றும் சாமர்த்தியமாய்ப் பேசி வாயடிக் கிறதை நாம் காண்கிறோம். உள்ளபடி நாம் அவர்களின் யோக்கியதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும், சாதியையும் எடுத்து வெளியிடக்கூடுமாயின், அவரை மதித்து, அவர் சுகம் பெறுவார்க்குச் சத்துருவாய் விடுவதுமன்றி, 'மான நட்டம்' என்ற ஓர் வழக்கிலும் எதிரியாகி; எமது பத்திரிகையையும் கெட்ட பத்திரிகையென்று பிறர் நிந்திக்கச் செய்கிறதாய் முடியும். 'பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிற' இவர்களை நாம் முகமனுக்கு' (சு.நா. 15.09.1902).

முதலாவது பத்திரிகைப்பிரதியிலேயே இவ்வாறு வெளிப்படையாகத் தமது கருத்தினை முன்வைக்கின்றார். முன்னர் சுட்டிக்காட்டியது போன்ற புதிய சமூக உருவாக்கத்தின் பண்புகளைப் புலப்படுத்தும் தன்மை கொண்ட வையாகவும் இதனை நாம் விளங்கிக் கொள்ள முடியும். தொடர்ந்து அவர் குறிப்பிடும் பகுதி மேலும் இக்கருத்தை வலியுறுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. இப்புதிய வகுப்பினரில் பெரும்பாலான வர்கள், முன்னேற்றம் பெறுவதற்கு உதவிய பாதையைத்தேடிக் காட்டும் கல்லடியானின் விமர்சனம் எமக்குப் பலவிடயங்களைப் புரிய வைக்கின்றது. பிற்காலத்தில் சிங்களத் தலைவர்கள் கிறிஸ்தவத்தைக் கைவிட்டு, பௌத்த மதத்திற்கு மாறியது (அவர்களை டொனமூர் பௌத்தர்கள் என்பர்) போன்று நம்மவர்களும் ஒரு போது கிறிஸ்தவத்தில் இருந்து, சைவத்திற்கு மாற வேண்டியுள்ளவர்களாக இருந்துள்ளனர் அல்லவா?

'பாதிரிமார், கத்தோலிக்ககுருமார்,... கற்று, அவர்கள் சோற்றையுண்டு, அவர்களிடத்திலே நாகரிகம் பயின்று, அவர்கள் மார்க்கத்திலே சில நாளேனும் நின்று, மோசே, மேவின், உவின்சிலோ, பேசின், மெக்கின்றையர், கிங்ஸ்பரி, காரல், ஐஸ்பரி, நெவின்ஸ், சினேல், பற்றேஷன் என்பது போலும் பெயர்களைத் தரிக்கப்பெற்று, பின் உத்தியோகங்களிலமர்ந்து, பின் பழைய பெயர்களை மாற்றிச் சந்திர சேகரம், விசுவநாதபிள்ளை, சிதம்பரப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை என்பது போலும் பெயர்களைத் தரித்துக்கொண்டு நாங்களே பத்தியுள்ள சைவசமயிகளெண்டிருப்பவரையும், இவர்கள் மக்கள் மருமக்கள், சகோதரர், மாமன்மார், மைத்துனர், பேரன், பீட்டன்மாரையும், ஒக்கலாயுள்ள வரையும் விட, தற்காலத்திலொருவர் இவ்வுரிமையிற் சிறிதுந் தொடாத சைவசமயி, செல்வன், பிரபு என்றிருக்கின்றாரா? அவ்வாறொருவர் இருப்பாராயின் அவரையன்றோ பரம்பரை யோக்கியன், சாதிமான், சைவசமயப்பிரபு, சீர்திருத்தமுள்ளவர் என்பது தகுதியாகும்.' (சு.நா. 15.09.1902).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மட்டுமன்றிச் சமூகத்தில் முதன்மை நிலை பெற எத்தனித்தவர்களின் நன்றிக்குறைவான செய்கையென மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டு வதையும் அவதானிக்கலாம்.

சுதேச நாட்டியம் இரண்டாவதாக வெளியிடப்பட்ட பத்திரிகைப் பிரதியில் 'வேளாளர் சூத்திரரல்ல' என்ற தலைப்பில் கட்டுரையொன்றின் முதற்பகுதி காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதி பற்றிய பிரச்சினை மிக முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. இங்கு பத்திரிகைக்காரர் புதிய கருத்தொன்றை நிறுவ முற்படுவதைக்காணலாம். நால் வர்ணக் கோட்பாட்டின்படி, வேளாளர் சூத்திரர் என்றும் சில வேளை களில் அதனை விசேடித்து சற்சூத்திரர் என்றும் பேசப்பட்டு வந்தது. இப் பொழுது நிகண்டை ஆதாரமாகக் காட்டி வேளாளர் தொழில் அடிப் படையில் வேளாண்மை செய்தமையால் வந்த பெயரென்றும், அவர்கள் தொழில், கடமை ஆகியவற்றின் அடிப்படையில் வைசியர் என்றே கொள்ளப்படக்கூடியவர் என்றும் இப் பத்திரிகை கூறுகிறது.

> 'பிரம, சஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நால்வகை வருணக் கிரமப்படி இந்துக்களை வகுக்கத் தொடங்கியதில் வேளாளரைச்சூத்திரரிற் சேர்த்திருப்பது தகுதிக்குறைவும் நியாய விரோதமுமாக இருக்கிறது.'
>
> 'இந்நாற்பாலாருள் வேளாளர் எனப்படுவோர் எப்பாலாரைச் சேர்ந்தவரென நாம் தீர்மானிக்க வேண்டியது அவசியமென்றே சில தாஷ்டாந்த திருஷ்டாந்தங்களைக் கொண்டு ஈண்டதைச் சாதித்துத் தீர்மானிக்க முயன்றனம்.' (சு.நா.29 பூரட்டாதி 1902)

இக்கருத்துக்களைப் பார்க்கும்போது, சாதிவரையறை பற்றிய பலவகையான கருத்துநிலைகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதையும், அதுவே அக்காலத்தில பிரதான கருப் பொருளாக இருந்தது என்பதை ஊகிக்க முடிகிறது. சாதிபற்றிய விடயத்தில் வேதங்களை அடிப்படையாகக் கொண்ட நால்வருணத்துள் வேளாளரை எங்கே வைப்பது என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. ஆறுமுகநாவலர் போன்றோர் இவர்களை சூத்திரருள் அடக்குவதற்கு உடன்பட்டு அவர்களைச் சிறப்பிக்கும் நோக்கில் சற்சூத்திரர் எனச்சுட்டினர். இங்கு வேளாளரை வைசியராக அடையாளம் காணுகிறார்.

சமூகத்தில் நிலைபெற்றிருந்த அதிகாரப்படிநிலையை ஏற்றுக் கொள்ளும் போக்கினைக் கொண்டதாக க.வே. காணப்பட்டார் என்பதை முன்னரே காட்டியிருந்தோம். 1900 ஆம் ஆண்டுக் காலத்தில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நெருக்கடிகள் யாழ்ப்பாணத்தில் மேலோங்கியிருந்தன. சிறப்பாக பொருளாதார, சமூக அந்தஸ்தில் அடிநிலைப்பட்டிருந்த மக்கள் மேல் மட்டத்தில் இருந்தவர்களுடன் சமநிலைக்கு வருவதற்கான நிலையும், தமக்கு நிராகரிக்கப்பட்டிருந்த பலவிடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தனிப்பதையும் காணலாம். இது, சமூகத்தின் சிலகுறிப்பிட்ட பகுதியினரால் எதிர்க்கப்பட்டது. இதுவரை அரசாங்கம் பின்பற்றி வந்த பழமைபேணும் கொள்கையும் மாற்றம்கொள்ளத் தொடங்கியது. இதனால் சமூக முரண்பாடுகள் வன்முறைக்குச் செல்லும் போக்கைக் கொள்ளும் வகையில் மாற்றமடைந்தது. இவ்வேளையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் சார்பான அணி, எதிரான அணி எனச் சமூகம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணிகளாகப் பிளவு பட்டது. அவ்வேளை யில், ‘தீண்டாமை ஒழிப்பு’ என்ற கருத்தோட்டமும், முனைப்புப் பெறத் தொடங்கியது. அதற்கான வழிமுறைகளாகச், ‘சமாசனம்’, ‘சமபந்தி போசனம்’, ஆலயப்பிரவேசம் ஆகியவிடயங்களும் அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் முயற்சிகளும் இடம் பெற்றன. இதனால் சமூகத்தில் வன்முறைகளும் ஏற்பட்டன. (இக் காலச்சமூகப் பிரச்சினைகள் பற்றிய தனியான ஆய்வு செய்யுமிடத்து பலவிடயங்கள் மேலதிக விளக்கத்திற்கு உதவியாக அமையும்) இவ்வேளையில் க.வே எழுதிய பத்திரிகை விடயங்களும், இவைபற்றிய சர்ச்சைகள் பற்றியனவாக இருந்தன. அவர் இந்தியாவில் இடம்பெற்ற சம்பவங்களை மேற்கோளாகக்காட்டினார். அதில் கவனத்தைப் பெறக்கூடிய ஒரு பகுதியாக பின்வரும் விடயம் காணப்படுகின்றது:

> தீண்டாமை பற்றி டாக்டர் அம்பேட்கார்: ‘தீண்டாதார்களை ஆலயங்களில் அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு அற்ப காரணத்திற்காக காந்திஜி தமது உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய உண்ணாவிரதத்தை மேற்கொள் வது சரியன்று. ஆலயங்களில் பிரவேசித்து விடுவதால் தீண்டாதார்கள் பொருளாதாரத்துறையிலும் சமூகத்துறையிலும் முன்னேற்றமடைந்து விடமாட்டார்கள் என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். ஆகவே ஆலயங்களில் அனுமதிக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் எந்த முயற்சிகளும் தீண்டாதார்களின் சீர்திருத்த மார்க்கங்களில் சம்பந்தப் பட்டவையல்ல.இதர சமூகத்துறைகளில் சாதிஹிந்துக்களுடன் தங்களுக்குச் சம உரிமைகள் கொடுக்கப்பட்டு விட்டால் தீண்டாதார்கள் தங்களை ஆலயங்களில் அனுமதிக்கவேண்டும் என்பதைக்கூட விட்டுவிடுவார்கள். ஆதலால் தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் காந்திஜியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது காங்கிரஸ் சகாக்களும் இதர முக்கியமான துறைகளில் தீண்டா தார்கள் சாதி ஹிந்துக்களைப்போல் சம உரிமைகள் பெறும் பொருட்டு உழைக்கவேண்டியதவசியமாகும்.' (சு.நா. 16.11.1932).

சமூகம் சார்ந்த விடயங்களில் க.வே. சமூக சமத்துவத்தை விரும்பியவராக இருந்தார் எனக் கூற முடியாது. ஆனால் மறைமலையடிகளின் சிந்தனை களின் தாக்கம் இவரது மனதில் செல்வாக்குச் செலுத்தியதா என்பதையும் உறுதியாகக் குறிப்பிட முடியாதுள்ளது.

சமூகத்தின் முக்கிய பகுதியினரான, பெண்கள் பற்றிய இக்காலப் பத்திரிகைகளின் கண்ணோட்டமும், க.வே. யின் கண்ணோட்டமும் ஏறக் குறைய ஒரே தன்மைத்தானவையே. பெண்களின் கல்வியை ஏற்றுக் கொள்கின்ற அதே வேளையில், குடும்பப் பெண்கள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்ற வரையறையில் சில கருத்துக்களை வைத்திருந்து, அந்தச் சட்டகத்தின் வழியே பெண்களைப்பார்க்கும் போக்கு அதிகம் இடம் பெறுவதைக் காணலாம். இவர் எழுதிய பின்வரும் பகுதியைப் பார்க்கின் அது தெள்ளிதிற் புலப்படும்:

குணமற்ற மனையாள்: அன்னை தந்தையரில்லாதாள், கிளையில்லாதாள், திருவில்லாதாள், குடிப்பிறவாதாள், நேர்மையற்ற பெற்றாரிடம் பிறந்தவள், நோய்க்காரி, ஊமை, செவிடு, முடத்தி, பிறர் வீடு செல்பவள், கணிகையர் மேற்பார்ப்பவள், ஆடவரைக்காணுமாசையாற் கடைத்தலைசெல்பவள், அலங்காரத்திற்பிரீதியுள்ளவள், கடைக்கண்காரி, சிறுகண்காரி, நெடுமூக்கி, ஓயாமலுண்பவள், நித்திரைக்காரி, வயதிற்கு மூத்தவள், நெடுமி, குறளி, அதிகம் பெருத்தவள், மிக மெலிந்தவள், பொன்போலுங்காயத்தாள், கருநிறத்தாள், பசப்பினள், வெளுப்பினள், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பில்லாதாள், நரைமயிரி, மிகுந்த பலசாலி, பெற்றோர் அணை கடப்பவள், சினத்தி, அன்ன நடையில்லாள், விரநிலத் திற்படர்ந்தாள், கூத்துப்பிரியை, தெய்வபயமில்லாள், குருவையிகழ்பவள், உயிர் நேசமிலாள், இடிபோல விலங்கு போல உரத்துப்பேசுபவள், பெற்றவர் குறிக்கமுன் ஒருவர் பால் மனப்பற்று வைப்பவள், மறுவுள்ள முகத் தினள், கூசுகண்ணினள், சாய்ந்த பார்வைக்காரி, பூனைக்கண்ணாள், செங்கண்ணாள், செம்மயிரி, நிலம்படுகைசத்தினள், குறுஞ்செவியினள், உயர்ந்த பல்லினள், வாய்,நகம், கை, உள்ளடிசில்லாதவள், இடை சிறிதாயிராதவள், சீறுபீறான குணக்காரி, தன்வீடுவிட்டு அடிக்கடி தாய் வீடும், அயல்வீடும் நோக்கித்திரியும் தொழிற்காரி, இப்பெயர்ப்பட்டார் இல்வாழ்க்கைக்கு தகாதவராம். (சு.நா.11.03.1907).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுமொரு முக்கியமான விடயம், யாழ்ப்பாண சமூகத்தில் பயிலப்பட்டு வருவதும், இவருடைய பத்திரிகைகளில் கையாளப்பட்டிருப்பதுமாக அமைவது, பெண்கள் தமது மக்கள், கணவன் ஆகியோர் செய்யும் குற்றங்களுக்கு, அல்லது, தம்முடன் சம்பந்தமில்லாத இடங்களிலெல்லாம் பழிப்பிற்கும், தூஷனைக்கும் உட்படுத்தப்படுவதாகும். உதாரணமாக ஒருவன் செய்யும் பாவ காரியத்தைத் தூஷிக்கும் போது 'இவள் மகன்' என தாய் தூஷனைக்கு உட்படுத்தப்படுவதாகும். இங்கு தாயைப் பழிப்பது ஒரு மகனை வளர்ப்பதில் தாயின் பங்கே உண்மையானது என்பது பெறப் படுமெனக்கூறினும், தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவு நெருக்கத்தைப் பயன்படுத்தி சமூக அங்கத்தவர் ஒருவரைக் கட்டுப்படுத்தல் சாத்தியமாக இருந்திருக்கும் என வாதிட முடியமெனக் கூறினும், பெண்கள் என்ற வகையில் சம்பந்தப்படாத விடயத்தில் பழிப்பிற்கு ஆட்படுத்தப்படல் நியாயமற்ற செய்கையாகவே உள்ளது. இத்தகைய அஸ்திரப்பிரயோகம் யாரும் பயன்படுத்தக் கூடியது என்பதும் கவனிக்கப்படுவதில்லை. ஏனெனில் எல்லோருக்கும் தாய்மார் உளரல்லவா?. இத்தகைய அஸ்திரத்தை க.வே. பல இடங்களில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இதற்கு இவ்ஆசிரியர் ஆதாரம் காட்டப் போவதில்லை. விரும்பியோர் அவரது பத்திரிகைகளைப் பார்க்கலாம்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கலை பொழுதுபோக்கு நடவடிக்கைகள் பற்றிய க.வே.யின் கண்ணோட்டமும் தகவல்களும்

யாழ்ப்பாணத்தின் கலைப் பாரம்பரியம் பொழுது போக்குகள் பற்றிய செய்திகள் மிகவும் முக்கியமானவையாகவும் வியப்பிற்குரியவையாகவும் உள்ளன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கலைப்படைப்புக்களுள் சிலவற்றைப் பற்றியும், கலைஞர் ஒருவரைப்பற்றியும் கிடைத்துள்ள விடயம் ஆர்வமூட்டுவதாயுள்ளது. அச்செய்திகள் சிறு துணுக்குகளாக இருப்பதால் அவற்றை முழுமையாகப் பதிவது சிறந்ததாக அமையும்.

> கோண்டாவில் மகா ஆ. துரைசாமி - யாழ்ப்பாணத்தில் கைச்சித்திர வேலையில் அதிக நிபுணரென்று உயர்தரப் பிரபுக்கள், துரைமக்களால் மிக விதந்து பாராட்டப்பட்ட மேற்படி துரைச்சாமி யென்பவர் தமது கைச்சித்திரத்தின் சாமர்த்தியத்தைக் காட்டுமாறு மிகப் பிரமிக்கத் தக்க பொம்மைகளைச் செய்து நடன சபா கொண்டாட நியமித்திருக்கிறார். இவர் வேலையைக் கண்ணுற்றார் பிரமியாது போகார். இவர் முயற்சிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக பிரபுக்கள் விவேகிகள் உதவி செய்து இவரைத் தளர்ச்சியடையாது உற்சாகப்படுத்துவார்களென்று நம்புகிறோம். (சு.நா.23.01.1905)

பிரதிமைச் சுப்பிறீங்கோடு - கோண்டாவில் ஸ்ரீ.மு. துரைச்சாமிப் பிள்ளை யென்னும் சித்திர வேலைக்காரரால் வரும் ஆவணி மீ தமிழுக்கு 7உ துவங்கி எட்டு நாள் வரையும் நடத்தப்படும். இதில் நீதவான், நியாய துரந்தரர், வழக்காளிகள், எதிரிகள், சாட்சிக்காரர்கள், தலைமைக் காரர் ஆதிய ஏனையோரும், பதுமைகளாலேயே நடத்துவிக்கப்படும். இது நம்யாழ்ப்பாணத்தில் எப்போதாவது கண்டிராநூதனமும் வேடிக்கையு மாயிருக்குமென்பது எம் சித்தாந்தம். நம் நண்பராகிய பார்த்து அதன் அருமைக்குப் பெறுபேறாய் ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து, தம்மையும் தம்முயற்சியையும் ஊக்கப்படுத்தி விடுங்கள் என்பதே. (சு.நா.30.07.1906)

இச்சித்திரக்கலைஞர் ஆக்கிய மேலும் சில படைப்புக்கள் பற்றிய செய்தியில், 'யாழ்ப்பாணத்தில் இருந்த செட்டிக்கடை வீதியில், காங்கேசன்றுறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகம், ஊர்காவற்றுறைத் துறைமுகம், அலுப்பாந்தி, மண்டைதீவு ஆகியவற்றைச் சித்திரமாகத் தீட்டியிருந்தார்' எனக்குறிப்பிட்டுள்ளார். இவற்றை யாழ்ப்பாண ஏசன்ரர் பார்த்துப் பாராட்டினார் எனவும், செட்டிமார்கள் இவற்றுக்குப்பரிசாக தங்கத்தினால் செய்யப்பட்ட பலமோதிரங்களை வழங்கியிருந்தனர் எனவும் கூறியுள்ளார். இவை வெகு வினோதமான சித்திரங்களாக இருந்தன என்பது அவரின் அபிப்பிராயமாகவும் அமைந்திருந்தது.

சிறந்த கலைப்படைப்புக்களில் ஆர்வம் கொண்ட க.வே. அக்காலத்தில் கொழும்பில் யாழ்ப்பாணத்தவரால் நடத்தப்பட்ட நாடக நிகழ்வுகள் பற்றி மிகவும் கடுமையாகவும், ஏளனமாகவும், வாசகர்களை எச்சரிக்கும் வகையிலும் குறிப்பிட்டுள்ளார்.

நாடகக் கொம்பனி: 'கொழும்பிலே மெஸ். இராசநாயகம்பிள்ளை அவர்களால் நடப்பிக்கப்படும் டிறாமா பிறைஸ் பார்க்கிலும் மெஸ். செல்லையாபிள்ளை டிறாமா பூந்தோட்டத்திலும், மிக முழக்கமாய் நடைபெற்று வருகிறது. இவ்விரு பாலாரும் இந்தியாவில் இழிபட்டுச் சுழிகெட்டு அழிபட்டுக்கழிபட்ட கூத்தாடிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு 'விளக்குமாற்றுக்கு வெள்ளிக் குஞ்சம் கட்டினாற் போல'த் தகாத வர்ணப் பெயர்களைச் சூட்டி றவாமணி, சிந்தாமணி, பாலாமணி, தேனாமணி, இராசாமணி, புஷ்பகாந்தி, அம்பாள், துரைக்கண்ணு, கமலாம்பாள், ரெத்தினாம்பாள், தொட்டார்பாள், என்னும் நாமங்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி மகிழ்ந்து கொண்டாடி மாசாந்தம் ஒவ்வொருவருக்கு இருநூறு, முன்னூறு ரூபா சம்பளம் கொடுத்து வருகின்றனர். முன்னொரு முறை கொழும்பிலுள்ள நமது நேசரில் அநேகரை குருடு செவிடாக்கி அனேகரை எமலோகத்துக்கனுப்பி அன்பீர்! சண்முக சுந்தரம் செய்த சாமர்த்தியத்தை யோசித்துப் பாருங்கள். ...' (சு.நா. 9.1.1903)

யாழ்ப்பாணத்தில் காலத்திற்குக்காலம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்களும் வந்து தமது நிகழ்ச்சிகளைக்காட்டிப் பணம் சம்பாதித்துச் சென்றுள்ளனர். அந்த வகையில் 1907இலும் வந்த சர்க்கஸ் கொம்பனியினர் வந்து வரவேற்பின்மை காரணமாக திரும்பிச்சென்றனர். இந்நிகழ்ச்சிகள் முற்றவெளியில் நடத்தப்பட்டிருந்தன என்பதையும் அறிய முடிகிறது. இது பற்றி க.வே. பின்வருமாறு எழுதியிருந்தார்:

உவாறன் சர்க்கஸ் கொம்பனி: இக்கம்பனியார் முன்போலென்றெண்ணி யாழ்ப்பாணம் வந்து முற்றவெளியில் இரண்டு மூன்று நாள் விளையாட்டு நடத்தியும் தக்க பலனின்மையால் திரும்பிப் போயினர். உணவுக்கு வழியற்றிருக்குமிக்காலத்திலும் நம் பணத்தை வாரிப் போக வந்தார்கள். அவ்வளவிற்றொலைந்தது சந்தோஷம். (சு.நா.11.03.1907)

இதே போன்ற சர்க்கஸ் நிகழ்ச்சியொன்று 1911 ஆம் ஆண்டும் இடம் பெற்றது. முற்ற வெளியில் நடந்த இந்தச் சர்க்கஸ் நிகழ்ச்சி தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்றது. இதனால் பெருமளவு பணம் அவர்களுக்கு வருவாயாகக் கிடைத்தது. இதனைப் பொறுக்காத க.வே., 'சறுக்கீசு ஆட்டமும், உறுப்பீசு ஓட்டமும்' எனத் தலைப்பிட்டு எழுதிய பத்திரிகைக் கட்டுரையில், பணம் இவ்வாறு விரயமாகிறதெனவும், யாழ்ப்பாணத்தில் நிலவும் பணக்கஷ்டத்தின் மத்தியில் இது அவசியமற்றது எனவும் குறிப் பிட்டிருந்தார். (சு.நா. 20.03.1911)

இவை யாழ்ப்பாணத்தவரின் பணம், விரயமாக்கப்பட்டு வெளியே செல்லக்கூடாது என்ற எண்ணத்தையும், உள்ளூரில் வேண்டிய விடயங் களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஆசிரியரின் விருப்பினையும் காட்டுவதாக அமைகிறது.

நாளாந்த சமய வாழ்வும் க.வே.யும் சுதேச நாட்டியம் பத்திரிகையும்

சுதேச நாட்டியம் பத்திரிகை சமயங்களைப் பொறுத்தவரையில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்த அதே வேளையில் மக்களின் சமயவாழ்வு பற்றிய விடயங்களிலும் சர்ச்சைகளிலும், தமது கருத்தைப் பொது நிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட நின்று கூறியிருந்தது. நல்லூர் கந்தசுவாமி கோயிலில் பலியிடும் வழக்கம் பற்றிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, அது பின்னர் வழக்கு என்ற நிலைக்குச்சென்ற போது, சுதேச நாடடியத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

> மானநட்ட வழக்கு: 'நல்லூர்க் கந்த சுவாமி கோயில் ஆடு வெட்டப்படும் கோவில் என்றும், அதினாலக்கோவிலைக்கும்பிடுவது தோஷமென்றும் அதிற்செய்யப்பட்ட கும்பாபிஷேகம் தவறென்றும், கும்பாபிஷேகத்தில் குருதெட்சணையாகப் பெற்ற தொகை என்ன என்றும் கனம். த. கைலாச பிள்ளை என்பவரால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு துண்டுப்பத்திரத்தை மறுத்துக் கோயிலதிகாரிகளோ யாரோ ஒரு கண்டனமெழுதி வெளிப் படுத்தினர். அக்கண்டனம் பரிகாச வசனங்களாலும், அபவாதங்களாலும் மேற்படி கயிலாசபிள்ளையைத் தாக்கியிருப்பதாயும், அப்பத்திரத்தைக் கோப்பாய் ஸ்ரீ வைரவநாதக் குருக்கள் பரப்பிவிட்டதாயும் அவ்வாறு பரப்பியதால் குருக்கள் தம்மை சங்கையீனஞ் செய்ய முயன்றாரென்றும் குருக்கள் மேற்பிள்ளை மானநட்டவழக்கொன்று தொடுத்தனர். சட்ட முணர்ந்த விவேகிகளும் யோக்கியருமிருந்தால் வழக்கொன்று தொடுப்பது அருமையான காரியமல்ல. சாத்திரந்தெரிந்து பூசிப்பார் சிலர். தெரியாது பண்டை வழக்கத்தைக் கொண்டு பூசிப்பார் பலர்.' (சு.நா. 29.09.1902)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக ஆலயங்கள் நிர்மானம் செய்வது பற்றி விசனத்துடன், 'ஊர் தோறுங் கோடா கோடி கோயில்கள் திருப்பணிக்குறை உடையனவாயே இருக்க, மேலும் புதுக்கோயில்கள் கட்டுகிற இந்நாட்டுப் புண்ணிய புருஷர் விவேகம் உங்களிடத்தும் அடுத்ததா?' என ஆதங்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். (சு.நா 12.09.1904)

முடிவுரை

பத்திரிகை என்பது ஒரு வலுவான ஊடகம். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பத்திரிகைச்சாதனம், ஏற்படுத்திய தாக்கம் அதிகம். பத்தொன் பதாம் நூற்றாண்டிலேயே ஐரோப்பாவிலும் பத்திரிகைகள் மேலோங்கும் நிலை ஏற்பட்டது. 1910 ஆம் ஆண்டளவிலேயே அங்கும், பத்திரிகை அதன் சகல லட்சணங்களையும் கொண்ட முழுமை நிலையை அடைந்தது. பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் ஐரோப்பிய, அமெரிக்க மிஷனரிமார்களின் மத மாற்ற நடவடிக்கைகளின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட அச்சுக் கலையும், பத்திரிகைத்துறையும் மிக விரைவிலேயே, இப்பகுதிகளில் வளர்ச்சி பெறும் நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கில,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஆங்கில- தமிழ்ப் பத்திரிகைகள் மத நோக்கில் ஆரம்பிக்கப் பட்டாலும், சுதேசமொழி அல்லது பிரதேசமொழிப்பத்திரிகைகள் ஆரம்பிக் கப்பட்டு வளர்ச்சியடைவதைக் காணமுடிகிறது.

அந்த வகையில் சுதேச மொழிப் பத்திரிகைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும், இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கட்கூட்டத்தினரின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியில் அளப்பெரும் முக்கியத்துவம் கொண்டவையாக அமைந்திருந்தன.

எமது இன்றைய நிலையில் இப்பத்திரிகைகளின் உருவாக்கம் வளர்ச்சி பற்றிய அறிவு, அறிவுப் பெருக்கத்திற்கு உதவுவதாக உள்ளது. இதற்கும் மேலாக இக்கால கட்ட வரலாற்றை அறிய விரும்பும் ஒருவருக்கு, வரலாற்றை அறிய உதவும் கூடியளவு நம்பகத் தன்மை கொண்ட வரலாற்றாதாரமாகவும் அமைகின்றது. மேலைநாட்டு இராஜதந்திர அறிவு கொண்ட அரசஅலுவலர்களாலும், ஆய்வாளர்களாலும், எழுதப்பட்ட அறிக்கைகளிலும், நூல்களிலும், ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினரால் எழுதப்பட்ட பத்திரிகைகளிலும் நூல்களிலும் கிடைக்கும் தகவல்களையும், தரவுகளையும் விடச் சிறந்த, நம்பகமான வரலாற்றுத் தகவல்களை இப்பத்திரிகைகள் வாயிலாகப் பெற முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், பிரித்தானிய காலனித்துவம் சமயத்தின் வழி விசுவாசமான பிரஜைகளைப் பெறலாம் என்ற கருத்தைக் கைவிட்டு, 'மக்களின் இயல்பான உணர்வுகளை வளரவிடுவதும், பொதுவான நல்லொழுக்கங்களைப் பின்பற்றச் செய்வதும் போதுமானது' என்ற எண்ணம் காணப்பட்டது. அதன் வழி தாமாகவே தமக்கான தேவை களையும், பாதையையும் வகுத்துக் கொள்ளட்டும் என அனுமதித்தமையே, சுதேசிகள் தத்தம் மொழி சார்ந்த பத்திரிகைகளை வெளியிடுவதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. இதனால் தான் சுதேச மொழிப் பத்திரிகைகள் வளர்ச்சி பெற முடிந்தது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் உதயம் பெற்ற 'சுதேச நாட்டியம்' பத்திரிகை அதன் பத்திராதிபரான கல்லடி வேலனின் தளராத மன உறுதியினாலும், பத்திரிகை ஊடகம் பற்றி அவர் பெற்றிருந்த விளக்கத் தின் அடிப்படையிலும், 45 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவரக் கூடியதாக இருந்தது. அவர் யாழ்ப்பாண சமூகத்திற்காக எழுதிய பத்திரிகை களில் சில விடயங்கள் மாற வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவராகவும், சில விடயங்களை மாற்றமடையாமல் வைத்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதில் கடும் போக்கினைக் கொண்டவராகவும் காணப் படுகின்றார். இது அவரதும், அவர் பத்திரிகையை ஆதரித்தவர்களினதும் மனப்பாங்கினைக் காட்டுவதாகவே கொள்ளலாம். இப்பத்திரிகை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட யாழ்ப்பாணம் பற்றியும், யாழ்ப்பாண மக்கள் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு தரவுகளைத் தருவதாயுள்ளது.

அடிக்குறிப்பு

1. எனது ஆசிரியராகவும், எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத்தவராகவும் இருந்து, அமரத்துவம் அடைந்த திரு. ஏ.ஜே. கனகரத்தினா அவர்களின் நினைவுரையினை உங்கள் முன் நிகழ்த்துவதில், நான் பெரும் பாக்கியம் பெற்றிருப்பதாக உணர்கின்றேன்.

ஏ.ஜே. கனகரத்தினா அவர்கள், ஆங்கிலம் அரச கரும மொழியாகக் கொலுவிருந்த காலத்தில், ஆங்கில மொழி வீட்டு மொழியாகப் பேசப்பட்ட சூழலில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்பு சென். ஜோசப் கல்லூரி ஆகியவற்றில் பயின்றவர்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாகப் பயின்று பட்டம் பெற்ற பின்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, திருக்கோவில் தம்பிலுவில் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில், ஆங்கிலம் உட்பட ஏனைய கலைப்பாடங்களையும் கற்பித்தவர். யாழ்ப்பாண வளாகம் (பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டது) ஆரம்பித்த காலம் முதல் இளைப்பாறும்வரை, ஆங்கிலப் போதனாசிரியராகக் கடமையாற்றியவர். தொழில் ரீதியாக ஆசிரியராக இருந்தாலும், இவரது ஆளுமை பல்வகைப்பட்டது.

ஆரம்பத்தில் *Ceylon Daily News, Co-operator* ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவிலும், பின்னர் *Saturday Review* ஆசிரியர் குழுவிலும் பணிபுரிந்தவர். ஆங்கில மொழி, இலக்கியம், விமர்சனம் ஆகிய விடயங்களில் மிகுந்த ஆளுமைமிக்கவராக இருந்த ஏ.ஜே., தமிழ் இலக்கியம், தமிழ்ப்பத்திரிகை, தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் போன்ற துறைகளில், கனதியான பங்களிப்பும் செய்தவர். தமிழ் மீது அபிமானம் கொள்வதற்கு அடித்தளமாக, 1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 'தனிச்சிங்களச் சட்டம்' அமைந்தது. தனது முதலாவது வெளியீடான 'மத்து' என்ற நூலை ஏ.ஜே. 'தனிச்சிங்களச் சட்டத்திற்கே' சமர்ப்பணம் செய்திருந்தார்.

தன்னை எப்போதும் முன்னிறுத்தாத முதிர்ச்சியைக் கொண்ட ஏ.ஜே., இலங்கையின் சமகால ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவராகவும், பங்களிப்புச் செய்தவராகவும் இருந்து வந்துள்ளார். இவரது பத்திரிகை வாழ்வில் அறியப்பட்ட செய்திகளை விட அறியப்படாத செய்திகளும் பல உண்டு. இளம்பிறை, ஐக்கிய தீபம், மல்லிகை, அலை, திசை போன்ற தமிழ்ச் சஞ்சிகைகளில் ஏ.ஜே.யின் பங்கு இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகூரத்தக்கது. எந்த முகஸ்துதிக்கும் சோரம் போகாது, தான் சொல்ல நினைத்ததைச் சொல்லும் வல்லமையும், உறுதியும் உடையவர். ஒரு ஆசிரியராகப் பணியாற்றினாலும், பத்திரிகைத்துறையே அவருக்கு விருப்பமான துறையாக இருந்தது. அவர் எப்பொழுதும் தன்னைப்பற்றிக் கூறும் பொழுது, 'முதலில் நான் ஒரு பத்திரிகையாளன்' என்றே கூறுவார்.

சிறந்த புலமையாளராகவும், இலக்கியவாதியாகவும், இலக்கிய விமர்சகராகவும் இருந்து வந்தபொழுதும், பத்திரிகையாளன் எனத் தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதில் அதிக விருப்புக் கொண்ட ஏ.ஜேயின் நினைவுரை, பத்திரிகை சார்ந்ததாக இருப்பது நன்றெனக்கருதியதால், அத்தகைய ஒரு தலைப்பினைத் தெரிவு செய்ய வேண்டியதாயிற்று. யாழ்ப்பாணத்தில் 1902ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிடப்பட்டு வந்திருந்ததும், இதுவரை எவராலும் ஆய்வு செய்யப்படாததுமான பிரபல தமிழ்ப்பத்திரிகை ஒன்றின் ஆரம்பகட்டம் பற்றியதாகவே இவ்வுரை அமைகிறது.

உசாத்துணை

தமிழ் - ஆங்கிலம் நூல்கள், கட்டுரைகள்

இராசநாயகம், முதலியார் செ., (1934), ***யாழ்ப்பாணச் சரித்திரம் - ஆங்கிலேயர் காலம்,*** சிலோன் ஐலன்ட் அச்சியந்திர சாலை, கொழும்பு.

சிவநேசச்செல்வன், ஆ., 1977, 'இலங்கைத் தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் - சிலகுறிப்புகள்', ***நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்,*** அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, கொழும்பு, பக். 345-347.

மறைமலையடிகள், 1957, ***வேளாளர் நாகரிகம்*** 3ஆம் பதிப்பு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை. (1ஆம் பதிப்பு1923, தலைப்பு: ***தமிழர் நாகரிகம் அல்லது வேளாளர் யாவர்?,*** 2ஆம்பதிப்பு 1927, தலைப்பு: ***வேளாளர் நாகரிகம்***).

விஜயேந்திரன், 1973, ***ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை,*** நயினார் பிரசுரம், மாவிட்டபுரம் (இலங்கை).

விஜயேந்திரன் சிலோன், 1978, ***ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை,*** காந்தளகம், சென்னை.

வேலுப்பிள்ளை, க., 1918, ***யாழ்ப்பாண வைபவ கௌமுதி,*** ஜயஸ்ரீ சாரதா அச்சியந்திர சாலை, வசாவிளான், யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை, சி.டி., 1984, ***அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்,*** (முதற் பதிப்பு 1922), யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

ஜெயசீலன், சுவாமி, ஜே.இ., 1997, ***யாழ். திருச்சபை வரலாறு,*** வளன் அச்சகம், யாழ்ப்பாணம்.

Digby, William, *Native News Papers in India,* 1875, (other details are not available).

Kathiresu, S., 1905, *Hand Book of the Jaffna Peninsula,* Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Martin, John H., 1923, *Notes on Jaffna*, Tellipalai, p.194.

Priolkar, Anat Kakna, 1958, *The Printing Press in India*. Its Beginning and Early Development, Marathi Samshodhana Mandala, Bombay 2.

பத்திரிகைகள்

1. **குரு சந்திரோதயம்,** புத். 4, இல.2, 25.05.1911
2. **இந்து பால போதினி,** புத்.3, இல.?, 25.01.1910
3. **விஜயலட்சுமி,** 10.05.1910.
4. **சுதேசநாட்டியம்** (கிடைத்த பத்திரிகைகள்)

சு. நாட்டியம் புத்.1, சங்கியை 1 - 15.09.1902
சு. நாட்டியம் புத்.1, சங்கியை 2 - 29.09.1902
சு. நாட்டியம் புத்.1, சங்கியை 9 - 05.01.1903
சு. நாட்டியம் புத்.2, சங்கியை 2 - 28.09.1903
சு. நாட்டியம் புத்.2, சங்கியை 7 - 21.12.1903
சு. நாட்டியம் புத்.2, சங்கியை 14 - 30.05.1904
சு. நாட்டியம் புத்.2, சங்கியை 19 - 08.08.1904
சு. நாட்டியம் புத். 3 சங்கியை 9 - 23.01.1905
சு. நாட்டியம் புத். 5 சங்கியை 10 - 11.03.1907
சு. நாட்டியம் புத். 6 சங்கியை 15 - 01.06.1908
சு. நாட்டியம் புத். 7 சங்கியை 16 - 07.06.1909
சு. நாட்டியம் புத். 7 சங்கியை 18 - 12.07.1909
சு. நாட்டியம் புத்.8, சங்கியை 18 - 27.06.1910
சு. நாட்டியம் புத்.8, சங்கியை 20 - 08.08.1910
சு. நாட்டியம் புத்.10, சங்கியை 8 - 18.12.1911
சு. நாட்டியம் மலர் 31, இதழ் 4 - 16.11.1932
சு. நாட்டியம் மலர் 33, இதழ் 7 - 31.01.1935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் (1900-1915)

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

வடஇலங்கையின் ஆரம்பகாலப் பத்திரிகைகள் பற்றிய ஆய்வாக இருந்த போதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக பொருளாதார கலாசார நிலைமைகளை எடுத்துக்காட்டும் ஆய்வாக எந்த நூலிலும் காணமுடியாத வரலாற்றுத் தகவல்களைத் தரும் நூலாக இது அமைந்துள்ளது. அந்த வகையில் கிடைத்தற்கரிய பழைய பத்திரிகைகளைத் தேடிப் பெற்று அவற்றைப் பயன்படுத்தி. வரலாற்று மூலாதாரங்களை முன்னிலைப்படுத்தும் திருமதி சோ. கிருஷ்ணகுமாரின் முயற்சி பாராட் டத்தக்கது வரலாற்று மூலாதாரங்களாக இப்பத்திரிகைகளைப் பயன்படுத்தி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட சமூக பொருளாதார கலாசார நிலைமைகளை எடுத்துக்காட்டியிருப்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

- பேராசிரியர்ச. சத்தியசீலன்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் 1981 தொடக்கம் முதலில் விரிவுரையாளராகவும் அதனை தொடர்ந்து சிரேஷ்ட விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் பணிபுரிந்து வருகிறார். 1980களில் உருவாக்கப்பட்ட பெண்கள் ஆய்வு வட்டத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர். இவர் பெண்ணிய சிந்தனைகள், சமூக வரலாறு பற்றிய விடயங்களில் ஆர்வமுடையவர். 'சைவித்திய விருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலச் செயற்பாடுகள்: சில அவதானிப்புகள்' (2004) இவரது அண்மைய வெளியீடாகும்.

குமரன் புத்தக இல்லம்

விடயம்: வரலாறு / பத்திரிகையியல் / தமிழ் இலக்கியம்

ISBN 978-955-659-509-3

9 789556 595093

Price Rs. 400.00

#697

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org